கலியாண விசேஷங்களுக்கும்,
திருவிழா விசேஷ நாட்களிலும் அணியத் தகுந்த

எங்கள்

"போட்டோ மார்க்"

சேலைகள்

கெட்டியான சாயத்திற்கும்
உறுதியான உழைப்பிற்கும்
கியாரண்டி தரக்கூடியது

தயாரிப்பவர்கள் :

ஸ்ரீ சாரதா அண் கோ.,

நடேசர் சன்னதி, பழனி.

ஏஜண்டுகள் :

1. ஸ்ரீ முருகன் அண் கோ, மால் 2-வது தெரு, மதுரை
2. M/s பால முருகன் கம்பெனி, மால் 5, ஹனுமார் கோவில் தெரு, மதுரை
3. M/s R. M. H. S. மூர்த்தி கம்பெனி, லக்ஷிமிபுரம் குறுக்குத் தெரு மதுரை
4. ஸ்ரீ பால முருகன் அண் கோ, 166, தெற்கு மாசி வீதி, மதுரை
5. M/s M. S. T. சுப்பய்யர் அண் சன்ஸ், 119 சந்தை ரோடு, நாகல்நகர், திண்டுக்கல்
6. கஸ்தூரி ரெங்கய்யர், நாகையர் அண் கோ, ஸௌராஷ்டிர தெரு, வத்தலகுண்டு
7. ஸ்ரீ சுப்ரமணியம் கம்பெனி, சேலம் அண்டு N. A. Dt.
8. M. R. சுப்பையா செட்டியார் ஜவுளி, வியாபாரம், 150, ராஜாமில்ரோடு, பொள்ளாச்சி

(N. B.) *40, 60, 80 நெ. ஜவுளி தினுசுகளுக்கும்,*
பிரிண்டெட் வாயல் சேலை தினுசுகளும்,

சரஸ்வதி வீவிங் கம்பெனி

நாகல் நகர், திண்டுக்கல்

32, லக்ஷிமிபுரம் 3-வது தெரு, மதுரை

கவிதை யுலகில் ஓர் ஜோதி!

'யாழ்ப்பாணன்' புனைந்துள்ள

'மாலைக்கு மாலை'

முதலிய கவிதைகள்

மொழி, வாழ்த்து, காட்சிகள் நீதி, பாலர்கீதம், கண்ணன், இதயத் துடிப்பு என்னும் பிரிவுகளில் 55 கவிதைகள் கொண்ட முதலாங் கவிதைத் தொகுதி. நாமக்கல் கவிஞரின் முன்னுரை கொண்டுள்ளது.

புதுமணத் தம்பதிகளுக்குச்
சிறந்த திருமணப் பரிசு.

பிரதி விலை ரூ. 2-8-0

பிரசுரம்:

இந்தியாவில்	இலங்கையில்
சக்தி காரியாலயம்	வட லங்கா புத்தக சாலை
சென்னை-14	பருத்தித்துறை

பொருள் அடக்கம்

தொகுதி 2 : பகுதி 10

○

கிராம சேவை	...	தலையங்கம்	5
பெண்மணிகளுக்கு	...	காந்தியடிகள்	7
பெண் உலகம்	...	தாமாம்பாள்	11
கான்ஸர் ஆஸ்பத்திரி	...	டாக்டர் ரெட்டி	14
சகோதரிகளின் சந்தேகங்கள்	...		15
கவர்ச்சி	...	குஞ்சலம்	17
வள்ளியும் வேடனும்	...	மீனாக்ஷி	19
மாப்பிள்ளை முறுக்கு	...	குமாரி சியாமளா	25
தாத்தாவின் கடிதம்	...		27
அறுசுவை	...	ருக்கு	28
அம்பர உலகம்	...	மிஸ் ராமன்	30
அழகுக்குறிப்பு	...	திலோத்தமா	33
தெரிந்து கொள்ளுங்கள்	...	அன்னபூரணி	35
அன்பின் வண்ணம்	...	திருப்புகழ் மணி	36
தாய் உள்ளம்	...	ராஜம் ராமமூர்த்தி	38
விளையாட்டுப் பிள்ளை	...	வை. செல்லம்மாள்	47
இறுதிக் கோரிக்கை	...	ஜெயஸ்ரீ	53
அபராதி	...	கல்பனா	59
வீரத்தாய்	...	வித்வான் பாலாம்பிகை	67
காணி நிலம்	...	ய. லக்ஷ்மிநாராயணன்	72
வழி பிறந்தது	...	வி. சுலோசனா	76
அதிசயப் பிறவி	...	மங்களாத்ரிமணி	79

✱

1948 ஜூலை, ஆகஸ்டு

சக்தி

இரண்டு மடங்கு

★

மங்கை அடுத்த இதழ் இரண்டு மடங்கு பெரியதாக வரப்போகிறது. உருவத்தில். உருவத்தில் இரண்டு மடங்கு. விஷயத்தில் என்ன என்று கேட்கிறீர்கள்? புதிய புதிய விஷயங்கள். அருமையான விஷயங்கள். புரட்சிகரமான விஷயங்கள். அது மட்டுமல்ல. அழகான படங்களும், குழந்தைகளுக்கான விஷயங்களும் மங்கையை அலங்கரிக்கப் போகிறது. போதுமா? இன்னும் உங்களுக்குத் தோன்றும் விஷயங்கள் எதுவானாலும் ரசமாயிருந்தால் அனுப்புங்கள்.

★

ஆசிரியர்: மங்கை.

197650

மங்கை

பெண்களின் புத்தகம்

தொகுதி 2 | சர்வதாரி ஆனி - ஆடி | பகுதி 10

கிராம சேவை

○

வந்த பின் காப்பதைவிட வருமுன் காப்பதே சிறந்தது. சுகாதாரத்துடனிருக்கும் போது வியாதியைக் குறித்து எண்ணமே உண்டாகாது. இளமையின் வன்மையால் நோயின் வேகம் தெரியாது. "குழந்தை நோய் கள்ளமறியாது" என்பார்கள். 104 டிகிரி ஜுரத்துடன் பத்து வயது சிறுமி பாண்டியாடிக் கொண்டிருப்பாள். ஆனால் அவளே நாற்பது வயதான தாயாகும் போது ஒரு ஜலதோஷ நிமித்தமாக 99 டிகிரி ஜுரம் வந்தாலும் தாளாது. "அப்பா, அம்மா" என்று முனகுவாள்.

வியாதிக்கு முதற் காரணம் அசுத்தம். நகர வட்டாரங்களில் பெண் மக்கள் ஓரளவுக்கு சுகாதார விதிகளை அனுஷ்டிக்க சமூகக் கோட்பாடுகளால் நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். ஆனால் கிராம வாசிகளான சகோதரிகளுக்கு வறுமை காரணமாக சுத்தமாயிருப்பது மிகச் சிரமமான காரணம். அதனாற்றான் வைசூரி, காலரா போன்ற வியாதிகள் கிராமத்திற்கு வந்தால் முக்கால் விகித ஜனத்தொகையையாவது அழிக்காமல் விடுவதில்லை.

கிராம சகோதரிகள் சுகாதார விதிகளை அனுஷ்டிக்க நகர சகோதரிகள் உதவி செய்ய முன்வரவேண்டும். நகரங்கள் பெரிய பெரிய மகாநாடுகள் கூட்டிப் பேசுவதாலும், மோட்டார் கார்களில் புறப்பட்டு கிளப்புகளுக்குப் போய் கூடிப் பேசுவதாலும் மட்டும் ஒன்றும் சாதிக்க முடியாது. மோட்டார் கார்களை கிராமங்களுக்குள் ஓட்டி கிராம சகோதரிகளிடையே பதிந்து கிடக்கும் அசிரத்தையையும் அறியாமையையும் விரட்ட வேண்டும். இது படித்த பெண்களுடைய கடமையுமாகும்.

நகரத்தில் வசிக்கும் ஒரு பெண் எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்து விட்டதும் காலேஜில் சேர விண்ணப்பித்துக் கொள்வதை விட கிராமங்களில் வசிக்கும் சகோதரிகளுக்குச் சுகாதாரப் பயிற்சியளிக்க முன்வரலாம். ஆனால் இதற்கு அரசாங்கம் வசதி செய்து கொடுக்க வேண்டும். பிரத்தியேகமாக ஒரு பயிற்சி ஆலயத்தை ஸ்தாபித்து அதன்

மூலம் உற்சாகமுள்ள இளம் பெண்களுக்குப் பயிற்சியளித்து கிராமங்களில் தொண்டாற்ற அனுப்ப வேண்டும். ஊக்கமும் ஆக்கமும் இருந்தால் மட்டும் போதாது. பயிற்சியும் ஊதியமும் இருந்தால்தான் திட்டம் வெற்றியடையும். எனவே எந்த தனிப்பட்ட ஸ்தாபனமோ, நபரோ இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது. ஐக்கிய இந்தியாவின் மக்களில் பெரும்பான்மையோர் கிராமவாசிகள். அவர்களுடைய இந்த முக்கியத் தேவையைப் பூர்த்தி செய்வதில் சுதந்தர அரசாங்கம் அசிரத்தையாக இருக்க முடியாது. படித்துவிட்டு கல்யாணமும் செய்து கொள்ள முடியாமல் தவிக்கும் பல பெண்களுக்கும் ஒரு வழி காட்டியதாகவும் இருக்கும்.

இந்தச் செலவைஎப்படிச் சரிக்கட்டுவது என்ற கேள்விக்குப் பதில் வெகு எளிதில் கூறிவிடலாம். இதனால் நேரக் கூடிய நன்மையை உத்தேசித்து இந்தச் செலவை எப்படியும் மேற்கொண்டாகவேண்டுமென நிச்சயித்து விட்டால் தானாகவே வழியேற்பட்டுவிடும்.

✱

பெண்களுக்குப் புத்திமதி

காந்தியடிகள் ஸ்ரீராம்பூரில் இருந்த பொழுது ஒரு நாள் மாலை வழக்கம் போல் உலாவச் சென்ற பொழுது ஒரு வயலில் வேலை செய்து கொண்டிருந்த பெண்கள் கண்ணீர் பெருகத் தங்கள் துன்பக் கதைகளையும் தங்களுடைய தற்கால நிலைமையையும் அவரிடம் சொன்னார்கள்.

ஒரு கிழவி கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "மகாத்மாஜீ! நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று எங்களுக்குத் தயவு செய்து சொல்லுங்கள். எங்களுடைய உயிருக்கும் சொத்துக்கும் பாதுகாவலில்லாமலிருக்கும் பொழுது நாங்கள் எப்படி எங்களுடைய கிராமங்களில் வசிக்க முடியும்?" என்று கேட்டாள். அதற்குக் காந்தியடிகள் கூறியதாவது:—

"நான் நோவாக்காளிக்கு வந்தது முதல் நீங்கள் எல்லோரும் பயத்தை விட்டு ஒழித்துவிட வேண்டும் என்று கூறி வருகிறேன். நீங்கள் அந்த விதமாக நடந்துகொண்டால் நீங்கள் தைரியமாக இங்கே வாழலாம். கடவுளை நம்புங்கள். அவருக்கு மட்டும் பயந்து நடவுங்கள். வேறு யாருக்கும் பயப்பட வேண்டாம். அவரிடம் பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள்."

—காந்தியடிகள்

தண்டி உப்பு சத்தியாக்கிரகத்தின்போது காந்தியடிகள் பெண்மணிகளுக்கு விடுத்திருந்த செய்தி இது. இன்றும் சரி, நாளையும் சரி. இந்தப் பொன் மொழிகள் நம் நினைவிலிருக்க வேண்டியவையாகும்.

இந்தியப் பெண்மணிகளுக்கு

●

மகாத்மா காந்தி

இந்த நல்ல போராட்டத்தில் கலந்துகொள்ள, சில சகோதரிகள் மிகவும் ஆத்திரப்படுகிறார்கள். இது ஒரு நல்ல அறிகுறியாகும். உப்புவரியை எதிர்த்து நடக்கிற இந்த இயக்கம் எவ்வளவு ரம்மியமுடையதாக இருப்பினும், பெண்மணிகள் இதிலேயே தங்களது முழுக் கவனத்தையும் செலுத்திவிடக் கூடாது. இப்படிக் கவனம் செலுத்துவது, சிறுசிறு காரியங்களுக்காக, பெரிய காரியங்களை விட்டுக் கொடுப்பதாகி விடும் என்று நான் கண்டுகொண்டேன். தேசத்தின் விடுதலைக்காக, எவ்விதத் துன்பத்தையும் துயரத்தையும் அனுபவிக்க, பெண்கள் தயாராய் இருக்கிறார்கள். இந்தத் துன்பமும் துயரமும் உப்புச் சட்டத்தை மீறுவதிலே இருக்க மாட்டாது. அவர்கள் அதில் கலந்து கொள்ளும் பட்சத்தில் கடலில் கரைத்த காயத்தைப் போலாகி விடும்'

பலாத்காரமற்ற இந்தப் போராட்டத்தில், ஆண்களைக் காட்டிலும் பெண்களே அதிகமாக ஈடுபடவேண்டும். 'வலிமையில் குறைந்தவர்கள்' என்று பெண்களைக் கூறுவது, அவர்களை இழிவுபடுத்துவதாகும்; ஆடவர்கள் பெண்களுக்குச் செய்த அநீதியாகும். பலம் என்பது மிருகபலத்தையே குறிக்கும் என்று ஏற்படுமானல், அந்தப் பலத்தில் ஆணைக்காட்டிலும் பெண் குறைந்தபலம் உடையவள் என்பது உண்மைதான். அப்படியின்றி பலம் என்பது ஒழுக்கவலியைக் குறிக்குமானல், ஆணைக்காட்டிலும் பெண்ணை எவ்வளவோ மடங்கு உயர்ந்தவள் என்று சொல்ல வேண்டும். ஆணைவிட, பெண்ணிடம் உள்ளுணர்ச்சி அதிகமில்லையா? தியாக உணர்ச்சி இல்லையா? சகிப்புத் தன்மை, தைரியம் அதிகமில்லையா? பெண் இன்றி ஆண் ஏது? நமது வாழ்விற்கு ஆதாரமாயுள்ள சட்டம் பலாத்காரமின்மையாயின், எதிர்கால வாழ்க்கை பெண்கள்வசமே இருக்கிறதெனலாம்.

இந்தவிதமான எண்ணம் எனக்குப் பல வருஷங்களாகவே உண்டு. இந்தப் போராட்டத்தில் ஆண்களோடு தாங்களும் உழைக்கவேணுமென்று ஆசிரமத்திலிருக்கும் பெண்கள் வற்புறுத்தியபோது, உப்புச் சட்டத்தை மீறுவதைவிட, இந்தப் போராட்டத்தில் மேன்மையான காரியங்களைச் செய்யும்படியான

திலே பெண்களுக்கு என்ற ஏதோ ஒரு எண்ணம் என் மனதில் உதித்தது.

அவர்களுக்குரிய வேலையை நான் இப்போது கண்டு பிடித்து விட்டேன் எனலாம். கள்ளுக் கடைகளையும் அன்னியத்துணிக் கடைகளையும் 1921-ம் ஆண்டில் ஆண்கள் மறியல் செய்தார்கள். எதிர்பார்த்த அளவிற்கு மேல் வெற்றி கிடைக்கும் தருவாயில், பலாத்காரம் தலைகாட்ட ஆரம்பிக்கவே, அது தோல்வியடைந்து போயிற்று. ஜனங்கள் மனதில் பதியத்தக்க முறையில்; உண்மையாக ஏதாவது செய்யவேண்டுமாயின், குடித்துப் பழக்கமுடையவர்களும் அன்னிய துணி வாங்குகிறவர்களும் அவற்ருல் விளையும் தீமையை விரைவாக உணர்ந்து கொள்வார்கள், மறியல் என்பது பலாத்காரம் செய்வதாயிராமல், மனமாற்றம் செய்வதாய் இருக்க வேண்டும்; ஒழுக்கநடைக்குப் புறம்பானது என்பதை எடுத்துக் காட்டி. வேண்டிக்கொள்வதா யிருக்க வேண்டும். இதயத்தில் பதியும் படியான முறையில், வேண்டிக் கொள்ளும் திறன் பெண்களைத் தவிர வேறு யாரிடம் அதிகமா யிருக்கிறது?

மயக்கந்தரும் குடி வகை, அபின் கஞ்சா போன்றவைகளின் விலக்கு, அன்னியத்துணி மறியல் ஆகியவற்றை நாம் சட்ட பூர்வமாகவே தடுத்தாக வேண்டும். அதற்கு அடிப்படையிலிருந்தே-அதாவது பொது ஜனங்களிட மிருந்தே ஒரு சல சலப்பு ஏற்படவேண்டும்; அப்போது தான் அவை சட்டமாக மாறும்.

குடி, அன்னியத் துணி இரண்டையும் தேச நலங்கருதி விலக்க வேண்டுமென்பதை, யாருமே மறுக்கமாட்டார்கள். குடியும் அபின் கஞ்சா போன்றவையும், அவற்றில் பழகிப் போனவர்களின் ஒழுக்க நடையையே அடியோடு நாசமாக்கி விடுகின்றன. அன்னியத் துணியோ, தேசத்தின் பொருளாதார மாணவர்களுக்கு வேலை இல்லாது செய்து விடுகிறது. துணியினாலும் குடியினாலும் ஏற்படும் துன்பத்தை ஒவ்வொரு வீட்டினரும்-அதாவது பெண் மக்களே - அனுபவிக்கிருர்கள் எனலாம். ஒரு காலத்தில் அமைதிக்கும் ஒழுங்கிற்கும் நிலையமாய் இருந்த குடும்பம், குடி எனும் பேயால் எவ்விதமான துன்பத்தை அனுபவித்து வருகிறது என்பதை, குடியர்களாய் இருக்கும் கணவனுடன் வாழ்க்கை நடத்துகிற பெண்களால் மட்டுமே உணரமுடியும். வேலையில்லாத் திண்டாட்டமென்ருல் யாது என்பதை, குக்கிராமங்களில் வசிக்கும் கோடிக் கணக்கான பெண்கள் அறிவார்கள். சர்க்கா சங்கத்தில் இன்று ஒரு லட்சத்திற்கு அதிகமான பெண்கள் வேலை பார்த்து வருகிருர்கள், அதில் வேலை பார்க்கும் ஆண்மக்களின் எண்ணிக்கையோ பதினைபிரத்துக்கும் குறைவுதான்.

இந்த இரண்டு காரியாதிகளிலும் இந்தியப் பெண்மணிகள் ஈடுபடுவார்களாக; ஈடுபட்டு, அவற்றில் திறமையடைவார்களாக. அப்படிச் செய்வார்களேயானல், ஆடவர்களைக் காட்டிலும் தேச விடுதலைக்குப் பெண்கள் அதிகமாக உழைத்தவர் ஆவர். தன்னம்பிக்கையும் அதிகார ஆற்றலும் இதுவரை பெண்களுக்கு இல்லாது இருந்தன. இந்தக் காரியாதிகளில் ஈடுபட்

டால், அவை நிச்சயமாய், இனி மேல் அவர்களுக்குக் கிட்டும்.

அன்னியத் துணி வியாபாரி, அன்னியத் துணி வாங்குவோர், கள் விற்பனை செய்வோர், குடித்துப் பழக்க முடையோர், ஆகியவர்களைப் பெண்கள் வேண்டிக் கொள்வார்களேயானால், அது அவர்களின் இதயத்தை நிச்சயமாக உருக்கி விடும். மேலே சொல்லிய நான்கு பிரிவினருக்கும் பெண்கள் பலாத்கார முறையில் தீங்கு இயற்றுவார்கள் என்றோ அல்லது தீங்கு இயற்றும் விருப்பம் அவர்களுக்கு உண்டு என்றோ சந்தேகிப்பதற்கில்லை.

பெண்களாலேயே ஆரம்பிக்கப் பட்டு, பெண்களின் ஆதிக்கத்தின் கீழே நடந்து வருவதுதான் இந்த கிளர்ச்சியிலுள்ள ஒரு தனி அழகு. உதவி தேவைப்பட்டால், அவர்களுக்கு ஆடவர்கள் உதவி புரியலாம்; உதவி செய்யவும் வேண்டும். அப்படி உதவி செய்ய நேரும் போது, ஆடவர்கள் பெண்களிடம் பணிவோடு நடந்து கொள்ள வேண்டும்.

இந்தக் கிளர்ச்சியில், ஆயிரக் கணக்கான பெண்கள், படித்தவர்களாயினும் சரி படியாதவர்களாயினும் சரி, கலந்து கொள்ளலாம்.

மிகவும் படித்துள்ள பெண்கள் எனது இந்த வேண்டுகோளுக்கு செவி சாய்ப்பார்களே யானால், பொது ஜனங்களோடு கலந்து பழகி, தாங்களும் அவர்களே என்று எண்ணும் படியான சந்தர்ப்பம் அவர்களுக்கு ஏற்பட்டுவிடும். இதனால் அந்தப் பொது மக்களுக்கு, ஒழுக்கத் துறை ஆகிய இரண்டிலுமே அவர்கள் உதவியவர் ஆவர்.

அன்னியத்துணி பகிஷ்காரம் என்ற விஷயத்தை அவர்கள் பரிசிலனை செய்து ஆராய்ந்து பார்ப்பார்களேயானால், கதரைத் தவிர, வேறு எதனாலும் மறியலை நடத்த முடியாது என்பதைக் கண்டு கொள்வார்கள். இந்திய மக்களுக்குத் தேவைப்படுகிற அளவிற்கு, இன்னும் சிறிது காலம் வரை, மில்களிலே போதுமான துணி உற்பத்தி செய்யமுடியாதென்பதை மில் முதலாளிமார்களே ஒப்புக்கொள்வார்கள். சரியானபடி வசதிகள் செய்து கொடுத்தால், நமது கிராமங்களிலிருக்கும் எண்ணிக்கையற்ற குடும்பங்களில் கதர் உற்பத்தி செய்யக்கூடும். தேவைப்படும் வசதிகளைச் செய்து கொடுத்து, ஒவ்வொரு நிமிஷத்தையும் கதர் நூற்பதில் செலவிடுவது, இந்தியப் பெண்மணிகளின் பிறப்புரிமை யாகட்டும். கதர் உற்பத்தி செய்ய வேண்டு மென்பதற்குப் பொருள், போதுமான அளவு நூல்நூற்றலே. டாண்டி கடற்கரைக்குப் பிரயாணம் செய்த பத்து நாட்களில், தக்ளியின் வன்மையை, சந்தர்ப்ப வசத்தால், நான் அறியநேர்ந்தது. இதை இந்த அளவிற்கு என்னால் ஏற்கனவே அறிந்து கொள்ள முடியவில்லை.

உண்மையில், தக்ளியினால் ஏற்படும் பயனோ வெகு அற்புதம். இயல்பாகச் செய்யவேண்டிய காரியங்களை நிறுத்தாமலே, எனது தோழர்கள், விளையாட்டாகவே, நான்கு சதுர கெஜம் துணி செய்யக்கூடிய அளவிற்கு, 12 நம்பர் நூலை ஒரே நாளில் நூற்றுத் தள்ளிவிட்டார்கள். யுத்த காலத்தில், கதரோடு வேறெதாலும் போட்டிபோட முடியாது. இந்த இரண்டு சீர்திருத்தங்களி

ணல் ஒழுக்க நடையில் ஏற்படும் பலாபலன்களோ மிகமிகப் பெரியனவாயிருக்கும். அரசியல் துறையில் ஏற்படுகிற பலனும் அவற்றிற்குக் குறைந்ததாக இராது. மயக்கந்தரும் குடி வகைகளையும் கஞ்சா அபினி போன்றவைகளையும் விலக்கி விடுவோமேயானல், அரசாங்க வருமானத்தில், வருஷத்திற்கு இருபத்தைந்து கோடி ரூபாய் பள்ளம் விழுந்துவிடும். கோடிக்கணக்கணக்கான இந்திய மக்களுக்கு, அன்னியத்துணிபகிஷ்காரத்தால், குறைந்த அளவு அறுபது கோடி ரூபாய் மீதப்படும். இந்த இரண்டு காரியங்களும் வெற்றியடைந்தால், உப்புச் சட்டத்தை ரத்து செய்துவிட பொருளாதாரத் துறையில், அதிகமான நலம் ஏற்படும். இந்த இரண்டு சீர்திருத்தங்களினல் ஒழுக்க நடையில் ஏற்படும் பலன்களை மதிப்பிட முடியவே முடியாது.

கள்ளுக்கடை, அன்னியத் துணிமறியல் இரண்டிலுமே மன வெழுச்சிக்கும். துணிச்சலான காரியங்களுக்கும் இடமிராதே என்று சில சகோதரிகள் மறுத்துச் சொல்லக்கூடும். நல்லது, முழுமனதோடு இந்தக் கிளர்ச்சியில் அவர்கள் ஈடுபடுவார்களாயின், போதுமான அளவிற்கு மனவெழுச்சி பெறவும் துணிவான காரியங்களைச் செய்யவும் இடமிருப்பதைக் காண்பார்கள்.

நான் சொல்வதைக், கேட்டு எனது வேண்டுகோளுக்கிசைந்து நடக்க விரும்பினல், இந்திய பெண்கள், விரைவாகவே செயலில் இறங்கவேண்டும். இந்தியா முழுவதும் உடனே செய்ய இயலாவிடினும் பாதகமில்லை. மாகாணந் தோறும் இந்தக் காரியங்களை அவர்கள் செய்யத் தொடங்கட்டும். அதைப் பார்த்து மற்ற மாகாணங்களும் விரைவிலேபின்பற்ற ஆரம்பித்துவிடும்.

பூகம்பக் கதைகள்

இப்போதெல்லாம் உலகத்தின் பல பாகங்களில் பூகம்ப அதிர்ச்சி உண்டாகின்றன. இவைகளினல் ஏற்படும் கஷ்ட நஷ்டங்கள் ஒருபுறமிருக்கட்டும். பூகம்ப சம்பந்தமாக வழங்கும் 'கட்டுக்கதைகள்' எத்தனையோ உண்டு!

ஹிந்துக்களின் பூர்வ கதைப்படி ஆயிரம் தலைகளுடைய ஆதிசேஷன பெரிய சர்ப்பத்தால் பூமி சுமக்கப்படுகிறதாம்! ஒரு தலையிலிருந்து மற்றொரு தலைக்கு பூமி மாறும்போது அசைவேற்படுகிறதாம். இந்த அசைவுதான் பூகம்பத்துக் காரணமாம்!

கிரீஸ் நாட்டில் பூகம்பக் கடவுளே இருப்பதாகக் கதை! அந்தக் கடவுளுக்குப் பூசைகளும் உண்டு. பூகம்பம் உண்டானல் அந்தக் கடவுளிடம் ஓடி 'நாங்கள் இருக்கிறோம்' என்று கத்துவார்களாம். உடனே உடனே பூகம்பக் கடவுள் நித்திரை விட்டு எழுந்து பூமி ஆட்டத்தை நிறுத்தி விடுவாராம்! அதாவது பூகம்பக் கடவுள் தூங்கிவிட்டால் பூகம்பம் ஏற்படுகிறதென்று அவர்களின் நம்பிக்கை!

இன்னும் இதுமாதிரி பூகம்பக் கதைகள் எத்தனையோ வழங்குகின்றன. ஆனல் இந்தக் கட்டுக் கதைகள் கஷ்ட நஷ்டத்தைக் குறைத்து விடாது என்பது மட்டும் உண்மை!

ஓய்வு நேரத்தில் என்னென்ன செய்யலாம் என்று இக்கட்டுரையாளர் விவரிக்கிறார். காரியாம்சத்தில் பயனளிக்கக்கூடிய கட்டுரை இது.

பெண் உலகம்

தர்மாம்பாள்

நம்மில் சில பெண்களுக்கு, அதாவது குடும்பத் தொல்லைகளில் ஈடுபட்ட இளம் பெண்களுக்கு ஓய்வு நேரத்தை எப்படி உபயோகமாகக் கழிப்பது என்றே தெரிவதில்லை. ஏதோ பெற்றோர்கள் படிக்க வைத்தவரையில் படிக்கிறார்கள், பிறகு பள்ளியிலிருந்து விலகி எப்பொழுது குடும்பத்தில் ஈடுபடுகிறார்களோ அப்பொழுதே படிப்பிற்கும் முற்றுப்புள்ளி வைத்துவிடுகிறார்கள். ஒரு சில பெண்களுக்கு, அவர்களுடைய படிப்பு, பத்திரிகைகள், நாவல்கள் முதலியன படிப்பதற்காவது உதவி புரிகிறது. மற்றும் பலருக்கு அது கூடக் கிடையாது. அவர்கள் கிடைக்கும் நேரத்தையெல்லாம் வீணாக்குகிறார்கள். வீட்டிலுள்ள வேலைக்காரிகள் செய்த வேலை போக மீதியுள்ள ஒன்றிரண்டு வேலைகளைச் செய்த நேரம் தவிர, மற்ற நேரத்தை, பொழுது போகவில்லை என்று சொல்லிக் கொண்டு வீண் பேச்சுப் பேசுவதிலேயே காலம் கழித்து விடுகின்றனர். சில பெண்களுக்கு வேலை செய்து அதிகப் பழக்கமில்லாமை காரணமாக பொழுதே போதவில்லை. அவர்களுக்கு ஓய்வு நேரமே கிடைப்பதில்லை. இந்த இரு சாராரும் ‘பொழுது போகவில்லை’ என்றோ பொழுது போதவில்லை’ என்றோ சொல்லிக்கொண்டு காலத்தை வீணாக்குகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இது சரியான முறையே அல்ல.

எவ்வளவுதான் குடும்பத்தில் வேலைகள் இருந்தாலும் பெண்கள் தமக்காகவென்று ஒரு மணியோ அல்லது இரண்டு மணியோ ஓய்வு நேரத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கூடியவரையில் நம் வீட்டு வேலைகளை நாமே கவனித்துக் கொள்ளுதல் நல்லதுதான். அதற்காக, நாள்முழுவதும் அடுப்பங்கரையிலேயே உட்கார்ந்து வேலை செய்து கொண்டிருந்தால் நன்றாயிருக்குமா? அப்படிச் செய்தால் நம்மைப் பார்த்து பிறர் பரிதாபப்படுவது மல்லாமல், நமக்கே அந்த வேலையில் சலிப்பு ஏற்பட்டு விடுகிறது. ஆகவே நாளடைவில் குடும்பக் காரியங்களில் அசிரத்தை ஏற்பட்டு பொறுப்பு குறைந்துபோய் கடமைதான் எஞ்சி நிற்கிறது. ஆகவே எந்த வேலையையும் கடமைக்காகவென்று அரைமனதுடன்தான் செய்ய வேண்டியிருக்கிறது. இவ்வாறு மனச்சாந்தியில்லாமல் செய்யும் காரியம் உடலைச் சோர்வடையச் செய்து விடுகிறது.

கொஞ்ச நாட்களிலெல்லாம் உடம்பு பலஹீனப்பட்டு விடுகிறது. இதுமட்டும்தானா? 'அசட்டுக்கு அறுபது நாழியும் காரியம்' என்ற அசட்டுப் பட்டம் வேறு.

எவ்வளவுக் கெவ்வளவு வேலையைச் சுருக்கமாக்கிக் கொள்ளுகிரோமோ அவ்வளவுக் கவ்வளவு நமக்கு நன்மை. சிலர் அடுப்பில் உலைநீர்வைத்தபிறகுதான் அரிசியில் கல் பொறுக்க ஆரம்பிப்பார்கள். அப்பொழுதுதான் காய் கறி இல்லாதது ஞாபகத்திற்கு வந்து மார்க்கெட்டிற்கு ஆள் அனுப்புவார்கள். அவன் வருவதற்குள் அடுப்பில் கறசட்டி காய்ந்துபோய் விடும். இவ்வளவு பொறுப்புடனும் சுறுசுறுப்புடனும் வீட்டுவேலைகள் நடைபெற்று வந்தால் காரியங்களுக்கு முடிவு உண்டா? அல்லது ஓய்வு நேரம்தான் கிடைக்க வசதியுண்டா? நாள் முழுவதும் உழைத்து அலுக்கவேண்டியதுதான். குடும்பத்தை நிர்வகிக்க நல்ல திறமைவேண்டும். முன்னுக்கு முன்னதாகவே எதையும் யோசித்து செய்துவைத்துக் கொண்டால்தான் நமக்கு சிரமம் இல்லை. ஓய்வு நேரமும் கொஞ்சம் கிடைக்கும். அப்படிக் கிடைக்கும் ஓய்வு நேரத்தை எவ்வாறு உபயோகமாகக் கழிக்கலாம் என்று சிறிது யோசித்துப் பார்த்து, அந் நேரத்தை மிக்க பிரயோஜனமுள்ள தாக்கிக் கொள்ளலாம்.

பெண்கள் ஓய்வு நேரத்தில் பல உபயோகமான புஸ்தகங்கள் படிக்கலாம். வெறும் கதைப் புத்தகங்கள், நாவல்கள் படிப்பது மட்டும் போதாது. தமிழில் நல்ல நூல்களும் கவிதைகளும் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளையெல்லாம் அவசியம் படிக்க வேண்டியதுமல்லாமல், படிக்கப் படிக்க இன்பமளிக்கக் கூடியனவாகவும் இருக்கின்றன. அவைகளால் அறிவு வளர்ச்சியும் ஆத்ம வளர்ச்சியும் ஏற்படுவதோடு, வாழ்க்கைக்கு வேண்டிய பல உண்மைகளையும் அவை நமக்குப் போதிக்கக் கூடியவை. இதோடு நில்லாது, ஹிந்தி, ஸம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளையும் சிறிது தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். தமிழ் மொழிமட்டும் தெரிந்திருந்தால் போதாது. சும்மா உட்கார்ந்திருக்கும் நேரத்தில் ஹிந்தியோ ஸம்ஸ்கிருதமோ தெரிந்தவர்களிடத்தில் சென்று சிறிது சிறிதாகக் கற்றுக் கொண்டு வரலாம். அவ்வாறு உதவிசெய்ய ஒருவரும் இல்லாவிட்டாலும் நாமாகவே கூடக் கற்றுக் கொள்ளலாம். கொஞ்சம் படித்த பெண்களாயிருந்தால், தமக்குத் தெரிந்த சில விஷயங்களை கட்டுரைகளில் எழுதி பத்திரிகைகளுக்கு அனுப்பலாம். அறிவு வளர்ச்சிக்கான சிறந்த வேலைகளில் இது ஒன்றாகும். இவ்வாறு செய்தால் பள்ளிக்கூடத்தோடு படிப்பு முடிந்து விடாமல், தொடர்ந்து கல்வியபிவிருத்தி உண்டாவதற்கு சந்தர்ப்பம் உண்டாகிறது.

பொழுது போக்குவதற்குப் புஸ்தகங்கள் அல்லாத மற்றொரு அரிய பெரிய சாதனம் பெண்களுக்கேயுரித்தான கை வேலைகள். வீட்டைப் பார்ப்பதற்கு அழகுறச் செய்வது பெண்களுடைய வேலை. அவ்வாறு செய்வதில் அவர்களுக்கு மிகுந்த உற்சாகம் உண்டாகிறது. மேஜை விரிப்புகளுக்கும் ஜன்னலில் தொங்கவிடப்படும் திரைகளுக்கும் பூவேலை செய்தால் எவ்வளவு அழகாயிருக்கும்! இதெல்லாம்

பெண்களுக்கென ஏற்பட்ட ஒரு தனிக்கலை தானே? இதெல்லாம் ஓய்வு நேரத்தில் செய்யக் கூடிய வேலைகளில்லையா? தவிரவும், பெண்களுடைய ஜாக்கெட்டுகள் குழந்தைகளுடைய பாவாடை சட்டை முதலியவைகளை நாமே வீட்டில் தைத்துக் கொள்ளலாம். இந்தக் காலததில் தையற்காரர்கள் அதிககூலி கேட்கிறார்கள். அவர்கள் என்ன செய்வார்கள்? கால நிலைமை அப்படியிருக்கிறது. அதற்காக நாம் செய்யக்கூடியது என்ன? கூடியவரையில் நம்முடைய தேவைக்கான துணிகளை நாமே வைத்துக் கொள்ளலாம். இது ஒரு நல்ல பழக்கம் அல்லாமல் ஒரு லாபகரமான முறையும் ஆகும். இவைதவிர மகாத்மா காந்தியடிகளின் நிர்மாணத் திட்டத்தின் முதல் அம்சமாகிய நூல் நூற்றல் ஒரு சிறந்த கைத்தொழில். உபயோகமானதும் சிரேஷ்டமானதுமான வேலை. கதாத்துணி உடுக்க மிக்க விருப்பமுள்ளவர்கள் இந்தத் தொழிலை அவசியம் மேற்கொள்ள வேண்டும். தாம் நூற்ற நூலைக்கொண்டு வாங்கிய துணியை உடுத்திக் கொள்வதென்றால் எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது! அதிலும் பெண்கள் நூல் நூற்கவேண்டியது மிக்க அவசியம் ஆகும். இதனால் நமது புராதன செல்வமாகிய குடிசைத் தொழில் விருத்தியடையும். வீட்டு வேலைகள் செய்த நேரம் போக மீதி வேளையில் இவ்வாறு உபயோகமாக ஏதாவது செய்தால் 'பொழுது போகவில்லை' என்று 'சொல்ல இடமுண்டா? அல்லது பிறர் வீட்டுக்கு வம்பளந்து பொழுது போக்கச் செல்வதற்குத் தான் மனம் துணியுமா? இதனால் பிறர் வீட்டுக்கே போகக் கூடாது என்று அர்த்தமில்லை. வாரத்திற்கு இருமுறையோ மும்முறையோ நண்பர்களை அவசியம் சந்திக்க வேண்டும். அதிலும் பெண்களுக்கு நான்கு பேருடன் சேர்ந்து காலம் கழிப்பதில் ஆண்களைக் காட்டிலும் உற்சாகம் அதிகம். ஆகையால் அவர்கள் சயுங்கால வேளைகளில் 'லேடிஸ் கிளப்'பிற்கோ, பார்க்குக்கோ உல்லாசமாகச் சென்று வரலாம் இதனால் நாள் முழுவதும் வீட்டிலே இருக்கும் பெண்களுக்கு ஒரு மனச்சாந்தி ஏற்படுகிறது. இவ்வாறு பல மாதர்கள் கூடுமிடத்தில் ஒரு சங்கம் ஏற்படுத்தி வாரம் ஒரு முறை பெண்களுக்குபயோகமான சில விஷயங்களை யாராவது ஒருவரைக் கொண்டு பேச ஏற்பாடு செய்தால் மிகவும் நன்மையாயிருக்கும். இவற்றிற்குப் பெண்கள் தவறாது செல்வார்களானால் அவர்களுக்கு சந்தோஷமும் உபயோகமும் தரக்கூடியசந்தர்ப்பம் அவர்களுக்கு உண்டாகும்.

இவ்வாறெல்லாம் நாம் யோசித்து நம்முடைய நேரத்தை வீணாக்காது உபயோகப் படுத்துவோமானால் நமது ஸ்திரி சமூகம் முன்னேற்றமடையும். அத்துடனில்லாமல் நமது இந்தியப் பெண்களின் சமூகம் உலகத்திற்கே எடுத்துக்காட்டாக விளங்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

✻

கான்ஸர் ஆஸ்பத்திரி

டாக்டர் ஸ்ரீமதி எஸ். முத்துலக்ஷ்மி ரெட்டி

[பிளவை மிகக் கொடிய நோய். கொஞ்சம் கொஞ்சமாய் உயிரை உறிஞ்சும். மனதினால் எண்ணவோ வார்த்தைகளில் விவரிக்கவோ முடியாத அளவு பாதையைக் கொடுக்கும் வியாதி. பெண்களின் பல உறுப்புகளை இது தாக்கி அகால மரணத்தை உண்டு பண்ணும். பல துறைகளில் சமூகத் தொண்டாற்றிவரும் டாக்டர் ஸ்ரீமதி ரெட்டியார் அவர்கள் சென்னை மாகாணத்திற்குப் பிளவைசிகிச்சைக்காக பிரத்தியேகமான வைத்திய சாலை வேண்டும் என்கிறார்]

மிகவும் பயங்கரமானதும் மனித ஜீவனைப் பாதிக்கும் வியாதிகளில் மிகமிக அதிக துன்பத்தைக் கொடுப்பதுமான பிளவை (கான்ஸர்) நோய் சிகிச்சைக்காக கல்கத்தாவில் ஒரு வைத்தியசாலை ஏற்படுத்த அஸ்திவாரக்கல் நாட்டப்பட்டதாக நாம் பத்திரிகைகளில் படித்திருக்கிறோம். டாட்டா ஞாபகார்த்தப் பிளவை வைத்தியசாலை, வித்யார்த்திகளுக்கு ஆராய்ச்சி செய்ய அனுகூலங்களுடன் பம்பாயில் இருக்கிறது. வைத்தியசாலைப் புள்ளி விவரங்களிலிருந்து இந்த வியாதி சென்னை மாகாணத்திலும் விசேஷமாக உள்ளது என்று தெரிந்தும் பிரத்தியேகமான ஓர் வைத்தியசாலை மாகாணத்தில் நிர்மிக்கப் படாதிருப்பது வருத்தத்திற்கிடமானது.

பல பிரபலஸ்தர்களும் சமூக உழைப்பாளிகளும் இந்தக் கொடிய வியாதிக்குப் பலியாயிருப்பதிலிருந்து நம்மில் படிப்பாளிக்கும்கூட இந்த வியாதியின் முதற் குறிகளை அறிந்து நோய் அடக்கப் படக்கூடிய ஸ்திதியிலிருக்கும்போதே வைத்தியம் செய்து கொள்ளவில்லை என்னும் மிகவும் வருந்தத்தக்க உண்மை புலனாகிறது. வைத்தியசாலையில் சிகிச்சைக்கு வருகிறவர்கள் நோய் மிகவும் முற்றி சிகிச்சைக்குப் புறம்பான பிறகுதான் வருகிறார்கள் என்று தெரிகிறது. சென்னையில் போதுமான அளவு ரேடியம் இருந்தும் மேற்கூறிய நிமித்தம் காரணமாக வியாதியஸ்தர்கள் அதனால்பயனடைவதில்லை.

பிளேக், காலரா போன்ற தொத்து நோய்களைப் பற்றியும் குஷ்டம், எலும்புருக்கி போன்ற நாள்பட்ட வியாதிகளைக் குறித்தும் அவற்றின் முதற் குறிகளைக் குறித்தும் பிரசாரம் நடப்பது போலவே, பிளவையைக் குறித்தும் அரசாங்க சுகாதார இலாகாவும் மற்ற ஸ்தாபனங்களும் பொது மக்களிடையே பிரசார மூலம் இந்தக் கொடிய வியாதியைக் குறித்து மருத்துவ அறிஞர்கள் அறிந்துள்ள உண்மைகளையும், அஜாக்கிரதையாக இருந்துவிட்டால் அதனால் விளையக்கூடிய மகத்தான தீங்கைக் குறித்தும் விளம்பரப் படுத்தவேண்டும்.

நவீன சாதனங்களுடனும் நிபுணர்களுடனும் ஆரம்ப வியாதியஸ்தர்களுக்கும் முற்றிய நோயாளிகளுக்கும் சிகிச்சையளிக்கவும் வைத்தியக் கல்லூரி மாணவர்களுக்குப் பிரத்தியேகமான பயிற்சியளிக்கவும், பரீட்சையில் தேறிய வித்யார்த்திகளுக்கு ஆராய்ச்சிக்கு வசதி ஏற்படுத்தவும் ஒரு பிரத்தியேகமான பிளவை வைத்தியசாலை சென்னையின் அதிமுக்கியமான தேவையென்றால் மிகையாகாது.

சகோதரிகளின் சந்தேகங்கள்

[அத்தை அன்னபூரணியம்மாள் உங்கள் கடிதங்களை வரவேற்கிறாள். அவரது தேர்ந்த அனுபவத்தை நீங்கள் பயன் படுத்திக்கொள்ள வேண்டுமென்று சிபார்சு செய்கிறேன். —ஆசிரியர்]

ஸ்ரீமதி அப்பயாம்பாள், கோவை.

கேள்வி: கர்ப்பஸ்திரீகள் கட்டாயம் டானிக் சாப்பிடவேண்டுமா? சாப்பிட வேண்டுமானால் எத்தனை மாதங்கள் என்ன டானிக் சாப்பிடவேண்டும்? உடலுக்குத் தேவையான ஜீவ சத்துகள் உள்ள ஆகாரங்கள் சேர்ந்த உணவுத்திட்டத்தை ஏற்படுத்திக்கொண்டால் போதுமா? சுகப்பிரசவம் ஏற்பட என்ன மருந்து சாப்பிடலாம்?

பதில்: நல்ல புஷ்டியுள்ள ஆகாரங்கள் சாப்பிட்டு வரும் கர்ப்பிணிகளுக்கு டானிக்குகளால் கெடுதல் நேரலாமேயன்றி நன்மையிராது என்றால் கூட மிகையாகாது. எந்த ஒரு இயற்கையான தேக அலுவலுக்கும் மருந்துகள் தேவையில்லை. ஆனால் நவநாகரீகத்தின் முதல் கோளாறு இயற்கையலுவல்களில் மனிதன் தன் செயற்கையறிவைப் புகுத்தி அவதிப்படுவது தான். தேக வளர்ச்சிக்காக ஆகாரம் உட்கொள்கிறோம் அந்த ஆகாரத்தை தேகத்தின் தேவைக்கு உகந்ததாகச் செய்ய அவசியமான சாதனங்களை ஜீரண உறுப்புகளாக ஆண்டவன் அமைத்திருக்கிறான். ஆனால் தேகத்திற்காகவும் உயிர்வாழ்வதற்காகவும் சாப்பிடுவதற்குப் பதிலாக நாவின் ருசியைத் திருப்தி செய்துகொண்டு சந்தோஷமடைவதற்காகச் சாப்பிட ஆரம்பித்தால் வந்தது ஆபத்து. தின்ற ஆகாரம் ஜீரணமாக மருந்து சாப்பிட வேண்டும். பிறகு உடம்பிற்குத் தேவையற்ற பாகத்தை மலமாக அகற்றவும் மருந்துசாப்பிடவேண்டும். இப்படியே போய் மருந்தே ஆகாரமாக மாறிவிடும். கர்ப்பம் ஒரு இயற்கைச் சம்பவம். அதன் இயற்கையான வளர்ச்சியை செயற்கை முறைகளால் பாதிக்காமலிருக்கும் வரையில் கர்ப்பிணிக்கும் சிசுவுக்கும் க்ஷேமம். இயற்கையாக நேரும் மலஜல விஸர்ஜனங்களின் போது வேதனை உண்டாகிறதா? பசுக்கள் போன்ற ஜீவராசிகள் பிரசவத்தின் போது மானிடரைப்போல துன்பப் படுகின்றனவா? இல்லையே? பிரசவ வேதனையின் பெரும்பாகம் நாமே உண்டாக்கிக்கொள்வது. பிரசவம் மிகவும் சிரமமான காரியம் என்று மனதில் நினைத்துக்கொள்வதால் பிரசவ காலத்தில் இளக்கப்பட்டிருக்க வேண்டிய தசைகள் இறுக்கப்படுவதால் வேதனை உண்டாகிறது. இந்தத் தத்துவத்தை உணர்ந்து நீங்கள் இப்பொழுதிலிருந்தே உங்கள் மனதைப் பக்குவப்படுத்திக்கொண்டு வந்தால் சிறிதுகூட சிரமமில்லாமல் சுகப்பிரசவம் உண்டாகும்.

கர்ப்பத்தின் போது சிசுவானது வயிற்றிலுள்ள ஜீரணக்

கருவிகளை உறுத்துவதால் ஓரள வுக்கு அவ்வுறுப்புகள் பாதிக்கப் படுகின்றன. 'மசக்கை' என்று விவரிக்கப்படும். உபாதை உண் டாகிறது. ஆனால் விரைவில் உறுப்புகள் புதிதாகப் பெருத்து வரும் அவயவத்திற்கு உகந்த வாறு தம்மைச் சரிப்படுத்திக் கொள்ளும் சக்தியை இயற்கை யன்னை அவற்றிற்குக் கொடுத் திருப்பதால், ஒருவிதமான செயற்கை முறைகளும் அனுஷ் டிக்கப்படாவிட்டால் ஒரு உபத் திரவமும் நேராது.

டானிக்குகள் இருவகை. ஜீர ணக்கருவிகளைத் தூண்டுபவை. இவற்றால் தீங்குதான் அதிகம். மற்றவை ஆகாரச்சாரங்கள், வைடமின் சத்துக்கள் போன் றவை. நமது உறுப்புகள் ஓரளவு ஆகாரத்திலிருந்து தேகத்தின் தேவைகளைப் பிரித்தெடுத்துக் கொள்வதற்காக அமைக்கப்பட் டவை. ஆகையால் ஆகாரத்தின் அளவு பிரதானமாகிறது. நவீன நாகரீகத்தின் காரணமாக ஆகா ரச் சத்துக்களையும் ஏற்கனவே ஜீரணிக்கப்பட்ட ஆகாரங்களை யும் உட்கொள்பவர்கள் மலச்சிக் கலால் அவதிப்படுகிறார்கள். சரீர தேவைக்கு எஞ்சியுள்ளது மட்டு மன்றி, தினசரி அலுவல்கள் காரணமாக தேகத்தில் உண்டா கும் பல விஷங்களும் மலத்துடன் வெளியேற்றப் படவேண்டி யிருப்பதால் மலச்சிக்கல் பல வியாதிகளுக்கு மூலகாரணமாகி விடுகின்றது.

கர்ப்பஸ்திரீயின் ஆகாரம் மேற் கண்ட உண்மைகளைப் பற்றி வகுக்கப் படவேண்டும். பால், தயிர், மோர், நெய் அதிகம் சேர வேண்டும். ஏனெனில் ஆகாரம் இரு ஜீவன்களின் வளர்ச்சிக்குப் போதியதாக இருக்கவேண்டும். காய்கறி, பழங்கள், கீரைவகை கள் தினசரி ஆகாரத்திட்டத்தில் கட்டாயம் இடம்பெறவேண்டும். முழுப்பயறை முளைக்கவைத்து வறுத்து சேர்த்துக்கொள்ளலாம். அரிசிச் சாதத்தைக் குறைத்து கோதுமையை அதிகம் சேர்க்க வேண்டும். பாதாம் பருப்பு, வெண்டைக்காய், வெய்யில் பட்டு பழுக்கும் பழங்கள் முத லியவை மிகமிக நல்லவை.

நம்மவர்களுள் கர்ப்பிணிகள் விரும்பும் பண்டங்களெல்லாம் கொடுக்கவேண்டு மென்றும் இல்லாவிட்டால் சிசு பூரண வளர்ச்சியடையாதென்றும் ஒரு தவறான அபிப்பிராயம் இருக் கிறது. ஆடையணிகளில் அவர் களிஷ்டப் பிரகாரம் விட்டுவிடுவ தால் மனச்சந்துஷ்டி ஏற்பட்டு சுகாதார அபிவிருத்திக்கு ஏது வாகலாம். ஆனால் ஆகார விஷ யங்களில் கட்டுப்பாடாக இருக்க வேண்டும். தேகத்தின் தேவையை உத்தேசித்து தினசரி ஆகாரத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். அரசாங்கம் சில சிறு புத்தகங்கள் வெளியிட்டிருக் கிறார்கள். அவற்றுள் நாமுண் ணும் பலவகை ஆகாரங்களில் உஷ்ணமளிக்கும் பதார்த்தங்க ளும் தசை வளர்க்கும் பதார்த் தங்களும் வைடமின் சத்துகளும் எத்தனை மடங்கு உள்ளது என்று கண்டுபிடித்து எழுதியிருக்கிறார் கள்.

அந்தப் புத்தகத்தின் உதவி யோடு ஆகாரத்திட்டம் தயாரித் தல் உசிதம்.

சுகப்பிரசவத்திற்கு மருந் தொன்றும் கிடையாது. தினசரி வீட்டு வேலைகளைக் கவனிப்ப தோடு நல்லகாற்றில் சிறிது தூரம் உலாவி வருதல் நலம்.

உலகம் ஈன்ற உண்ணுமுலையாளின் கனிந்தபார்வையே சிருஷ்டியை ரட்சிக்கிறது. உமையாள் வர்க்கத்தைச்சேர்ந்தபெண்மக்கள் பார்வை பட்ட மரங்களைத் துளிர்க்கச் செய்ய வேண்டும். பச்சை மரத்தை எரிக்கக்கூடிய காமக் குரோதத் தீப்பார்வையாக இருக்கலாகாது.]

கவர்ச்சி

குஞ்சலம்

ஆண்களை விடப் பெண்களிடம் கவர்ச்சி யென்னும் ஆகர்ஷண சக்தியை கொஞ்சம் அமிதமாகவே இயற்கை யன்னை அள்ளிக்கொடுத்திருக்கிறுள். ஒரு மங்கைக்கு கவர்ச்சிக் குணமிருப்பதால் ஆடவர்கள் மோகங் கொண்டு காதலிக்க முற்படுவார்களென நினைக்க வேண்டாம். கவர்ச்சிக் குணம் சாதாரணமாக எல்லா மங்கையர்களிடமும் காண வேண்டுமென்பது அர்த்தமில்லை. ஒரு மங்கை ரூபலாவண்ய ஸ்வரூபியாயிருக்கலாம். ஆபரண சுமையாக யிருக்கலாம். ஆனல் கவர்ச்சி என்னும் குணம் பொருந்தாமலிருக்கும்.

எதிர் வீட்டு 'காடி கானு'வில் குடித்தனம் செய்யும் பாஞ்சாலி என்னும் ஹரிஜன மங்கையின் ஆறுமாதக் குழந்தையை வாரி அள்ளி அணைத்துகொள்ள வேண்டும் போலிருக்கும். அவ்வளவு கவர்ச்சி பொருந்திய முகம். பார்த்த மாத்திரத்திலேயே மங்கையின் உள்ளத்தைப் பிரதிபலிக்கச் செய்வது அவளுடைய கண்கள் என்ருல் சண்டைக்கு யாரும் வந்துவிடமாட்டீர்களே! பதிவிரதைக்கு கற்பைப்போலவும் ஜீவனுக்கு ஆத்மாவைப்போலவும் கல்யாண சுபத்திற்கு திருமங்கல்யத்தைப் போலவும் ஒரு மங்கை நேத்திரப் பார்வை அவ்வளவு முக்கிய மெனலாம்.

"பார்வதி மாமியாரா? அவளுக்கு மகாகொடுசூரி கண்களாச்சே. அப்பளாத்து மாவு இடித்து உருட்டும் போது பார்த்து விட்டாளோன்னே? அப்பளத்தை இட்டுக் காயவைத்தாற்போல் தான்" என்று அங்கலாய்த்துக் கொள்ளும் மங்கையர்கள் எவ்வளவு பேர்களை நாம் தினசரி சந்திக்கின்ருேம்.

"போனவருஷம் நான் டில்லியிலிருந்து வந்திருந்தபோது ஒரு ஜோடி வைரத் தோடு வாங்கிப் போட்டுக் கொண்டேன். பக்கத்து வீட்டுக் கமலம் "காமாக்ஷி உன் காதுக்கு எத்தாப்போலிருக்கிறதடி' என்று சொன்னுள். காது புண்ணுகப்போய் தோடே போட்டுக்கொள்ள முடியாமல் போய்விட்டது." வைரம் கனமுள்ள உலோகமானதால் காது புண்ணுகப்போனது காரணமா? அல்லது 'எதுடா ஐந்நூறு ரூபாய் சம்பாதிக்கும் நாம் கணவர் நமக்குக் கம்மல் வாங்கிப் போடவில்லை. சொல்ப சம்பளம் வாங்கும் காமாக்ஷியின் கணவன் தோடுவாங்கிப்போட்டு விட்டானே என்னும் கமலத்தின் வயிற்றெரிச்சல் காரணமா? நல்ல கண்களும் உண்டு; பொல்லாத கண்களும் உண்டு என்பது என்னுடைய துணிபு. கமலத்தைப் போன்ற பெண்களின் பார்வை பார்த்த சாமான் பய

னளிக்காமல் போனல் அவர்களை கவர்ச்சியுள்ள யுவதிகள் என்று எப்படிச் சொல்வது. இப்படிக் கொத்த மங்கையர்களை பார்க்கவும் மனம் அஞ்சுமே.

'ஆயிரம் பெண்கள் குழுமியிருக்கும் இடத்திலிருந்து மீனுக்ஷியை மாத்திரம் பொறுக்கி விடலாம்' என்றுபாகீரதிப்பாட்டிதன் பெண்ணைப் பற்றி பெருமையடித்துக் கொள்வது வழக்கம். மீனுக்ஷியிடம் தற்காலத்து சிறுமிகளைப்போல பலவிதப் பூச்சுகளால் அலங்கரித்துக் கொள்கிருர்களே, அப்படி செயற்கையழகு செய்துகொள்வது வழக்கமில்லை. வாரியள்ளிக் கோடலிமுடிச்சுத்தான் போட்டுக்கொண்டிருப்பாள். அவள் கண்களின் பார்வையோ நம்மை அப்படியே ஊடுருவிச் செல்லும். அடக்கஒடுக்கமான நடை, உடை பாவனைகள் இன்னும் அவள் பொலிவை அதிகப் படுத்தின. 'அவள் பார்த்தபார்வையிலேஎன் மனம் பாகாய் உருகிற்றம்மா என்று ஒரு பெரியவர் பாடியிருக்கும் அடிகள் நினைவிற்கு வருகின்றன. ஒரு பார்வையினுல் நம்மை அப்படியே வசப்படுத்திவிடும். மீனுக்ஷியைப் போன்ற மங்கையர்கள் ஒரு சிலரைத்தான் நாம் சந்திக்கிருேம் என்ருல் என்னுடன் சண்டைக்கு வரும் இக் கட்டுரையைப் படிக்கும் சகோதரிகள் சவால் கட்டுரை எழுதலாம். நான் ஆசிரியரைப் பிரசுரிக்கும்படி சிபார்சு செய்கிறேன்.

வரவு செலவு

பெண்கள் செலவு செய்வதற்கு அஞ்சமாட்டார்கள் என்று சொல்லும்போது நிறைய வருமான மிருந்தால்தானே செலவு செய்ய முடியும் என்பதை மறந்து விடுகிருர்கள்! ஹாலிவுட்டின் பிரபல நடிகையான டியன்னுடர்பின் இரண்டு வருஷங்களில் 262,875 டாலர் சம்பாதித்திருக்கிருர். இதனுல் செலவு செய்ய அவசியமும் ஏற்படுகிறது! அவசியமாகவோ, வீணுகவோ எப்படியோ செலவு செய்தாக வேண்டியதுதான்! என்று சொல்லுகிருள் அந்த நடிகை!

மீனாக்ஷி

வேலன் பேசாமல் தன் வேலையில் தான் கவனமாயிருந்தான். ஆனால், சிங்காரப்பன் செய்த வேலைக்குத் தண்டனை வேறு விதத்தில் கிடைத்து விட்டது!

வள்ளி, வடகாசியில் மறவ குலத்தில் வந்த மங்கை. அவள் மாசியப்பத் தேவனுடைய அருமை மகள். அவள் மிகவும் அழகானவள் என்று அந்த வட்டாரத்தில் பேச்சு. அப்படி என்ன அழகு!

கன்னங்கரிய கூந்தல் தரையைத் தொடும்படி நீண்டு வாரிக் கொண்டை முடிக்க முடியாமல் வளர்ந்திருந்தது. அவள் தலைமயிரிலிருந்து வழிந்துகொண்டிருக்கும் விளக்கெண்ணெய் கறுப்பு நிற முகத்துக்குப் பளபளப்புக் கொடுத்துக்கொண்டிருந்தது. கரு நீல நிற முகத்தில் கரு விழிகளிரண்டும் துருதுரு என்று நோக்கிக்கொண்டிருந்தன. இத்தனையழகுடன் அவள் அவ்வூரில் வளர்ந்திருந்தாள்.

வேலன், அதே ஊரிலுள்ள ஆடிச்சாமித்தேவனின் மகன். அவன் வடகாசிப் 'போர்ட்' பள்ளிக்கூடத்தில் நாலாவதுவரை படித்துவிட்டு தனக்கும், படிப்புக்கும், 'அக்கரை இக்கரை' வித்தியாசம் என்று கண்டுகொண்டு, பாடசாலையை விட்டு வெளியேறினான்.

பின்னர் அவன், அவனுடைய தகப்பனாருடன் மாங்காய், எலுமிச்சை முதலிய தெரு வியாபாரத்தில் இறங்கினான். வியாபாரத்தில் ஆடிச்சாமியே ஆச்சரியப்படும்படி அவன் அமைந்திருந்தான். வடகாசி, கிலஞ்சி, திம்பளி, பூலூர் முதலிய சுற்று வட்டாரங்கள் முழுவதும் அவனுக்கு நல்ல கிராக்கி. வேலனை வியாபாரப் புலி என்று சொல்வார்கள்.

சிங்காரப்பன், சித்திரைத் தேவனின் செல்வன். சித்திரைத் தேவனின் சொத்தின் சர்வாதிகாரி அவன். ஊரின் முக்கியத் தெருவில் காய் கறிக் கடையும், 'பஸ் ஸ்டாண்'டில் வெற்றிலை பாக்குக் கடையும் வைத்துக் கொண்டிருந்தான்.

அவன், பத்தாவதுவரை படித்திருந்தான். படித்திருந்தும் அவன் அறிவாளி என்று சொல்வதற்கில்லை. தகப்பனார் இறந்தவுடன் படிப்பை மூட்டைகட்டி வியாபாரத்தில் இறங்கினான். அப்பொழுது அவனுக்கு வயது 24. வாட்ட சாட்டமான வடிவமும் கிர்தா மீசையும், சரிகைத் துப்பட்டாவும், கையில் தங்கச் சங்கிலியும் அவனைக் காரை வீட்டுக்காரர் என்று சொல்லிவிடும்.

ஒரு நாள் வயற்காட்டிலிருந்து வேலன் ஒய்யாரமாக ஒற்றையடிப் பாதையில் நடந்து வந்து கொண்டிருந்தான். அவனுக்கு அன்று நல்ல வியாபாரம். மடி நிறையச் சில்லரையுடன் வாய் நிறையச் சிரிப்புடனும் சீட்டியடித்துக்கொண்டு அசைந்து அசைந்து ஆடிக்கொண்டே வீட்டை நோக்கி வந்துகொண்டிருந்தான்.

வேலன் வீடுவந்து சேர்ந்ததும் அவன் வீட்டினுள்ளே ஏதோ புது சப்தம் கேட்டதைக் கண்டு திகைத்து நின்றான்.

அப்பொழுதுதான், "என்னடா ஆடி! உன் மவனுடைய போக்கு உனக்குக் கெடுதலுண்டுபண்ணும் போலிருக்கு. அந்தக் காரைக்கார சிங்காரனுக்கு இவன் மேலே ஒரு கண்ணு. எங்காவது சமயம் கிமயம் கிடைச்சா வைச்சு வாங்கிடுவான். கொலைகூட விழுந்தாலும் விழும்" என்று அவனுடைய தகப்பனிடம் சொல்லிக்கொண்டிருந்தான் அவனுடைய மாமன்.

அதைக் கேட்ட ஆடியும் "என்னடா அது. இந்தப் பயலுக்கும் சிங்காருக்கும் சண்டை எதுக்குடா? என்னையிலே யிருந்து இந்த வளக்கம்" என்று கேட்டான்.

இதைக் கேட்டுக்கொண்டே வேலன் வீட்டுக்குள் நுழைந்து தன் நயினாவுக்கு முன் நின்றான்.

"என்ன நாயினா இது! என்னை என்ன அவ்வளவு அயோக்கியன்னு நினைச்சுட்டாயா? அவன்கூட வம்புச் சண்டைக்குப் போக நான் பைத்தியமா என்ன?" என்று படபடவென்று பேசினான் வேலன்.

"டேய்! என்னவோ அதெல்லாம் எனக்குத் தெரியாது. நம்ப மச்சான் என்ன பொய்யா சொல்லப்போறாரு. ஏதேனும் இருக்கும். இல்லாட்டிப்போனா பேச்சு வருமா?

"அதெல்லாம் இல்லே—மாமா! அந்தக் குட்டி வள்ளி யிருக்கா இல்லேயோ? அவமேலே இந்தப் பயலுக்கு ஒரு நோக்கம். அந்தச் சிங்காரப்பனுக்கும் ஒரு கண்ணு. ஆனா அவளுக்கு இந்த பயமேலே தான் ஆசை. இதனாலே அவன் இவனைக் கறுவிக்கிட்டே யிருக்கான். இதுதான் சங்கதி.

"ஓஹோ அப்படியா! சங்கதி எனக்குத் தெரியாதே. எத்தனை நாளா இந்த நாடவம். அந்தக் குடிகாரப் பயல் கூடவெல்லாம் இந்தமாதிரி விவகாரம் வைச்சுக்காதேடா! எங்காவது சமயம் கிடைச்சா தலையைத் திரிகி போட்டுடப்போறான்.

"சரிதான். அவனாவது என் தலையைத் திருகறதாவது. எல்லாம் ஒண்ணும் நடக்காதுங்கறேன். நீங்க ஒண்ணுக்கும் கவலைப்படாதேங்க. நாயினா! இந்த வேலனிடம் எந்தப் பயலும் வாலாட்டப் பயப்புடுவான்" என்று சொல்லிக்கொண்டே அவர்களை விட்டு விட்டு மாட்டுக் கொட்டிலுக்குப் போய் விட்டான். அத்துடன் சம்பாஷணையும் முடிவடைந்து விட்டது.

வேலனும் இந்தப் பேச்சிலிருந்து சிங்காரத்திற்குத் தன் மேல் ஆங்காரமும், அசூயையும் இருக்கிறது என்றும், வெளிப்பகட்டிற்குத்தான் தன்னிடம் பேசுகிறான் என்றும் தெரிந்து கொண்டான்.

* * *

புரட்டாசி மாதம். வட காசி ஆவணித் தெரு, ஆவுடையம்மன் கோவில் அல்லோலகப்பட்டுக் கொண்டிருந்தது.

தசரா. அந்த சுற்றுப் புறத்தி லேயே அங்குதான் வெகு விம ரிசையாகக் கொண்டாடப்படும்.

வாடியூர் ஆடிமுத்துவின் நாதஸ்வரமும், கிலியூர் பங்குனிப் படையாச்சியின் கரகக்குட ஆட்டமும், மிகவும் பிரசித்தம். அவைகளைப் பார்க்க அயலூரி லிருந்தெல்லாம் ஜனங்கள் கூட் டம் கூட்டமாக வருவார்கள்.

கடைசிப் பத்தாவது நாளன்று அம்மன் ஊர்வலம் வருவாள். அதைத் தொடர்ந்து சிலம்ப ஆட் டக்காரர்களும், வாள்வீச்சுக் காரர்களும் தங்கள் வல்லமை யைக் காட்டுவார்கள்.

அவர்களையும் அந்த ஆட்டத்தை யும் பார்க்க ஊர்வாசிகள் எல் லோரும் உறங்காமல் முழித்துக் கொண்டிருப்பார்கள். அவர் களுக்கு அன்றுதான் சந்தோஷ தினம். ஒவ்வொருவரும் தாங் களே பெரிய ஆட்டக்காரர்கள் போல் பேசுவார்கள்.

வட காசியில் இரண்டு பெரிய சிலம்பாட்டச் சங்கங்க ளிருந் தன. ஒன்று ஒட்டைப்பிடாரம் ஒதுவா மூர்த்தியினுடையது. ஓதுவாருடைய சிலம்புப் பள்ளிக் கூடம்தான் பெரியதும், பிரசித்த மானதும். அவருடைய சிஷ்யர் களில் ஒருவனாக இருந்தான் வேலன். மற்ற ஒன்று மந்திர சாண்டியபுரம் கார்த்திகைத் தேவனின் சிலம்புச்சாலை. இரண் டுக்கும் எப்பொழுதும் சண்டை யும் சச்சரவும்தான்.

ஒதுவா மூர்த்தியினுடைய ஆட்கள், ஆவுடையம்மன் கோவி லைச் சேர்ந்தவர்கள். கார்த்தி கைத் தேவனின் கூட்டம், உல கம்மன் கோவிலைச் சேர்ந்தது. உலகம்மன் கோவிலில் விஜய தச மிக்கு மறுநாள்தான் கொண் டாட்டமும், சிலம்பாட்டமும்.

ஆகவே அவர்கள் யாவரும் ஆவுடையம்மன் கோவிலின் ஆட் டத்தைப் பார்க்க வந்துவிடு வார்கள்.

அவர்களுடன் சேர்ந்து கொண்டு வேடிக்கை பார்ப்பதில் சிங்காரப்பனும் ஒருவன். அவ னுக்கு ஓதுவனரைக் கண்டால் பிடிக்காது.

வேலன்தான் ஓதுவனர் கூட்டத்தை நடத்தி வருவான். அதைப் பார்க்கவே அநேகர் விரும்புவார்கள்.

விஜய தசமியும் வந்தது.

தசரா அன்று மாலை 5 மணி யிருக்கும். அம்மனுக்கு அலங் காரம் எல்லாம் முடிந்தது, வெளிக் கிளம்பத் தயாராகிவிட் டாள். மணி ஆறுக்குப் பல்லக்கு கிளம்பிவிடும்.

அப்பொழுது வேலன் தன் னுடைய வீட்டில் குளித்துத் திருநீறு இட்டுக்கொண்டு கச்சை கட்டி சங்கிலி யெல்லாம் போட்டுக்கொண்டு வெளிக் கிளம்பத் தயாரானன். அப் பொழுது அங்கு எதேச்சையாக வள்ளி வந்தாள்.

"என்ன வள்ளி! எது கோவி லுக்குப் போவலையா? இங்கு என்ன விசயமாக வந்தாய்!"

"இல்லை மச்சான் ஊரிலே முளுக்க நம்பளப்பத்தி என்ன வெல்லாமோ பேசிக்கருங்களே அத்தெல்லாம் தெரியுமா உங்களுக்கு."

"தெரியாமலென்ன."

"இன்னிக்கு நீங்க சிலம்பு விளையாடப் போறீங்களா?"

"ஆமாம். அதுக்கென்ன சந்தேகம்."

"மச்சான்! தயவு செய்து இன்னைக்கு நீங்க எங்கையுமே போகவேண்டாம். வெளி

யூருக்கு எங்கானும் போயிருங்க ளேன். வியாபார விசயமா அவசரமாய் கிலஞ்சிக்குப் போயிருக்காருன்னு சொல்லிட றேன்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்.

"என்ன நடக்கப் போகிற தாம்? நான் பயந்து ஓடறபேடிப் பயலா என்ன?"

"அதுக்கு இல்லே மச்சான். சிங்காரப்பன் உங்களை வம்புச் சண்டைக் கிழுக்கப்போருனும். அவனேடே நீங்கள் சிலம்பு வீச முடியாதாம். உங்களிடம் வீராப்புப் பேசி உங்களோடே கம்பு விளையாடப் போருனும். அப்பொழுது அவனுடைய ஆட் கள் தண்ணிப்பாம்பை கூட்டத் திற்குள் விட்டு கலாட்டா செய் வாங்களாம். அப்பொழுது நீங்க திகைச்சு நிப்பீங்க இல்லே, அச் சமயத்தில் அவன் கம்பிலுள்ள குத் தீட்டியாலே உங்களை குத்தி விடுவானும். இந்த மாதிரி அவங்க பேசி வைச்சிருக்காங்க. எனக் கென்னவோ பயம் பிடிச்சுக் கிடுத்து."

"வள்ளீ! போதும் சங்கதி சொன்னது. இந்த வேலனுடைய சாமார்த்தியத்தைத்தான் பாரேன். இன்னிக்கு எல்லாமே திரும்பிடப்போறது. அது சரி. ஒங்க அப்பாரு சம்மதிச்சாரா?"

"அது தானே அவரண்டை கேக்க முடியலே. அவருக்கு அந்தக் கரைக்காரப் பயமேலே தான் நோக்கம்."

"சரி வள்ளீ. இன்னிக்கே எல்லாத்துக்கும் ஒரு முடிவு கொண்டு வந்துடறேன். சிங்கா ரத்தை கம்புலே தண்ணிகாட்டி அழவிட்டு விட்டு நேரே ஸ்டேச னுக்கு வந்துடறேன். நீ மூன்னுடி அங்கே வந்துடு. பின்னே நடக்கருப்போலே பார்த்துக்கிடுவோம். இந்தக் கருவாட்டுப் பயல்கள் ஊரி லேயே இருக்கவே வேண்டாம்."

"சரிங்க மச்சான்! எல்லாம் முருகச் சாமியினுடைய இச்சை."

"ஆமாம் வள்ளி! வள்ளிக் கணவன் பேரைச் சொல்லிண்டு இதோ போறேன், மறந்து டாதே!"

"என்ன மச்சான்?"

"வள்ளி"

"நான் வர்ரேன்"

வள்ளி சென்றுவிட்டாள். வேலனும் கையில் கம்பும், இடுப் பில் பீச்சுவாயுமாக வீரன்போல் கிளம்பிவிட்டான்.

* * *

சிலம்பக் கூட்டம் கிளம்பி விட்டது. ஆவணித் தெரு கீழ முக்குக்கு வந்து நின்று முதல் ஆட்டத்தை ஆரம்பித்தது.

கற்றுக்குட்டிகள் எல்லாரும் கம்பும், சுருள்கத்தியும் வீசி கூட்டத்தை உற்சாகப்படுத்தி னர். கூட்டம் கள் வெறி கொண்டதுபோல் குதுகலித்துக் கரகோஷம் செய்தது.

கரகோஷத்தின் நடுவே வேலன் கையில் கம்புடன், மார் தட்டிக்கொண்டே தெரு மத்தி யில் வந்து நின்றான். அவனேடு விளையாட அவனுடைய கூட்டத் தில் முத்து ஒருவனல்தான் முடி யும். அவனும் வேலனைக் கும் பிட்டுவிட்டு அவனுக்கு எதிராக நின்றான்.

அப்பொழுது கூட்டத்தின் மத்தியிலிருந்து "சமசோடியுடன் விளையாட முடியுமா?" என்று யாரோ கத்தினர்கள்.

உடனே வேலன் தன் அரும்பு மீசையைத் தடவிக்கொண்டே முத்துவை அப்பால் போகச்

சொல்லி; சோடியைக் கூப்பிட்டான்.

சிங்காரப்பனும் சிரித்துக் கொண்டே கையில் தன் கம்புடன் வேலன் முன் நின்றான்.

"என்ன அண்ணே! ரொம்ப சந்தோசமா யிருக்காப்பிலே தோணுதே. மொந்தைக் கள்ளோடே தண்ணிப் பாம்பையும் முளுங்கிட்டியா?" என்று கேலியாகச் சொல்லி அவனுடைய சூழ்ச்சி தனக்குத் தெரியும் என்று காட்டிக்கொண்டு கம்பை மேலிருந்து கீழ் வரை தடவிக் கொடுத்தான்.

சிங்காரப்பனுக்கு இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பாம்பை மிதித்தவன் போலாகி விட்டான். இருந்தாலும், பீதியடைந்ததைக் காட்டிக் கொள்ளாமல் கிர்தா மீசையை முறுக்கி விட்டுக்கொண்டே ஹுங்காரம் செய்தான்.

இருவரும் கை கலந்தனர். கம்புகள் சட சடவென மோதிக் களித்தன. சிங்காரத்திற்குக் கை நடுங்கியது. வேலன் அதைக் கவனித்துக் கொண்டு தாவித் தாவிக் குதித்துக் கம்பு வீசினான். சிங்காரப்பன் ஒவ்வொன்றையும் தடுக்கி மின்னலைப்போல் 'பளீர் பளீர்' என்று எதிர்த் தாக்கல் கொடுத்தான்.

சண்டை மும்மரமாக நடந்து கொண்டிருந்தது. இருவரையும் அவர்களுடைய தோழர்கள் ஊக்கப்படுத்தினர்கள்.

"வேலா விடாதே. இடத்திலே நுழைஞ்சு கணைக்காலை அடி." "சிங்காரம் துள்ளிக் குதித்து முட்டுலே ஒரு போடு போடு" என்று இரு கட்சிக்காரர்களும் சப்தம் செய்து இருவருக்கும் கோபத்தையதிகப்படுத்தினர்கள்.

அதே சமயத்தில் "பாம்பு," "ஐயோ பாம்பு" என்ற கூக்குரல் கூட்டத்தினின்று கிளம்பவே ஜனங்கள் கலவரமடைந்தனர்.

அப்பொழுது சிங்காரம் கம்புக்குள் மறைத்து வைத்திருந்த ஈட்டியை வெளியெடுத்து வேலனை நோக்கி வீசப்போனான். இதை எதிர்பார்த்துக்கொண்டிருந்த வேலன் குனிந்து கொடுத்துக்கொண்டு கூட்டத்திற்குள் நுழைந்துவிட்டான்.

அச் சமயத்தில் "ஐயோ செத்தேனே! வேலா! இப்படிப் பழி வாங்கிட்டையே" என்று கத்தின சப்தம் கேட்டது. எல்லோரும் திகைத்துப் பார்த்தனர்.

சிங்காரப்பன் குத்துண்டு கிடந்தான். அவனுடைய உடலிலிருந்து ஓடிய உதிரம் அந்தச் செவ்வானத்தை ப்ரதி பலித்தது.

தசராக் கூட்டம் இப்படியாகக் கலைந்து விட்டது. வேலன்தான் குத்திவிட்டான் என்று நினைத்து அவனைப் பிடிக்க எல்லோரும் ஓடினர்கள்.

போலீஸும் வந்து விட்டது.

ஆனல், வேலன் வள்ளியோடு வண்டியேறி விட்டான். வண்டியும் அவர்களிருவரையும் ஏற்றிக் கொண்டு 'கூ' என்று கத்திக் கொண்டே வடகாசி லெவல் கிராஸை தாண்டிச் சென்றது.

* * *

பத்து மாதங்கள் பறந்தோடி விட்டன.

அன்று கோர்ட்டில் ஒரே கும்பல். தசராக் கொலைக்கேஸின் தீர்ப்பு சொல்லப்படப் போகிறது. வேலனைக் குற்றவாளியா அல்லது நிரபராதியா என்று நீதிபதி சொல்லப்போகிறார்.

ஆகவே கூட்டம் இமைகொட்டாமல் அவருடைய வருகையை

எதிர்பார்த்துக்கொண் டிருந்தது.

மணி பதினென்று அடித்தது. நீதிபதி வந்தார்.

எங்கும் நிசப்தம் பரவியது.

நீதிபதி கூறினர்:

"இந்தக் கோர்ட் வேலனை நிரபராதியென்று தீர்மானித்து விடுதலை செய்கிறது."

கூட்டம் ஜேஜே என்று வேலனைத் தூக்கிக் கொண்டு சென்று மறைந்தது.

* * *

மறுநாள், 'தினமலர்' செய்தித்தாளின் முன் பக்கத்தில் கொட்டை எழுத்தில் "வீரவேலனின் விடுதலை" என்று அச்சிடப்பட்டிருந்தது.

அதன் கீழ் பின் வருமாறு செய்தி இருந்தது.

......"கூட்டம் கலவரமடைந்தவுடன் சிங்காரம் வேலனைக் குத்தயத்தனித்தான். ஆனல் வேலன் குனிந்து கூட்டத்திற்குள் நுழைந்து விட்டான். அப்பொழுது அவன் கையிலிருந்த கம்பு தட்டப்பட்டு சிங்காரத்தின் கம்பின் மேல் விழுந்தது. அதனல் அந்தக் கம்பு திரும்பி ஈட்டி அவனுடைய மார்பில் பாய்ந்து விட்டது. வேலனுக்கு இது ஒன்றும் தெரியாது. ஆகவே வேலன் நிரபராதியெனத் தீர்மானித்து அவனை விடுதலை செய்தனர்.

இந்தச் செய்தி ஊரிலுள்ள எல்லோருக்கும் சந்தோஷம் கொடுத்தது. எல்லாரிலும் வள்ளி என்ற பெண்தான் மிகவும் சந்தோஷமடைந்தவள்.........அவர்களிருவரும் மணம் செய்து கொள்ளப் போகிறர்களெனத் தெரிகிறது. [ந.நி] ....

சுபம்



[இன்னும் பதினறு வயது பூர்த்தியாகாத இப் பெண் மிகப் பெரிய சமூகத் தீமையைக் குறித்து தீவிரமாக சிந்தித்து எழுதியிருக்கிறள். படித்துப் பாருங்கள்.]

மாப்பிள்ளை முறுக்கு

குமாரி எம். சியாமளா

ஈடித் ஸிட்வெல் என்னும் ஆங்கிலக் கவியரசி "பன்றித் தொடை எலும்பும் இருதயமும்" என்ற உன்னத கவிதை புனைந்திருக்கிருர்.

ஒரு நன்றி மறந்த மகன் தன் வைப்பாட்டியைச் சந்தோஷப் படுத்தத் தன் தாயைக் கொன்று அவள் இதயத்தைக் கொண்டு செல்கிருன். கடுங்கோடை. இதயம் கையிலிருந்து துள்ளிக் கீழே விழுகிறது. மகனுக்குக் கோபம் வருகிறது. இதயம் பேசுகிறது: "என் ஆசை மகனே, உன் கால் வெப்பத்தில் கொப்பளித்து விடாதபடி உன் காலடி விழுமிடத்தில் விழுந்து சூட்டைக் குறைக்க முயல்கிறேன். அதற்காக என்னைக் கடிந்து கொள்ளாதே."

இது கவியின் கற்பனைதான். "பெற்றமனம் பித்து, பிள்ளை மனம் கல்லு" என்பார்கள். அதை "மாப்பிள்ளை மனம் கல்லு" என்று மாற்றியமைத்தால் இந்தக் கலிகாலத்திற்குமுழுதும் பொருந்தும். ஈஸ்வரன் கஷ்டப்படுவதற்கென்று தாயையும் கஷ்டப்படுத்துவதற்கென்று மாப்பிள்ளையையும் சிருஷ்டித்திருக்கிருரோ என்றுகூட நான் சில சமயங்களில் நினைக்கிறேன்.

"மருமகனுக்கு ஆக்கிய கறியை மகனுக்கிட்டு வயிறெரிந்தாளாம்" என்று ஒரு கிராமியப் பழமொழியுண்டு. மருமகன் வந்தால் வீடே அமளிப்படுகிறது. அவனைத் திருப்தி செய்விக்க வீடே முனைந்து நிற்கிறது. ஆனல் இந்த மாப்பிள்ளை என்னும் பிராணிக்கு 'கிறுக்கு' ரொம்ப ஜாஸ்தி. "ஏதடா, நம் மாமனர் கொடுத்தா நமக்கு குறையப் போகிறது. நாமாகச் சம்பாதிக்க வேண்டும் என்கிற அறிவே கிடையாது. ஆயிரம் இரண்டாயிரம் என வரதட்சணை வாங்குவதோடு நிற்பதில்லை. அதற்குப் பிறகு கைக்கு வைரமோதிரம், தங்கக் கடியாரம், மோட்டார் சைகில் இத்தியாதி சௌகர்யங்களுக்கும் மனைவிகளின் பெற்றோரைத் துன்புறுத்துகிருன். இதில் படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் வித்தியாசமேயில்லை. தோட்டக்கார முனிசாமி தீவளிக்காக தன் மாமனர் பட்டுக்கரை வேஷ்டி எடுக்கவில்லை என்று பார்வதியை ஒதுக்கி விட்டு வேறு மணம் செய்து கொண்டுவிட்டான். எம். ஏ. பாஸ் செய்த ராமசாமி தன் மாமியார் தான் சேமித்து வைத்திருக்கும் பணத்தில் இரண்டாயிரம் ரூபாய் தான் மோட்-

டார்கார் வாங்கிக்கொள்ள உதவவில்லை என்று தன் மனைவி வத்சலாவின் வாழ்க்கையைத் துன்பம் நிறைந்ததாகச் செய்கிறான். ரகுராமனுக்கு இருபது வேலி பூஸ்திதியும் லட்ச ரூபாய்க்குக் கொடுக்கல் வாங்கலும் இருக்கிறது. தன் நாட்டுப் பெண் பத்மாவுக்கு அவள் தகப்பனார் சவரன் என்பது ரூபாய்க்கு வாங்கி இரண்டு வடம் பொன் சங்கிலி போடவில்லை என்று குறை. பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் பத்மநாபன்தான் சீமைக்குச் சென்று பெரிய வைத்திய பரிட்சை கொடுத்து வந்திருப்பதையும் தன் மனைவிக்கு வாரமொரு பொன் சங்கிலி செய்து கொடுக்கும் சக்தி தனக்கிருக்கிறது என்பதையும் மறந்து அவளைப் பலவாருகத் தூஷித்து, அவமானப்படுத்தி பலவித கொடுமைகளுக்கு உள்ளாக்கும் தன் வாழாவெட்டி சகோதரியுடன் ஒத்துழைக்கிறான்.

இத்தகைய கொடுமைகள் நவீன நாகரீகம் பரவி காதல் விவாகம் செய்துகொண்ட சதிபதிகளிடையே விசேஷமாக இல்லை என்றெண்ணலாம். ஆனால் மனித உள்ளத்தில் தூய்மை இல்லாததால் இக்காதல் கல்யாணங்களிலும் பலவித மனஸ்தாபங்களும் கொடுமைகளும் இல்லாமற் போகவில்லை. கலாசாலையில் ஒன்ருகப் படித்து ஒருவரை ஒருவர் நன்ருக அறிந்துகொண்டு பின் மணந்தார்கள் சரஸ்வதியும், ஸ்வாமிநாதனும். ஆனால் ஏற்கனவே பல காதல் நாடகங்களில் நடித்திருந்த ஸ்வாமிநாதனுக்குத் தன் மனைவி அவளுடைய ஐம்பது வயது வளர்ப்புத் தகப்பனேடு அன்புடன் அளவளாவுவது சகிக்கவில்லை. 144 போன்ற சட்டங்கள் பல இயற்றினான். சரஸ்வதிக்கு மண வாழ்க்கை புளித்து தனி வாழ்க்கையே இன்ப மயமானது என்று தோன்றி விட்டது.

மாப்பிள்ளைக் கொடுமையால் பெரிதும் துன்பப்படுகிறவள் தாய்தான். பெண் தன் கஷ்டங்களை மற்றெவரிடமும் எடுத்துரைக்கமாட்டாள். தாய்மார்களுக்கே பிள்ளைகளைவிட பெண்களிடம் வாத்சல்யம் அதிகம். ஆகையால் அவர்கள் மனோவேதனைக்கு அளவேயில்லை. ஆனால் அது குறைவதற்கோ நிவர்த்திக்கப்படுவதற்கோ பிரத்தியேகமான தனிப்பட்ட முயற்சிகளைத் தவிர கூட்டுக் கிளர்ச்சி ஏற்படவேயில்லை.

பல காரணங்களை முன்னிட்டு மாப்பிள்ளை சரக்குக்கு இப்பொழுது பிரமாத கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. சாரதா சட்டம் காரணமாக விவாக காலம் ஒத்தி வைக்கப்படவே கல்யாணமாகாத பெண்கள் மலிந்து விட்டனர். பணப் பெருக்கம் காரணமாக ரூபாய்க்கு மதிப்புக் குறைந்து பொருள்களின் விலை ஐந்தாறு மடங்கு ஏறி விட்டது போல, கல்யாணமாகாத பெண்கள் அதிகமாகி மாப்பிள்ளை சரக்குக்கு ஐந்தாறு பெண்களின் விவாகத்துக்காகும் செலவு கொடுக்க வேண்டி வந்து விட்டது. மற்றப் பொருள்களுக்கெல்லாம் சுய அறிவு கிடையாது. ஆறறிவு படைத்த மனித இனத்தைச் சேர்ந்த இந்தப் பொருள், தன் இனத்தை விட்டு விலகி விடுவது மிகவும் வெறுக்கத்தக்கது. அப்படி அவர்களை மனுஷ்யத் தன்மையிலிருந்து ஒதுங்க விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதுதாயுடையவும் சகோதரியுடையவும் கடமையாகும்.



தாத்தாவின் கடிதம்

குழந்தை குருவம்மாளுக்கு தாத்தா ஆசிபூர்வமாக எழுதிய மாதாந்திரக் கடிதம். "சிறிதே பழகினும் பெரியோர் கேண்மை, இருநிலம் பிளந்தே ஏழுலகும் வேர்கொளும். பெரியோர்களெல்லாம், வணங்கும் தெய்வக் குழந்தையின் கேண்மைக்குக் கேட்கவும் வேண்டுமா? மாதம் பிறந்தால் கடிதம் எழுதாவிட்டால் மனம் கேட்காது.

நினைப்பும் மறப்பும் அற்றுப் போனலன்றி ஆனந்த வீடு கிடைக்காது, என்று நூல்கள் சொல்லுகின்றன. கண்ணன் எனும் குழந்தையைப் பாரதியார் அனுபவித்தார். மனம் நேசம் மறக்கவில்லையாம். ஆசை முகம் மறந்துவிட்டதாம். கண்ணனை நினையாமலும், மறக்காமலும் அதுவே பரமசுகம். அது எப்படி? மறந்ததை நினைத்து, நினைத்ததை மறப்பது உலகியல்பு. நினைத்ததை நினைக்க முடியாது. ஏனென்ருல், நினைத்துக் கொண்டே இருக்கும் ஒரு பொருளை, மேலும் நினைப்பது எப்படி? மறந்து நின்ற பொருளை நினைக்கலாம். மறந்த கண்ணனை நினைத்து மறப்பு அறவேண்டுமாம். நினைத்த கண்ணனை நினைத்தே, அதாவது இடைவிடாமல், மறக்காமல் நினைத்துக் கொண்டேயிருந்தால், நினைப்பும் அற்றுப் போய்விடும். இப்படி நினைப்பும் மறப்பும் அற்றுவிட்டால், பக்தன் கண்ணனே ஆய் விடுகிருன்.

அதேமாதிரிதான், தாத்தாவும். குழந்தைகளை நினைத்து நினைத்து தாத்தாக்கள் குழந்தைகளாய் விடுகிருர்கள். தாத்தாவை விடாமல் நினைத்த குழந்தைகள், பாட்டியாவதில்லை. அவர்கள் குமரியாகவே இருப்பார்கள். அது தாத்தாவின் ஆசி. இதில் சந்தேக மேற்பட்டால், கண்ணாடியின் முன் நின்று நீ உன்னையே பார்த்துக்கொள்.

அளவற்ற ஆசிர்வாதம்
அன்புள்ள தாத்தா

✲

ரகஸ்யம்!

உன்னுடைய மனைவியை நீ மிகப் பிரியமுடன் நேசித்தாலும், உனக்குத் தெரிந்ததை எல்லாம் அவளிடம் சொல்லிவிடாதே. சிலதைச் சொல்லி மற்றவைகளை மறைத்து விடுவதுதான் நல்லது. —"ஹோமர்"

அறுசுவை

ருக்கு

ராஜி: என்ன ருக்கு பண்ணிக்கொண் டிருக்கிறாய்? இரும்பு பாணலியா தேய்த்துக்கொண் டிருக்கிறாய்?

ருக்கு: ஆமாம் மாமி. வேலைக்காரி வெள்ளையாய்த் தேய்த்து வைக்க மாட்டேனென்கிறாள். நாமே தேய்ப்போமே என்று தேய்க்க ஆரம்பித்தேன்.

ராஜி: ஏன் டிபனுக்கு நாழிகையாகி விட்டதா? அந்த பாணலி துருவில்லாமே வெளுப்பா இருப்பதற்கு நான் செய்வதைச் சொல்லட்டுமா?

ருக்கு: சொல்லுங்கோ மாமி. பிசுக்கும் துருவும் கூடின பாணலியில் ஏதாகிலும் செய்யவும் கூசுகிறது.

ராஜி: பாணலியில் காரியம் ஆனதுமே சூடாக இருக்கும்போது கொஞ்சம் உப்பை 'பட பட' வென்று வெடிக்கவிட்டு கொஞ்சம் புளிச்ச மோரையும் விட்டு பாணலி பூராகவும் தடவு. பிசுக்கு, துரு, எல்லாம் சுத்தமாகப் போய்விடும். நன்றாகத் தேய்த்து மறுபடியும் துருப்பிடிக்காம லிருக்க எண்ணெய்த் துணியால் துடைத்து வைப்பாயேயானால் பாணலி வெகு நாட்களுக்குச் சுத்தமா யிருக்கும். என்னமோ பருப்பெல்லாம் நனைத்திருக்கிறாயே. அரைக்கணமாக்கும்! என்ன டிபன் செய்யப் போகிறாய்?

ருக்கு: உருளைக்கிழங்கு போண்டா போட்டு, கொக்கோ பருபியும் செய்யலாமென உத்தேசம்.

ராஜி: உருளைக் கிழங்கு போண்டா நீ எப்படி செய்வாய்?

ருக்கு: கடலைப் பருப்பு ஒரு ஆழாக்கும், உளுத்தம் பருப்பு கால் ஆழாக்கும், துவரம் பருப்பு கால் ஆழாக்குமாக மூன்று தினுசுகளையும் ஊற வைத்திருக்கிறேன். கல்லரித்து, நன்றாக களைந்து உப்பு, பெருங்காயம், மிளகாய் வத்தல், பெரிய உருளைக் கிழங்குகள் ஆறு. எல்லாவற்றையும் சேர்த்து கல்லுரலில் அரைத்து, கொத்தமல்லி, கருவேப்பிலை முதலியவைகளைப் பொடியாக நறுக்கிக் கலந்து சிறிய உருண்டைகளாக உருட்டி எண்ணெய் காயவைத்து போண்டாவாகச் சுட்டெடுக்க வேண்டும்.

ராஜி: ஆமாம் ருக்கு. உருளைக் கிழங்கை வேகவைக்க வேண்டாமா?

ருக்கு: வேண்டாம் மாமி. நன்றாக அலம்பி பச்சையாகத்

தான் பருப்பு தினுசுகளுடன் சேர்த்து அரைக்க வேண்டும்.

ராஜி: நீ சொல்வதைப் பார்த்தால் எல்லாவித காய் கறி தினுசுகளிலும் போண்டா செய்யலாம் போலிருக்கே.

ருக்கு: காரட், பெங்களூர் கத்தரிக்காய், கீரை தினுசுகள, நூக்கோல், முட்டைக்கோஸ் முதலிய காய் கறி தினுசுகளிலும் செய்யலாம். எங்கப்பாவுக்குப் பாவக்காய்என்றால்ரொம்பப் பிடிக்கும். அதற்காகப் பாவக்காயை பொடியாக அரிந்து நாலைந்து போண்டா அவருக்கு மாத்திரம் தனியாக வேகவைக்கப் போகிறேன்.

ராஜி: அப்படி யென்றால் கதம்ப போண்டாகூட செய்யலாமென்று சொல்லு.

ருக்கு: ஆமாம். எல்லா காய் கறி தினுசுகளையும் பொடிப் பொடியாக நறுக்கி வைத்துக் கொண்டு, ஊறவைத்து அரைத்த விழுதுடன் கலந்து போண்டாவாகச் சுட்டெடுக்கலாம்.

ராஜி: கொக்கோ பருபி எப்படி செய்யப் போகிறாய்?

ருக்கு: சர்க்கரையை நன்றாகக் கம்பிப் பாகுசெய்துகொண்டு தேங்காய்த் துருவலைப் போட்டு கிளற வேண்டும். பாத்திரத்தில் ஒட்டிக் கொள்ளாமல் வரும் சமயத்தில் கோக்கோ பொடியைக் கலந்து கொஞ்சம் நெய் கலந்து கிளறி தாம்பாளத்தில் கொட்டி கீறுகள் போடணும். அவசரப்படாமே நான் எல்லாம் செய்யும் வரைக்கும் இருந்து பார்த்துக் கொண்டு போங்கோ.

ராஜி: இல்லே ருக்கு. எனக்கு வீட்டிலே வேலை யிருக்கு. நாளைக்கு சாவகாசமாய் வருகிறேன்.

ருக்கு: மாதிரிக்கு பருபி வைத்திருக்கிறேன். போய்வாருங்கோ.



புதுமணத் தம்பதிகளுக்கு!

மாமனார் மாமியார் தொந்திரவு கூடாது. தேவையான உபகரணங்களும், அழகும் அமைதியும் கொண்ட வீடு. மனைவி தன் கணவன் வருமானத்துக்குத் தக்கபடி வாழ்க்கைத் தரத்தை அமைத்துக் கொள்ளுதல். மனைவிக்கு உரிய சுதந்திரம் அளிக்கப் படவேண்டும். திருமணத்தின் பயனை பூரணமாக அனுபவிக்க இருவரும் ஆதுரத்துடன் முயற்சிக்க வேண்டும். தம்பதிகள் இன்பதுன்ப அனுபவங்களில் சரிசமமான பங்காளிகளா யிருக்கவேண்டும். அமிதம் கூடாது.

—'ஸ்ரீமதி அவைட்'

மிஸ். என். ராமன்

காசிக்குப் போனாலும் சனீஸ்வரன் விடமாட்டான் என்று பழமொழி. உலகம் பூராவும் சுற்றினாலும் விஷயம் என்ன ? படித்துப் பாருங்கள்.

என் தம்பிகள் ராஜூவும், ஹரியும் பம்பரம் விட்டு விளையாடிக்கொண்டிருந்தார்கள். ராஜூவின் பம்பரம் அசைவற்று தூங்கிக்கொண்டிருந்தது. ஹரியின் பம்பரம் ராஜூ பம்பரத்தைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தது. அப்பொழுதுதான் ரங்கா மாமியும் அவள் கணவனும் ஊரெல்லாம் குடியிருக்க வீட்டுக்காக சுற்றிவிட்டு வந்து தாழ்வாரத்தில் அமர்ந்திருந்தார்கள். பம்பரங்களும் ரங்கா மாமியும் அவள் கணவனுமாக என்னை ஸ்வப்ன உலகிற்கு அனுப்பிவிட்டன.

எனக்குக் குடியிருக்க வீடில்லை. வயிறு நிரப்ப சாப்பிட சோறில்லை. அழகாக உடுக்க உடையில்லை. இந்தத் தரித்திரம் பிடித்த சென்னையை விட்டு ஒழிந்தால்தான் விமோசனம்.

இரயிலேறி ஐக்கிய இந்தியா முழுதும் சுற்றினேன். எங்கும் இதே பல்லவிதான் கேட்டது. இந்தியா பிச்சைக்கார தேசம் என்று மிஸ் மேயோ எப்பவோ எழுதினாளே. இதைவிட்டு வேறு தேசம் சென்று பார்ப்போம் என்று கப்பலேறினேன். பிரிட்டன் சேர்ந்தேன். முதலில் என் கண்களைக் கவர்ந்ததோர் கொட்டை எழுத்து விளம்பரம்.

‘‘யுத்தம் முடிந்துவிட்டது. ஆனால் பொருளாதாரச் சிக்கல் தீரவில்லை. உணவுப் பொருட்களை சிக்கனப்படுத்துங்கள். ஒரு ஆடையை வாங்குமுன் அது உமக்கு அவசியமா என்றாலோசித்துப் பாருங்கள். குளிரில் நடுங்கும் ஒருவரை நீங்கள் காப்பாற்றக்கூடும்.’’

கப்பலை விட்டு இறங்கியதும் எங்கு செல்லலாம் என்று யோசித்தேன். எனக்குப் பத்தடி தூரத்தில் ஒரு பெண்மணி நின்றிருந்தாள். எங்கேயோ பார்த்தாற் போலிருந்தது. ஆமாம், சூயெஸ்ஸிலிருந்து நாங்கள் பிரமிட் கோபுரங்களைக் காணச் சென்றபொழுது அவளும் எங்கள் கோஷ்டியிலிருந்தவள்தான். என்னைக் கண்டு அவள் கண்கள் அகல விரிந்தன.

‘‘நீங்கள் மிஸ்...’’ என்று தன் மாந்துளிர் போன்ற கைகளை நீட்டிக்கொண்டு என்னிடம் வந்தாள்.

"ஆமாம், மிஸ். ராமன்—சீதா ராமன். சீதா என் பெயர். ராமன் என் வளர்ப்புத் தகப்பனர் பெயர். நீங்கள் உலகம் சுற்றும் அமெரிக்க கோஷ்டியைச் சேர்ந்த மிஸ். ராபின்சன் அல்லவா?" இருவரும் அறிமுகமாய் விட்டோம். பல விஷயங்களைக் குறித்துப் பேசிக்கொண்டே ஒரு ஹோட்டலைத் தேடிச் சென்றோம்.

உலகம் சுற்றும் மிஸ். ராபின்சனிடம் நான் அறிந்தது, நான் சென்னையிலிருந்து புறப்படும்போது பாடிக்கொண்டிருந்த பல்லவியேதான்.

"இருக்க வீடில்லை.
திண்ணைச் சோறில்லை.
கட்டத் துணியில்லை."

இனி இந்த உலகில் இருப்பதே உபயோகமில்லை என்று நினைத்தேன்.

ஸ்டிரேடோ ஸ்பியரில் [காற்றிற்கும் மேலாகக் கவிந்திருக்கும் கோளம்] பறக்கும் ஆகாய விமானம் ஒன்றிலேறி மெள்ள மெள்ள இந்த உலகின் ஆகர்ஷண சக்தியைத் தாண்டி விட்டால்—ஆமாம், சந்திரனை அடைந்து விடலாம். அல்லது ஒரு ராக்கெட் தயார் செய்யலாம். ஒளிக் கிரணங்களின் வேகத்தோடு [வினடிக்கு 186000 மைல்கள்] ஒரு பீரங்கியிலிருந்து சுடப்பட்டால் பூமியின் ஆகர்ஷண பரப்பைத் தாண்டிவிடலாம். பிறகு சந்திரனின் ஆகர்ஷண சக்தி அதைத் தன்னிடம் இழுத்துக் கொண்டுவிடும்.

"அட இழவே. அந்தப் பூமியில் நாம் காற்றை சுவாசிக்கப் பழகிவிட்டோமே. அந்தக் காற்று இங்கேயில்லையே. அதோடு வெப்பமும் போதாது. எஸ்கிமோக்களால் கூட இங்கு ஜீவிக்க முடியாதே! மேலும் பூமியைவிட இங்கு ஆகர்ஷண சக்தி மிகமிகக் குறைவாயிருக்கிறதே. ஓரடி எடுத்துவைக்க முயன்றால் ககனமார்க்கத்தில் பறந்து விடுகிறோமே! சேச்சே, சந்திரலோகம் நமக்கு உதவாது."

ஆகாயத்தில் திருஷ்டியைச் செலுத்தினேன். "அதோ, சனிக் கிரகம்—நினைத்தாலே குலை நடுங்குகிறது. அதனுடைய ஆகர்ஷண சக்திக் குறைவால்தானே அதைச் சுற்றி வட்டமிருக்கிறது. சனியனைத் தேடிக்கொண்டு எந்தப் பைத்தியம் போகும்—" இப்படியே ஆராய்ந்து கொண்டு வருகையில் குருவின் மீது திருஷ்டி பட்டது.

"பேஷ்" என்று ஒரு குதி போட்டேன். குரு பலம் வந்தால் கல்யாணமாகு மென்கிறார்கள் அல்லவா? கல்யாணம் செய்து கொண்டால் கிருகஸ்தாச்சிரமம் அல்லவா? கிருகம் இல்லாமல் கிருஹஸ்தாச்சிரமம் ஏது? ஆகையால் குரு கிரகத்தில் கட்டாயம் இந்தத் துன்பங்கள் ஒன்றும் இரா என்று நினைத்தேன். உளம் பூரித்தேன் அமெரிக்கா கண்ட கொலம்பஸைப் போல.

பூமியைப்போல குருவில் காற்று சுற்றியிருக்கிறது. மேக மண்டலங்களிருப்பதால் ஜலமும் இருக்கும். காற்றும் ஜலமும் இருப்பதால் செடி கொடிகளும் ஏனைய ஜீவராசிகளும்கூட இருக்கலாம். உண்மையாகவே குருக்கிரகம் கிருகஸ்தாச்சிரமத்திற்கு மிகமிக உகந்ததாக இருக்க வேண்டும்.

ஐயையோ! இந்த குருவின் ஆகர்ஷண சக்தி பிரமாதமாக இருக்கிறதே. காலை எடுத்து வைக்கக்கூட முடியவில்லையே."

"மாமா, நீங்கள்தான் எப்படியாவது பெரிய மனது பண்ணி வீடு பார்த்துக் கொடுக்கவேண்டும். எங்களால் இனிமேல் அலைய முடியாது."

என் தகப்பனர் விழித்தார்.

நான் அவருக்காகப் பேச ஆரம்பித்தேன்.

"என் மாமி, நீங்கள் இப்பொழுது இருக்கும் வீட்டிற்கென்ன?"

"அங்கே குழாயில் ஜலம் வரவேயில்லை. வீட்டுக்காரன் தனக்கு வீடு வேண்டுமென்று மனுப்போட்டு உத்தரவு வாங்கி விட்டான். நான் இந்த ஆனி மாதத்திற்குள் காலி பண்ணவிட்டால், சட்டி பானையெல்லாம் தூக்கி வெளியே போட்டு விடுவான்."

"மாமி, நான் சந்திரன், சனி, குரு முதலிய கிரகங்களுக்கெல்லாம் போய்ப் பார்த்தேன். எங்கும் இந்த வீடில்லாக் கஷ்டம்."

ரங்கா மாமி என்னை ஒரு விதமாக முறைத்துப் பார்த்தாள். பார்த்த பார்வையில் என்னென்னவோ அடங்கியிருந்தது. ஆனல் அதற்கு மேல் பேசாமல் போய்விட்டாள்.

இந்த வீடில்லாத் திண்டாட்டத்திற்கே ரங்காமாமி போன்றவர்கள்தான் காரணம். "இந்த வீட்டில் ஜலம் சரியாக வரவில்லை" என்று சொல்லிக் கொண்டு பத்து ரூபாய் அதிக வாடகை கொடுத்துக்கொண்டு இன்னொரு வீட்டிற்குப் போகிருள். அங்கு காற்று சரியாக வரவில்லையென்று இன்னும் ஐந்து ரூபாய் அதிகம் கொடுத்துக் கொண்டு இன்னொரு வீடு தாவுகிருள்.

ஒரு நாள் விஷ்ணு, சிவ தரிசனத்திற்குப் போனாராம் கருடனேறி. சிவன் கழுத்தில் ஆபரணமாய் சுற்றியிருந்த சர்ப்பம், "என்டா கருடா சுகமா?" என்று கேட்டதாம்.

கருடன், "அப்பா, இருக்கிற இடம்தான் சுகம்" என்றதாம்.

இந்த சம்வாதம் பொய்யா மெய்யா என்று ஒரு சர்ச்சையைக் கிளப்ப எண்ணமில்லை. நம்முடைய கஷ்டங்களில் பெரும் பாகம் நமது ஆசை காரணமாகவே உண்டாகின்றன. ஆகையால்தான் அதிருப்தி உண்டாகிறது. "ராமனிருக்குமிடம் அயோத்தி" என்ருளாம் சீதை. அதேபோல் எல்லோரும் இருப்பதைக் கொண்டு திருப்தியடைந்துவிட்டால் சுகத்தைத் தேடி கஷ்டப்பட மாட்டார்கள்.

"கஷ்டப்பட்டால் சுகம்" என்ருராம் ஒரு பெரியார். ஆமாம். சுகத்தை விட்டுவிட்டு அதைத் தேடினல் கஷ்டம் தானே? வெள்ளெழுத்துக்காரர் மூக்குக் கண்ணாடியை கைப்பிசகாய் வைத்துவிட்டுத் தேடுவது போல நாமும் சுகத்தை நமக்குள்ளேயே வைத்துக் கொண்டு சந்திரமண்டலத்திலும் சூரியமண்டலத்திலும் தேடுகிருேம்.

✲

கெடுதல்?

திருமணம் செய்து கொள்வது கெடுதலுக்குத்தானே அன்றி நல்லதுக் கல்ல. ஆனல் இந்தக் கெடுதல் வாழ்வில் இன்றியமையாதது!

—'மினாண்டர்'

[திலோத்தமா]

"இந்த வருஷம் கோடைக்கு பெங்களூர் போகவேயில்லை. முகமெல்லாம் கோடைக் கட்டிகள் வந்து கருப்பு கருப்பாய் வடுக்கள் ஏற்பட்டுவிட்டன" என்று ஒரு மங்கை எழுதுகிறாள். முகத்தினழகு கெட்டுவிட்டதற்கு கோடையை மாத்திரம் குறைகூறினால் போதாது. உங்களையும் சேர்த்துக் குறை சொல்ல வேண்டும்.

கோடைக்கட்டிகளுக்குக்காரணம் புஷ்டிக் குறைவே. நீங்கள் சினிமாவுக்கும், சோப்புகளுக்கும், பௌடருக்கும் முகப் பூச்சுகளுக்கும் வாசனைத் திரவியங்களுக்கும் செலவழித்த பணத்தில் ஒரு பாகத்தை புஷ்டியுள்ள ஆகாரங்களுக்குச் செலவழித்திருந்தால் கோடைக் கட்டிகள் அருகிலேயே வந்திராது. இதிலிருந்து இயற்கையழகை விருத்தி செய்யும் உபகரணங்களை பகிஷ்கரிக்கச் சொல்லவில்லை. சினிமாவுக்குப் போகவேண்டாமென்றும் சொல்லவில்லை. உடம்பின் போஷாக்கை முதலில் கவனியுங்கள் என்றுதான் சொல்ல வந்தேன்.

வெண்ணெய் வீசை எழு ரூபாய்தான். அதற்காக அதை வாங்காமலிருக்க வேண்டாம். தேங்காயைத் திருகி விசேஷமாக உபயோகிப்பதால் வெண்ணெயைக் குறைக்கலாம். தேங்காய் சருமத்திற்குப் பொன்னிறப் பொலிவும் கேசத்திற்கு நீளத்தையும் பளபளப்பையும் கொடுக்க வல்லது. நமது கேரள சகோதரிகளின் வனப்புக்குத் தேங்காயை ஒரு காரணமாகச் சொல்லலாம்.

கோடை காலத்தில் வியர்வை அதிகம். முகத்தில் ஒற்றியிருக்கும் பௌடர் வியர்வையுடன் கலந்து சருமத்திலுள்ள துவாரங்களை அடைத்துக் கொண்டு வியர்வை ஒழுகவும் அதனோடு காற்றில் பறந்துவரும் ஸ்டெபிலோ காக்கிக் கிருமிகள் சேர்ந்தால் கோடைக் கட்டிகள் கும்மாளத்தோடு கிளம்பி விடும்.

நான் சொல்வதைக் கேளுங்கள். பௌடர் பூசுவதற்கு முன் முகத்தைச் சுத்தமாகவும் பளபளப்பாகவும் செய்யுங்கள். அதனால் உங்கள் 'மேக்-அப்' பல மடங்கு அதிக அழகைக் கொடுக்கும்.

பச்சைப் பயறு மாவுடன் கோரைக் கிழங்கு, கஸ்தூரி மஞ்சள், மரமஞ்சள், சம்பங்கி விதை, வெட்டிவேர் இவ்வைந்தையும் பொடித்துக் கலந்து முகத்தை சிறிது வெதுவெதுப்பான நீரில் கழுவி ஒரு முரட்டுத் துவாலை

யால் பளபளப்பாகும்படி துடைத்து பிறகு உங்கள் பூச்சுகளை உபயோகியுங்கள் தேவையானல்!

இரவில் படுக்குமுன் கட்டாயம் முகத்தைச் சுத்தம் செய்ய வேண்டும். இயற்கை யன்னை. சருமத்துவாரங்கள் எப்பொழுதும் திறந்திருக்க வேண்டுமென்றே சங்கல்பம் செய்திருக்கிருள். அவை அடைபடாமல் இரவிலாவது வைத்திருப்பது மிகவும் முக்கியம்.

முகத்தைச் சுத்தம் செய்யும் போது வெப்பமான ஜலத்தில் சிறிது பேதி உப்பைக் கரைத்து அதனல் கழுவினல் நிறம் சற்று வெளுக்கும்.

முகத்தில் வடுக்கள் கருப்பாவதற்குக் காரணம் சூரிய வெளிச்சம் அவற்றின்மீது படுவதுதான். வீட்டிலேயே இருக்கும்பொழுது சாந்தைக் குழைத்து அவற்றின் மீது பொட்டு பொட்டாக இட்டு விட்டால் சில தினங்களில் மறைந்து விடும்.

உங்கள் மேனியழகை விருத்தி செய்துகொள்ள உங்கள் குறைகளை திலோத்தமாவுக்குப் எழுதுங்கள்; பிரத்தியேகமாக பதில் வேண்டுகிறவர்கள் விலாசமிட்ட தபால் கவர் அடக்கம் செய்ய வேண்டும்.

அகதிகள் இலாகா மந்திரி ஸ்ரீ மோஹன் லால் சாக்ஸேனவின் மனைவியாரும் மற்றவர்களும் அகதிகள் முகாமுக்காக ஏற்பாடு செய்கின்றனர்.

தெரிந்து கொள்ளுங்கள்

அன்னபூரணி

அகால நரை

ஸ்ரீமதி காமாட்சி, திருச்சினுப் பள்ளி.

கேள்வி: எனக்கு வயது 18. என் தலையில் அங்கு மிங்குமாக நரைமயிர்கள் தென்படுகின்றன. இதற்கு சிகிச்சை என்ன?

பதில்: பித்தாதிக்கத்தினுல் இள நரை ஏற்படும். இதற்கு ஒரு அனுபவ வைத்தியம் சொல்கிறேன். பிரதிதினம் காலை எழுந்ததும் அரை ஔன்ஸ் தென்னம் பதனி சாப்பிடவும். அதோடு கருவேப்பிலையை தினசரி ஆகாரங்களில் விசேஷமாகச் சேர்த்துக் கொள்ளவும். காலையில் ஒரு பிடி மஞ்சள் கரிசலாங்கண்ணியை நன்ருக மென்று விழுங்குவதாலும் சீக்கிரம் நரை ஒழியும். கல்கத்தாவிலிருந்து ஒரு மங்கை டாக்டர் காமகிரி அவர்களின் நரையொழித் தைலத்தை உபயோகித்து இரண்டு மாதத்தில் நரை நீங்கியதாக எழுதியிருக்கிருர்.

பொடுகு

ஸ்ரீமதி பொன்மணி

நவலபித்தியா

கேள்வி: என் தலையில் பொடுகு மிகவும் தொந்தரவுண்டாக்குகிறது. அதற்கு ஏதாவது சுலபமான சிகிச்சை உண்டா? மேனுட்டுப் பூச்சுகளில் பல உபயோகித்துப் பயனேற்படவில்லை.

பதில்: சுரப்பிகள் அதிக திணத்தை வெளியாக்கும்போது அது உலர்ந்து பொருக்குத் தட்டுகிறது. வார மிருமுறை எண்ணெய் தேய்த்துக் குளிப்பதாலும் மயிரை நன்ருக பிரஷ் செய்து மண்டையைப் பிடித்துவிடுவதாலும் விரைவில் குணமுண்டாகும். சிரசாசனமும் உதவிசெய்யும். மொடக்கத்தான் இலையை அரைத்துத் தலையில் தேய்த்துக்குளித்தால் ஒரு வாரத்தில் பொடுகு ஒழிந்துவிடும்.

சிவந்த கண்கள்

ஸ்ரீமதி கல்யாணி, சேலம்

கேள்வி: என் கண்கள் எப்பொழுதும் சிவந்திருக்கின்றன. ஆனல், பீளை கட்டுவதில்லை. கண் வைத்தியர் ஒரு மெழுகு கொடுத்தார். அதனுல் குணமுண்டாகவில்லை. இதற்கு என்ன சிகிச்சை?

பதில்: கண்களுக்கு திரிபலா மை உபயோகிப்பதோடு தினசரி திரிபலா தைலம் தலையில் தடவிக்கொண்டு பச்சைப் பயறு மாவு தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்யவும். வாரமிருமுறை எண்ணெய் தேய்த்துக் குளிக்கவும். இரண்டு கெல்லிடை லிங்க் சல்பேட்டும் இரு கெல்லிடை போராக்ஸும் ஒரு ஔன்ஸ் பன்னீரில் கரைத்து இரவில் படுக்குமுன் கண்களில் விட்டுக்கொள்ளவும்.

அன்பின் வண்ணம்

திருப்புகழ் மணி

முதல் பாகத்தில் அன்பின் வண்ணம் விரும்பும் வண்ணமென்றும், ஊசிக்கும் காந்தத்திற்கும் இருக்கும் அன்னியோன்னிய இழுப்பு சரியான உவமையென்றும், அன்பே சிவமாதலால், சிவத்தின் வண்ணமே அன்பின் வண்ணமென்றும், ஆராய்ச்சி செய்யப்பட்டது. இரண்டாவதாக சிவத்தை வேதத்தின் வண்ணமாகப் பாடியுள்ளார், அப்பர் சுவாமிகள். வேதத்தின் வண்ணம் ஈசன் வண்ணம் என்றால் என்ன? அவ்வண்ணம் அன்புக்கு எவ்வாறு பொருந்தும் என்று பார்க்க வேண்டும்.

தெய்வ தத்துவத்தை நிர்ணயிக்குங்கால், "அறிவும் அறியாமையும் கடந்த அறிவு நின் திருமேனியென்றுணர்ந்து, உன் அருண சரணாரவிந்தமென்று அடைவேன்" என்று அருணகிரியார் திருப்புகழில் பாடினார். அனுபூதியில் "அறிவொன்றற நின்று அறிவார் அறிவில் பிறிவொன்றற நின்ற பிரானலையோ, என்றார் அருணகிரியார்.

அறிவுடையவன் அன்பை அறிவான். அன்பை அறிந்திலனேல், அவன் அறிவு அறியாமையாகும். அன்பினாலன்றி, உலகில் ஜீவராசிகள், ஆண்டவனை உணரமுடியாது ஆகவே, அகத்துறையில், அனுபூதியாய் நின்ற தெய்வத்தை, அன்பினாலன்றி உணர முடியாது. அறிவைக் கடந்து, அன்பின் அறிவாகவும், உணர்ச்சியாகவும்நிற்பது ஈசன் தத்துவம். இந்த தத்துவத்தை "ஞானானந்த மயம் தேவம்" என்றார்கள். பொருளாயிருக்கப்பட்ட பிரமம் (அல்லது) தெய்வ தத்துவம் பலவாறாக விளக்கப்பட்டிருக்கின்றது. அறிவையறிவது பொருள் என்றார். உயிருக்கு, உயிராய் நின்ற பரம்பொருள் அறிவுக்கு அறிவாகி நிற்கின்றது. இந்த அறிவு அல்லது ஞானம் சப்தப்ரம்ம சுவரூபமாக வேதமாய் விளங்கிற்று.

அறிவு எங்கேயிருந்து உண்டானது’ அதை உண்டாக்கியவன் யார்? அறிவு உண்டென்றும், இல்லையென்றும் அறியும் தத்துவம் யாது? அந்த அறிவு தத்துவமே பரம்பொருளாகும். இது அனுபூதி மகான்களின் துணிபு. ஆகவே, ஞான சுவரூபியாயிருக்கப்பட்ட தெய்வம், சப்தப்ரம்ம மயம். சப்தப்ரம்ம மயமாய், உலகத்தில், ஆன்மாக்களின்மேல், நிறைந்த கருணையின் காரணமாய் வெளிவந்த ஜோதியே, வேதம். ‘அன்பினாலன்றி ஓராக்கமும் உண்டோ’ என்றார் கம்பர்.

அன்பின் ஆக்கம் சிவத்தின் ஆக்கம். வேதமானது, அன்பின்

வடிவு. அன்பின்செயல். அன்பின் செயலென்பது அன்பின் சப்தப் ரம்ம சுவரூபம். திருப்புகழ், தேவாரம், சித்தர் பாடல்கள், பிரபந்தங்கள் இவைகளெல்லாம், எப்படி அன்பினுடைய ஆக்கங்களோ, அவைபோல், வேதமானது மிகுந்த தூய்மைபெற்ற, ஒரு சப்தப்ரம்ம சுவரூபம்.

ஈசன் மூச்சு விட்டார். அம் மூச்சின் ஒலியே வேதமாகும். முருகன் கிண்கிணியில் எழும் ஓசையே வேதமொழி என்று வருணிக்கிறார் அருணகிரியார். ஆகவே அன்பனுடைய, ஆக்கங்களில் மிகவும் ஞானம் (அல்லது) அறிவுணர்ச்சி. அந்த ஞானனுபவம் சப்தப்ரம்மமாய் வெளிவரும் போது, வேதமாய்த் திகழும். வேதவாக்கியங்களாய் உலகின்கண் பரந்து, ஆன்மாக்களை ஈடுபடுத்துவது, விரும்பு வண்ணத்தினின்றும் பிறந்த, ஓர் அரிய பண்பு. ஆகவே, சிவத்தின் வண்ணம் வேதத்தின் வண்ணமாய் வெளி வந்தது. எங்கும் நிற்கும் ஒருவர், எல்லா ஜீவர்களுக்கும், உபதேசிக்கும் ஏக குரு—அகத்தில் உபதேசிக்கின்றான், புறத்தில் அந்த உபதேசம் பண்ணுகவும் பாடலாகவும் வெளிவந்தது. ஆகையால், ஆதிசச்சிதானந்த சுவரூபம் அன்பாய் நின்று, ஆனந்த ஞானவேத வாக்கியங்களாய்த் திகழ்ந்து, வெளிவந்து கொண்டிருப்பதால் அன்பின் வண்ணம் வேதத்தின் வண்ணம் என்றார். ஈசனுடைய சுவரூபத்தை அப்பர் வருணிக்கின்றார்.

"வானவன் காண் வானவரினும்
மேலானன் காண்
வடமொழி தென்தமிழும் மறைகள்
நான்கும் ஆனவன் காண்
ஐயன்காண், கையில் அனலேந்தி
ஆடும் கானவன் காண்
கானவனுக்கு அருள் செய்தான்
காண் என் இதயகமலத்தெறும்
தேனவன்காண் சிவபுரத்து என்
செல்வன்காணே.

(பிறகு அடுத்த தொடரில் கரும்பின் இன்மொழி காரினில் வண்ணம் என்ற அன்பின் மற்றொரு பண்பை ஆராய்வாம்.)

பெண்களின் உள்ளம் மிக மிருதுவானதுதான். ஆனால் ஆபத்து காலத்தில் வைரத்தினும் திண்ணியதாக மாறிவிடும். இதேமாதிரிதான் ரேவதிக்கும்……''

தாய் உள்ளம்

ராஜம் ராமமூர்த்தி

1

கையிலே பிரித்த கடிதத்துடன் சமையலறைப் பக்கம் விரைந்து சென்றார் விஸ்வம். "அம்மா. இதோ ரேவதியிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது பார். இன்று ராத்திரி எட்டரை மணி வண்டியில் வருகிறாளாம் அவள்'' என்று படபடவென்று சொன்னார். அவர் குரலில் மனைவி வரப்போகிறாள் என்கிற ஒரு விதமான மகிழ்ச்சியோ, ஆர்வமோ, பரபரப்போ காணப்படவில்லை. அதற்குப் பதில் இன்னதென்று விவரிக்க முடியாததொரு சஞ்சலமும், திகிலுமே தென்பட்டன!

ஒரு கணம் அம்மாவும் பிள்ளையும் ஒருவரையொருவர் மௌனமாகப் பார்த்துக்கொண்டனர், மறு கணம் அகிலாண்டம் நிம்மதியாக பெருமூச்சு விட்டாள். "நல்ல வேளை, அவளே வந்து விடுகிறாளா? ஒரு பாரம் தீர்ந்தது. எத்தனை நாள் பேசாமல் இருப்பது; அவளுக்கே எழுத வரவது எழுதலாயா என்றிருந்தேன். அவளே வந்துவிடுகிறாளா? ரொம்ப சரி. ஆயிரம் எழுதினாலும், நேரிலே சொல்வதுபோல் ஆகுமா?'' என்று அவள் சொன்னது விஸ்வத்திற்கு என்னமோ போல் இருந்தது.

அவர் மனதில் கற்பனையும் செய்ய முடியாததோர் புயல் வீசிக்கொண்டிருந்தது. ஆனால், அம்மாவோ துளிக்கூட கவலைப் படாமல், பல நாட்களாக அவர்களைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் அக் கடின பிரச்னையை வெகு சுலபமாக தீர்த்து விடுபவள் போல் பேசுகிறாளே?

"அது சரி அம்மா. இருந்தாலும்… அவளிடம்….எப்படி…. … நேரில்…துணிந்து சொல்வது? அவள் சும்மா யிருப்பாளா? எனக்கு ஏன் உடனே தெரியப் படுத்தவில்லை யென்று கேட்க மாட்டாளா அம்மா?'' என்று அவர் தயங்கித் தயங்கி கேட்டதற்குள் கோபம் வந்துவிட்டது அகிலாண்டத்திற்கு.

"ஆமாண்டா ஆமாம். அவள் அதையும் கேட்பாள் அதற்கு மேலும் கேட்பாள். நீ ஏமாந்த சோணகிரியா யிருந்தால் இன்னும் உன் தலைமேலே ஏறிக்கூட ஆடுவாள். எல்லாம் நீ வந்திருந்தால் மட்டும் என்ன கிழித்திருக்கப் போகிறாய்? எங்களுக்கு இல்லாத அக்கரையா உனக்கு?'' என்று ஒரே போடாய்ப் போட்டு அவரை அடக்கத் துப்பில்லாமல், அவள் என்ன சொல்வாளோ என்று பயப்படுகிறாயே. நல்ல பிள்ளையடா நீ. இதோ பார். நான் இப்பவே சொல்லிட்டேன். நான் அவகிட்ட ஒண்ணும் சொல்லமாட்டேன். நீயேதான் எல்லாம் சொல்லிக்

கொள்ளவேண்டும். உன் பாடு அவள் பாடு. நான் இதில் தலையிட்டு வீண் பொல்லாப்பை வாங்கிக் கட்டிக்கொள்ளத் தயாராயில்லை'' என்று கண்டிப்பாகக் கூறி அத்துடன் அந்தப் பேச்சுக்கு முத்தாய்ப்பு வைத்தாள் அகிலாண்டம்.

அவளைப் பொறுத்த வரையில் விஷயம் முடிந்துவிட்டது! ஆனால்....ஆனால்......விஸ்வத்திற்கோ.... யாரோ தன் தலைமேல் பிரமாண்டமானதொரு பாறாங்கல்லை வைத்து அழுத்துவதைப் போல் இருந்தது!

ஒரு வேலையும் ஓடாமல், பித்துப் பிடித்தவர் போல் உட்கார்ந்திருந்தார் அவர்.

2

கடிகாரம் 'டாண்' 'டாண்' என்று ஒன்பது முறை அடிப்பதற்கும், வாசலில் வண்டி வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.

தலையிலிருந்த கதம்பம் 'கம்' மென்று வாசனை வீச, கால் மெட்டிகள் 'டிங்' 'டிங்' என்று சப்திக்க; புதுப் புடவை 'சரக்' 'சரக்' என்று ஓசை செய்ய உற்சாகமாய் உள்ளே நுழைந்தாள் ரேவதி.

வந்ததும் அவள் கண்களில் பட்டது கலைந்த கிராப்புத் தலையும் மாசு படிந்த முகமுமாய் 'குரங்கைச் சாகக் கொடுத்த ஆண்டி போல' ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த விஸ்வம்தான்! அவளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. இடுப்பிலிருந்த குழந்தையைக் கீழே இறக்கினாள்.

ஒரே எட்டில் அவரருகில் சென்று நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். 'என்ன உடம்பு உங்களுக்கு? ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறீர்கள்? அதனால்தான் ஸ்டேஷனுக்கு வரவில்லையா? அம்மா, குழந்தைகளெல்லாம் சௌக்கியந்தானே?'' என்று கேள்வி மேல் கேள்வியாகத் தொடுத்தாள். அவள் மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது.

விஸ்வத்தின் தொண்டை அடைத்துக் கொண்டது. இவ்வளவு நேரம் எண்ணங்களாகிற அக்னிக் குழம்பில் ஊறியதாலோ என்னமோ அனலாய்க் கொதித்த அவரது நெற்றியில் ரேவதியின் குளிர்ந்த ஸ்பர்சம் பட்டபோது அவருக்கு எவ்வளவோ ஆனந்தமாயிருந்தது. அவளது பரிவும் குழைவும் அவரைப் பரவசப்படுத்தின. சொல்லொணாத உற்சாகத்துடன் மலர்ந்திருந்த அவள் முகம், தாம் சொல்லப் போகும் விஷயத்தைக் கேட்டதும் எப்படிக் கூம்பிப் போகும் என்று அவரால் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. அவளையே கண்கொட்டாமல் பார்த்தபடி இருந்தார்.

ரேவதியும் சும்மாயிருக்கவில்லை. கணவனுக்கு உடம்பு ஒன்றுமில்லை என்று அறிந்ததும் அவள் மனம் பழைய உற்சாகத்தை மீண்டும் அடைந்தது. கைக் குழந்தையைத் தட்டி தூங்கப் பண்ணியபடியே ''ஆமாம் எதற்கு என்னை அப்படி முறைத்துப் பார்க்கிறீர்கள். இரண்டு மாதமா பார்க்காமே கண் பூத்துப் போச்சாக்கும்? இவ்வளவு ஆசை இருக்கிறவர்தான் ஒரு மாசமா கடுதாசியே போடாமல் இருந்தீர்களோ? நானே போட்டதுக்கும் பதில் கிடையாது. அதனால்தான் நான் சீக்கிரமா புறப்பட்டு வந்துவிட்டேன். இல்லாட்டா இன்

னும் ஒரு மாதமாவது ஜிலு ஜிலுன்னு "அங்கேயே இருந்திருக்கமாட்டேனா?" என்று கேலியும் கிண்டலுமாகப் பேசினாள்.

பிறகு சட்டென்று நினைவுக்கு வந்தவள் போலே, "ஆமாம, அம்மா எங்கே? மாடியிலே தூங்கிண்டிருக்காரோ? குழந்தைகளெல்லாம் எங்கே? அவாளும் தூங்கறாளோ? ராஜா கூடவா தூங்கிப் போய்விட்டான்? நான் வரேன்னு தெரியாதா அவனுக்கு? தெரிந்திருந்தால் கொட்டக் கொட்ட முழிச்சிண்டிருப்பானே போக்கிரிப் பயல்! எங்கே அவன்" என்று அவள் சொன்னதும் விஸ்வத்தின் கண்களில் கண்ணீர் பீறிட்டுக்கொண்டு வந்துவிட்டது!

3

ராஜா! ராஜா தூங்குகிறான்"—

ஆமாம், மீளா நித்திரையில் ஆழ்ந்துவிட்டான் அவள் ராஜா! இதை எப்படிச் சொல்வது அவளிடம் என்ற பிரச்னைதானே இவ்வளவு நேரம் அவர் மூளையைக் குழப்பி பித்தாக அடித்துவிட்டிருந்தது!

'ரேவா உன்கண்மணி ராஜா—நம் செல்வம் ராஜா நம்மை விட்டுப் போய்விட்டானடி! நீ ஊருக்குப் போகும்போது தன் கொழு கொழு வென்ற கரங்களால் உன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, உன் கன்னத்தில் ஒன்று, நாலு, ஆறு, பத்து, பன்னிரண்டு என்று தப்பும் தவறுமாக எண்ணியபடியே முத்தமிட்ட உன் ஆசை மகன் ராஜாவை இனி நீ பார்க்க முடியாதடி! பார்க்கவே முடியாது" என்றெல்லாம் ஓவென்று வாய்விட்டுக்கதறலாம்போலிருந்தது விஸ்வத்திற்கு. ஆனால், அவரால் அவ்வளவு தூரம் கூறவே முடியவில்லை.

'ரேவா, உன் கண்மணி ராஜா என்று சொல்லும்போதே அவர் குரல் தழு தழுத்துப் போய் விட்டது. மேலே ஒன்றும் சொல்லாமல் அவள் கழுத்தை இறுகக் கட்டியபடியே விக்கி விக்கி பச்சைக் குழந்தைபோல அழ ஆரம்பித்துவிட்டார்! இந்த சப்தத்தைக் கேட்டு மாடியிலிருந்து இறங்கி வந்த அகிலாண்டம்தான் பூரா விவரமும் சொல்லவேண்டி வந்தது.

"என்ன பண்றதடியம்மா. நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான், நீ போய் ஒரு மாதம் வரையில் நன்றாய் இருக்கவில்லையா? திடீரென்று எங்கிருந்தோ பாழும் ஜுரம் ஒன்று யமனாக வந்து சேரவேண்டுமா? டாக்டரும் 'பயமில்லே' 'பயமில்லே' என்றுதானே சொல்லிண்டிருந்தார். உடம்பைத் தேற்றிப்பதற்காக தூர தேசம் போயிருக்கிறவளைத் தொந்திரவு பண்ணுவானேன் என்று பேசாதிருந்தோம். இப்படி திடீரென்று மோசம் பண்ணும்னு கண்டோமா? பண்டம் கைவிட்டு போனப்புறம் உனக்கு தெரிவிச்சு என்ன பிரயோசனம்? உடனே வரவாவது முடியுமா? மூன்றுநாள் பிரயாணம். இந்தக் கவலையிலே, தேறி யிருக்கிற உடம்பு மறுபடி திருப்பிக் கொண்டா யாரு கஷ்டப்படறது? என்றுதான் உனக்கு ஒன்றும் எழுதவுமில்லே. நேரிலே வந்து தெரிஞ்சுக்கட்டும்னு இருந்துட்டோம். அந்தக் கடங்காரன் போயி நாளையோட பதினறு நாள் ஆகிறது. என்னடியம்மா

பண்றது? உன் வயிறு செஞ்ச பாவம்! 'சமத்து' 'சமத்து'ன்னு ஊர் பூரா ஓமல். ஓமலிட்ட பண்டம் உள்ளே தங்காமலே போய் விட்டது. போம்மா எழுந்திருந்து. கண்ணைத் துடச்சிக்கோ. இருக்கிற பசங்களையாவது பார்த்து மனசை தேற்றிக்க வேண்டியதுதான். இந்த பச்சை உடம்பிலே இப்படி மனசை சோகவிடலாமா?'' என்று கண்களைத் துடைத்தபடியே கூறி, மாட்டுப்பெண்ணைத் தேற்ற முயன்றாள் அகிலாண்டம்.

ஆனால், ரேவதியின் துயரம் அவ்வளவு எளிதில் தீர்ந்துவிடக் கூடியதா? அன்பு, ஆசை, அங்கலாய்ப்பு, ஆதுரம், துயரம் இவற்றின் வசபபட்டு அவள் பேதையுள்ளம் தவிதவித்ததை இந்த பிரகிருதியையே அழிக்க எழும் பிரளயத்துடன் கூட ஒப்பிடுவது பொருந்தாது. எந்த இடத்தில் இன்பவெறியின் ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடும் என்று அவள் ஆவலோடு ஓடிவந்தாளோ, அந்த இடத்தில் சாவின் பயங்கரக் கரங்கள் பட்டு பெரும் வெடிப்பு ஏற்பட் டிருப்பதைக் கண்டதும், அவள் இதய வீணை சுக்கல் சுக்கலாய் உடைந்து விட்டது.

ரகு, பாலா, குமார் இவர்களும் அவளுடைய குழந்தைகள்தான். ராஜாவும் அவளுடைய குழந்தை இருந்தாலும், ஏனோ அவளுக்கு ராஜாவின்மேல்தான் அவ்வளவு ஆசை. புனிதமான தாயுள்ளத்தில் இந்த பாரபட்சத்திற்கு இடமிருக்கக் கூடாதென்பது அவளுக்குத் தெரிந்ததுதான். இருந்தும்—ராஜா அந்தப் பெயரிலேயேதான் அவளுக்கு என்ன அவ்வளவு மோகம்! இத்தனைக்கும் அவள் அவளுடைய மூத்த குழந்தையல்ல தாயுள்ளத்திலிருந்து முதன் முதலில் பொங்கியெழுந்த அத்தனை அன்புப் பாலையும் அவன் மேலேயே சொரிந்து விட்டாளென்று சொல்ல. பாலா மூத்தவள் ரகு அடுத்தவன். அதற்கும் அடுத்தவன் தான் ராஜா. ஆனால், அன்பிலும், அறிவிலும், அழகிலுமோ——எல்லாரையும் விட பெரியவன்!

ஐந்து வயதுதான் ஆகியிருந்தது அவனுக்கு, ஆனால் எழு ஐந்து வயதான அவன் அப்பாவையும், பத்து ஐந்து வயதான அவன் பாட்டியையும் விட அவன் பெரியவன்தான்—அறிவில்! அவர்களைவிட அவன் நன்றாகத் தன் அம்மாவைத் தெரிந்து கொண்டிருந்தான்—என் அவன் சின்ன மூளையில் அம்மாவுக்கு அதை செய்யவேண்டும், இதைச் செய்யவேண்டும் என்று எத்தனையோ 'பிளான்கள்' அதை முற்றுப் பெறாத தன் மழலைச் சொல்லால், அவன் தன்னழகிய கண்களை அகல விரித்துக் கொண்டு வாயிலே 'சொள்ளு' வழிய எட்டு வீடு கேட்கும்படியான ரகசியக் குரலில் அம்மாவிடம் வெகு வெகு ரகசியமாக சொல்லும்போது, ரேவாவின் மனம்எவ்வளவுபரவசமடையும்?

ஒருநாள் வீட்டில் ஏதோ சண்டை. அம்மாவை ஒன்றும் சொல்ல முடியாமல், ரேவாவின் மேல் தம் கோபத்தைத் திருப்பினார் விஸ்வம்! அவள் கன்னங்கள் சிவந்து வீங்கிப் போகும்படி அடித்துவிட்டுப் போய்விட்டார். கூடத்து உள்ளில் குப்புறபடுத்து தன் உள்ளமே உடைந்துவிடும் போலே அழுது கொண்டிருந்தாள் ரேவா.

பத்து வயது பாலா, எட்டு வயது ரகு, இவர்கள் அவள் பக்

கம் திரும்பிக்கூட பார்க்கவில்லை. ஆனால், ராஜாதான் வந்தான். அப்போது அவனுக்கு இரண்டு வயதுதான். 'தத்தக்க புத்தக்க' என்று நடந்து அவளருகில் வந்து "அம்மா--ஊம் அய—ஆண்டாம். நானு அப்பா பாட்டியை நன்னு அச்சு அச்சு" என்று தன் சின்னஞ் சிறு கரங்களால் அவர்களை அடிப்பதுபோல ஜாடை காட்டி அவளை மெதுவாக எழுப்பினன்! பச்சைக் குழந்தையின் பரிவான சொல்லும், சூடிகையான செயலும் தாயைப் பரவசப்படுத்தின. "என் கண்மணியே! நீ இருக்கும்போது எனக்கு என்னடா குறை?" என்று அவனை இறுக்கத் தழுவி முத்தமிட்டபடியே எழுந்துவிட்டாள் ரேவா.

இன்னொரு நாள் நாத்தனார் வீட்டிற்குப் போகும் மாமியாருக்காக ஜிலேபி பண்ணினள் ரேவதி. வேலையெல்லாம் முடிந்தது. ஏதோ குத்தலாகச் சொன்னாள் மாமியார். ரேவாவுக்கு துக்கம் தாங்கவில்லை. தன்னறையிலே போய் தனியே உட்கார்ந்து கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தாள். இதை ராஜாவும் கவனித்தான். அவனுக்கு அப்போது ஐந்து வயசு நடந்து கொண்டிருந்தது. அவன் சின்ன மூளையில் "பாட்டி, அம்மாவுக்கு ஜிலேபி தரவேயில்லை. அதான் அம்மா அழுகிருள்" என்று தோன்றியது போலிருக்கிறது! உடனே, பாட்டி தனக்குக் கொடுத்த ஜிலேபியைத் தின்னாமல், பத்திரப் படுத்திக்கொண்டான். ஆனாலும் குழந்தையல்லவா? நடு நடுவில் ஆசை வரும். அப்போது துளித் துளியாக அதைக் கடித்துக்கொள்வான்! இப்படிச் செய்து செய்து, அதில் பாதிக்குமேல் ஆகிவிட்டது!

அந்த சமயத்தில்தான் அகிலாண்டம் அடுத்த வீட்டு பக்கம் நகர்ந்தாள். உடனே, ராஜா குடு குடுவென்று ஓடி ரேவதியிடம் போனன். அறைக் கதவைச் சாத்திவிட்டு, "அம்மா, இந்தா ஜிலேபி, பாட்டி குடுக்காட்டா போரு. நா தரேன். நீ அழாதே. பாட்டி அடுத்தாத்துக்கு போயிருக்கா. அதுக்குள்ளே நீ தின்னுடு. நான் பாட்டி வராளான்னு பார்த்துண்டேயிருக்கேன்" என்று சொல்லி இவ்வளவு நேரம் தன் சின்னஞ் சிறு கைகளில் மூடி வைத்திருந்ததால், வேர்வை பட்டு வர்ணம் போய் நசுங்கி யிருந்த துண்டு ஜிலேபியை அவள் வாயில் திணித்தான். ஆனால், அதைத் தின்றதும் அந்தப் 'பொல்லாத அம்மா' இன்னும் அதிகமாக அழ ஆரம்பிக்கவே, அவன் பாடு சங்கடமாய்ப் போய்விட்டது!

"அழாதே அம்மா. முழு ஜிலேபி வேணும்னு அழறே? பாட்டி முழுசாய்தான் கொடுத்தா. நா கொஞ்சூண்டு தின்னுட்டேன். நாளக்கி முழுசா உனக்கே குடுத்துடறேன். அப்ப அழமாட்டியே" என்ற குழந்தையின் அன்பு மொழிகள் ரேவதியைப் பரவசத்தில் பலமுறை மூக்கி மூக்கி எடுத்தன! அவனை வாரி யெடுத்து அணைத்துக்கொண்டாள்.

இப்படியே—இதைப்போன்ற இன்னும் எத்தனையோ சிறிய பெரிய சம்பவங்கள். இனி இவைதானே தளர்ந்துபோன அவள் மனக்கொடிக்கு ஊன்று கோல்களாக இருக்கப் போகின்றன! "என் ராஜா அதைச் செய்தான்", "என் ராஜா இதைச் சொன்னன்" என்று சொல்லிக் கொள்வதிலேதானே

இனி அவள் சோர்ந்த உள்ளத்திற்குக் கடுகளவு சிம்மதியாவது கிடைக்கும்?

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகின. ஆனல், ரேவதியின் மனநிலையில் மட்டும் மாறுதல் இல்லை. அன்று "ராஜா இறந்தான்" என்று கேள்விப்பட்டதும் ஒன்றும் சொல்லாமல் உன்மத்தம் பிடித்தவள்போல் கண்களை அகல விரித்துக்கொண்டு முகத்தில் கோரமான விரக்தி 'பாவத்துடன்' நின்ருளே, அந்த 'பாவம்' இவ்வளவு நாளாகியும் மாறவேயில்லை!

இதற்காகத் தன் கடமையில் ஒரு சிறிதும் தவறவில்லை அவள்! இயந்திரம்போல் ஓய்ச்சல், ஒழிவில்லாமல் உழைத்தாள். ஆனல் அந்த உழைப்பில் உயிரில்லை! வழக்கம் போலவே எல்லோரிடமும் கலகல வென்றுதான் பேசினுள். ஆனல் அந்தப் பேச்சில் உணர்ச்சியில்லை! எல்லோரைப் போலவும் சிரித்து விளையாடினுள். ஆனல், அந்தச் சிரிப்பில் மகிழ்ச்சியில்லை.

அவள் இதயத்திலே, என்றைக்குமே நிரப்ப முடியாததொரு பள்ளம் ஏற்பட்டுவிட்டது! "நாம் பக்கத்தில் இருந்தால் குழந்தை ஒருவேளை பிழைத்திருக்குமோ என்னமோ? எல்லோருமாகச் சேர்ந்து நாம் அவன் பக்கத்தில் இராமல் பிரித்துவிட்டார்களல்லவா? என்ற அந்த 'தாபம்' அவள் மனதைப் பூச்சியென துளைக்கத்தான் செய்தது.

தாயுள்ளத்தின் இந்த தாபமும் தவிப்பும் மற்றவர்களுக்குப் புரியவில்லை. "மலைமலையாய் பிள்ளைகளைச் சாகக் கொடுத்துவிட்டு கோட்டான் மாதிரி நான் இல்லையா? இவள் என்னமோ இந்தக் குழந்தையோடேயே இப்படி மாய்ந்துபோய் விடுகிருளே" என்று நிஷ்டூரம் பேசிய அகிலாண்டம், தன்னுடைய இன்னொரு பிள்ளையின் வீட்டில் கொஞ்ச நாள் இருந்துவிட்டு வரலாமென்று போய்விட்டாள்!

விஸ்வத்திற்கும் ரேவதியின் நடவடிக்கை பெரும்புதிராகவே இருந்தது. அவருடைய சினேகிதரின் பெண்டாட்டி ஒருத்தி, பெண் இறந்ததும், ஆடைகளைக் கிழித்துக்கொண்டு தலைவிரிகோலமாய் தெருவெல்லாம் புரண்டதை அவர் பார்த்திருக்கிருர்! அப்படி ஏதாவது ராக்ஷசத்தனமாக ரேவதி நடந்து கொண்டால் கூட தேவலைபோலிருந்தது. இந்த அவளுடைய மௌனக் குமுறலும், சோகச் சாயை படிந்த வதனமும் அவரைக் கொல்லாமல் கொன்றன!

'பகவானே! ஆமை, ஓட்டினுள்ளே தன் உடலைச் சுருக்கிக் கொள்வதுபோல, இவளும் துக்கத்தை தன் மனதுக்குள்ளேயே சுருக்கிக்கொண்டு உருகிப்போகிருளே. இந்த நிலையில் மாறுதல் ஏற்பட்டு, இவளும் பழைய ரேவாவாக மாறமாட்டாளா ஒரு நாள்" என்று ஏங்கினர் அவர். வெகு சீக்கிரத்திலேயே அவர் பிரார்த்தனை பலிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

6

அன்று ஞாயிற்றுக்கிழமை தோட்டத்தில் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்தவர், 'தடால்' என்ற சத்தத்தையும், குழந்தைகளின் கூக்குரலையும் கேட்டு வாசலுக்கு அலறிப் புடைத்துக்கொண்டு ஓடிவந்தார். அங்கே ரத்தவெள்ளத்தில்

மிதந்து கொண்டிருந்தான் நான்கு வயது குமார்!

பழையநாள் வீடு அது. வாசலிலிருந்த ஒரு பழைய கல் தூணிலிருந்து ஒரு பெரிய பகுதி ஆட்டம் கண்டு குழந்தையின் கால் மேல் விழுந்து விட்டதென்று அவர் அறிந்து கொண்டார். அவருக்குக் கைகாலே ஆடவில்லை! "டேய் போய் அம்மாவைக்கூட்டிண்டு வாங்கடா" என்று பெரிய வீரனைப்போல் கூறினர்!

இதற்குள் ரேவதியே அங்கு வந்து விட்டாள். "என்ன என்ன" என்று அலறியபடியே. ஒரு கணம் அவள் கண்கள் பயத்தினாலும், திகிலினாலும் ஆணியறைந்ததுபோல் குமாரின் மேலேயே நிலைத்து நின்றன. மறுகணம் அவள் தலை சுற்றி அப்படியே கீழே விழுவாள் என்றுதான் விஸ்வம் எண்ணினர்.

ஆனல், அவள் மயக்கம் போட்டு விழவில்லை! அவரைப் போல் கைகால் ஓய்ந்துபோய்ப் பிரமித்துப் நின்று விடவில்லை. கொடியில் கிடந்த பாலாவின் பாவாடையை உருவி தண்ணீரில் நனைத்து குழந்தையின் காலின் மேல் சுற்றினள் அவசரம் அவசரமாய்! அடுத்த நிமிஷமே குழந்தையை அலாக்காக இருகரங்களிலும் தாங்கியபடியே அலையக் குலைய அடுத்த தெருவிலிருந்த டாக்டர் வீட்டுக்கு ஓடினள்! அவள் போன கொஞ்சநேரத்திற்குப் பிறகுதான் மரத்துப்போயிருந்த விஸ்வத்தின் கைகளும் கால்களும் சுய உணர்வு பெற்றன. மனைவியைத் தொடர்ந்து தாமும் ஓடினர்.

இதற்குப் பிறகு சில நாட்கள் வரையிலும் விஸ்வத்திற்கு ஏதோ கனவுலகில் இருப்பதைப்போல இருந்தது. கோழை மனதுடைய அவருக்கு காலிலே பெரிய கட்டும், தலையிலே ஐஸ்வைத்த பையுமாக ஆஸ்பத்திரியிலே காட்சியளிக்கும் குழந்தையைக் காணக் காண என்னவோ வயிற்றில் சங்கடம் செய்தபடி இருந்தது. "இது என்ன சோதனை!" என்று தவிதவித்தவராய் செயலற்றுப்போய் உட்கார்ந்துவிட்டார்!

இதற்கு மாருக இருந்தாள் ரேவதி. எப்போதும் பிரமை பிடித்தவள் போல் சூன்ய திருஷ்டியுடன் நடைப் பிணம்போல் இருந்தவளுக்கு இப்போது எங்கிருந்துதான் இவ்வளவு சக்தியும், தைரியமும், திடமும் வந்ததோ! பம்பரமாகச் சுழன்று வீட்டுக் காரியங்களைக் கவனித்தாள். டாக்டருக் கென்றும், மருந்துக்கென்றும் நகையை அடகு வைத்தும் கைம்மாற்ருக வாங்கியும் பணம் சேகரித்தாள். நோய் வாய்ப்பட்ட குழந்தைக்கோ வேண்டிய சகல சௌகரியமும் செய்து கொடுத்தாள். இரவு முழுவதும் விழித்திருந்து அவனுக்கு ஆகாரமோ, மருந்தோ நிமிஷம் தவருமல் கொடுத்துவந்தாள்.

ஆனல்......ஆனல்.... இவ்வளவு பாடுபட்டதும் வியர்த்தமாகிவிடும் போலாகிவிட்டது. அன்று ஆஸ்பத்திரியிலிருந்து இடைவேளை சாப்பாட்டிற்காக வீட்டிற்கு வந்திருந்தார் விஸ்வம். அவர் முகத்தில் சுரத்தே இல்லை.

'இவனும் நம்மை மோசம் பண்ணிவிடுவான் போலிருக்கிறது ரேவா. டாக்டர் கைவிரித்துவிட்டார். சாயங்காலம் ஜுரம் ஜாஸ்தியாகாமல் இருந்தானல், ஒருவேளை பிழைக்கலாம். ஆனல் அப்படி நடப்பது ரொம்ப அதி

சயம் என்றுசொல்லிவிட்டாரே. நான் என்னடி பண்ணுவேன்? என்று குழந்தை போல் அழ ஆரம்பித்துவிட்டார்!

ரேவா பதிலே சொல்லவில்லை. வாயில் புடவைத்தலைப்பை அழுத்தியபடியே அப்பால் போய்விட்டாள்!

7

சற்று நேரங்கழித்து அவள் திரும்பி வந்தாள். அவள்முகம் காளிதேவியைப் போலிருந்தது. சிவந்து, தடித்து நிற்கும் இமைகள், கலைந்த கூந்தல், கசங்கிய ஆடை, இவைகளுடன் தன்னெதிரே "புத்திரசோகத்தை அடைந்த தாய்மையே" ஒருருவெடுத்து நிற்பதாக விஸ்வத்திற்குத் தோன்றியது.

ஆனால், அவள் அழவில்லை. அலறவுமில்லை. அவள் கண்கள் சக்திக்கு மேற்கொண்டு நீரைச் சிந்தியதால் வறண்டுவிட்டனவோ என்னமோ!

கரகரப்பான குரலிலே, அவள் சொன்னாள்: "சாதம்தான் சாப்பிடவில்லை. இந்தக்காப்பியையாவது குடியுங்கள். வயிற்றில் ஒன்றுமில்லாமல் இருக்கக் கூடாது" என்று.

விஸ்வம் சோகமும், ஏமாற்றமும் படர்ந்து இருண்டு போயிருந்த அவள் வதன சந்திரனைக் ஒருகணம் ஏறிட்டுப் பார்த்தார். இவ்வளவு நாட்களாக அவளைப் பற்றி அவருக்கு விளங்காதிருந்த 'புதிர்' இன்று விளங்கிவிட்டது!

ஆம்—'தாயுள்ளத்தின்' விசித்திரமான போக்குதான். அன்று "ராஜா மறைந்தான்" என்றதும் அவளுக்கு ஏற்பட்ட மனவருத்தம் இன்னும் மறைந்தபாடில்லை. ஆனால், இன்றோ, "குமார் இன்னும் சிறிது நேரத்தில் போய் விடுவான்" என்று தெரிந்தும் கூட, அவள் அதை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாமல், கொந்தளிக்கும் உணர்ச்சி அலைகளைத் தன்உள்ளத்தினுள்ளேயே அடக்கி வைத்து அணைபோலி, அவர் உடல் நலத்தைப் பற்றி அக்கறை காட்டுகிறாள்!

அப்படி யென்றால், ராஜாவை விட குமார் அவளுடைய அன்பிற்குக் குறைந்தவனா? அப்படியும் சொல்வதற்கில்லை குமாருக்காக அவள் பட்டபாடு கொஞ்சமா நஞ்சமா? ஆனால்... இந்த வித்தியாசத்திற்குக் காரணம்...?

அதுதான் "தாயுள்ளத்தின்" விந்தையான போக்கு. குமார் அவள் கண்ணெதிரேயே இருந்தான். அவனுக்கு அடி பட்டது அவளுக்குத் தெரியும். அவனுக்காக அவள் தன் இருதயத்தினுள்ள ஒவ்வொரு துளி இரத்தத்தையும் செலவிடத்தயாராகஇருந்தாள். செலவிடவும் செலவிட்டாள். மனிதப் பிரயத்தினம் அவ்வளவும் செய்தாள். பலன் நிஷ்பலனைகப் போய்விட்டாலும், "நம்மால் முடிந்ததைச் செய்தோம்" என்கிற மனத்திருப்தியும், நிம்மதியும் அவளுக்கு உண்டாகும்.

ஆனல்...... ராஜா விஷயமோ அப்படியல்ல. "அம்மா, நானும் வரேன் உன்கூட" என்று பிடிவாதம் பிடித்து அழுத குழந்தையை அவள் மாமியாரின் அதிகாரத்திற்குப் பயந்து அரை மனதுடன் விட்டுப் பிரிந்தாள். ஊரிலேயும், உதடுகளைச் செப்பு போல குவித்தபடியே அழுத அவனது ஆசைமுகம் அவள் நினைவில் இருந்து அவளைத் துன்

புறுத்தியபடி இருந்தது. அவள் பேச்செல்லாம்கூட அவனைப் பற்றித்தான். இப்படி அவள் அவனைப் பற்றிய நினைவுக் கடலிலே மூழ்கியிருந்த சமயத்திலே தான் அவன் அவளை விட்டு மறைந்திருக்கிறுன். ஆனல் அவளுக்கு அது தெரியாது! அவன் உயிருக்கு மன்றுடிக் கொண்டு "அம்மா" என்று முனகிக் கொண்டிருந்த அந்த வேலையிலே அவள் ஊரில் என் ராஜா படு சுட்டி. சுருட்டை மயிரும், சிவந்த மேனியுமாய் தங்க விக்ரகம் போலிருப்பான். அவன் கொச்சைப் பேச்சை இன்றைக்கெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கலாம்" என்றெல்லாம் பெருமையடித்துக் கொண்டிருந்திருக்கலாம்! யார் கண்டது? கடைசியில் அவள் ஊருக்கு வந்த போதும் அவன் நினைவோடுதான் வந்தாள். ஆனல் அவள் கேட்டது என்ன? பாழும் விதி அவளை சதி செய்து விட்டது. அதன் பயனுய் அவள் ஆசை மரம் ஆணி வேரற்றுப் பெரும் சப்தத்துடன் பாரின் மேலே விழுந்து விட்டது!

பேரிடியால் தாக்கப்பட்ட பச்சை மரம் மறுபடியும் துளிர்க்குமா? அப்படித்தான் ஆகிவிட்டாள் அவளும், அது அவள் குற்றமா? தாய்மையின் தனிப் பண்பல்லவா அது?

விஸ்வம்-ரேவதியின் மனநிலையைப் புரிந்து கொண்டுவிட்ட அதே சமயத்தில்தான் டாக்டர்களும் குமாரின் உடல்நிலையைப் புரிந்து கொண்டு விட்டனர்! அதன் பலன்—? குமார் பிழைத்தான். சாயங்காலம் ஜுரம் திருப்பிக் கொள்ள வில்லை. ஒரு கண்டம் தப்பிற்று.

"இனிமேலே தாம்மா இவன் உன் பிள்ளை" என்ற டாக்டரின் அன்பான் தைரியமூட்டும் மொழிகளைக் கேட்டதும் இவ்வளவுக்கும் ஈடு கொடுத்து வந்த ரேவதி மூர்ச்சித்து விழுந்து விட்டாள்!

ஒரு குழந்தையைப் போல அவளை வாரியெடுத்து ஆச்வாசப் படுத்தினர் விஸ்வம். பெண்களின் மனம் மிகவும் மெல்லியது தான். ஆனுலும் ஆபத்துக் காலங்களில் வைரத்தினும் திண்ணியதாகி விடும். இருந்தாலும் மிதமிஞ்சிய ஆனந்தம் ஏற்பட்டதும், அதைத் தாங்காமல் கொடி போல் வளைந்துவிடும் விசித்திர மானசக்திஅதற்குளப்படித்தான் ஏற்பட்டதோ தெரிய வில்லையே. இப்படி ஓடின அவர் எண்ணங்கள். கலைந்த தலையும், கசங்கிய ஆடையுமாய் காம்பொடிந்த மலரெனப் படுக்கையிலே கிடந்த ரேவதி தாய்மையே ஒருருவெடுத்து வந்திருப்பது போலத் தோன்றியது அவருக்கு. அவர் கண்கள் கலங்கின!

விளையாட்டுப் பிள்ளை

●

வை. செல்லம்மாள்

"ஆடீ, அக்கா! என்னடி தின்னுண்டிருக்கே?"

'ஆமாம்; தின்னுண்டிருக்கேன்; என்கையில் எதைப்பார்த்தாலும் உன் கண்ணில் உறுத்திடும்.' 'என்ன இப்போ கேட்டுட்டேன்?' பிரமாதமா கோச்சுக்கறயே; அந்தத் திருட்டுக் கண்ணன் வந்தானுக்க...அப்போ உன் பாடு தெரியும்; 'என்னடி? அவன் என்னை என்ன செய்ய முடியும்? அவனைவிட நான் எத்தனை வயது பெரியவ?'

'அவன் உன்னைவிடப் பெரிய பெரிய பெண்களை யெல்லாம் எச்சுக் கட்டி விடுவான். பூதகியையும் தாடகையையும் பூமியில் உருட்டியவனுக்கு நீ மகா பெரிய மனுஷியாக்கும். அவனுடைய துஷ்டத்தனத்திற்கு நாம் இருவரும் எந்த மூலே? ஓசைப்படாமல் நீ தின்கிற பழத்தில் பாதி கொடுத்து விடு; இல்லா விட்டால் உனக்குமில்லாது எனக்கு மில்லாது அத் துஷ்டன் பழத்தை பிடுங்கிக் கொள்வான்.'

'என்ன ஆனாலும் சரி நான் உனக்குக் கொடுக்கமாட்டேன்.'

'அக்கா! அதோ பார் அதோ பார்; அந்தப் பயல் ஓடி வரான். உன் பழத்திற்கு பிடிச்சுது சனி.'

'நீ மகா பித்தலாட்டக்காரி; அவன் கையிலும் ஏதோ பழத்தை எடுத்துக் கொண்டு தான் வருகிறான். 'என் கண்ணன்; கருமுகில் வண்ணன்' நம்முடைய பழத்திற்குக் காத்துண்டா கிடக்கான்?'

மேற்கண்டவாறு இரு சகோதரிகளும் வாத விவாதம் நிகழ்த்திக் கொண்டிருந்த பொழுது, புன்சிரிப்புத் தவழும் இளவதனத்துடன் கையில் ஓர் மாங்கனியைத் தாங்கி கண்ணன், காலில் உள்ள கிண்கிணி கொஞ்ச ஓடி வந்தான். அவன் கை மாங்கனியைக் கண்ட மங்கை அந்தக் கனியில் விருப்பங்கொண்டு தன்னுடைய இளைய சகோதரியிடம் தன்கைப் பழத்தைக் கொடுத்து அவளை அனுப்பி விட்டாள். பாவம்! மூத்தவள் எண்ணத்தை இளையவள் கண்டாளா? அகப்பட்டது லாபமென்று ஓடிவிட்டாள்.

கண்ணனும் மங்கையை நெருங்கினன். தேவர்களுக்கும் எட்டாத கண்ணன் கைக்கனிக்கு கன்னி ஆசை கொண்டாள். கண்ணா! எனக்கு அந்தப் பழத்தைத் தரமாட்டாயா? என்று கையை அகல விரித்து இறைஞ்சி நின்றாள். கண்ணன் மோகன முறுவலுடன் கனியைக் வெகு தாராளமாகக் கொடுத்து விட்டான்.

"நம்முடைய கைக்கனியைக் கொடாது கண்ணன் கனியை பெற்று விட்டோம்" எனப் பெருமையுடன் கனியை உண்ண ஆரம்பித்ததுதான் தாமதம் 'தடார்' என அவளுடைய கைப் பழம் தட்டப்பட்டு கீழே விழுந்ததை உணர்ந்தாள்; திடுக்கிட்டுத் திரும்பினாள். விழுந்த பழத்தை கண்ணன் வாயில் வைத்துக் கடித்துக் கொண்டு 'இடி இடி'

கண்ணன் தீராத விளையாட்டுப்பிள்ளை மட்டும் அல்ல. கேலியும் கிண்டலும் செய்து எல்லோருக்கும் அளவற்ற ஆனந்தத்தைக் கிடைக்கச்செய்து முடிவில் எல்லோருக்கும் நல்லவனாகிவிடுகிறான்!

எனத் தன்னித்திலப்பற்கள் பிரகாசிக்கச் சிரித்தான்.

முதலில் மங்கைக்கு கோபந்தான் வந்தது. கண்ணனின் இளந்தாமரை வதனத்தைக் கண்டதும் தன்னை மறந்து கண்ணன் மயமானாள் கன்னி.

“என் குஞ்சுக் கண்மணி; என்னப்பா; என் தங்கமே! அந்தப் பழத்தை எனக்குக் கொடம்மா; அந்த சபரி செய்த பூஜை நான் செய்யவில்லையா? கொடுடா கண்ணே” என ஏக்கமுற்று, வேறு சிந்தையற்றவளாய் வேண்டினாள். ஏன் அவன் எச்சிலைத் தான் உண்ண, அவ்வளவு ஆசை.

“என்ன உளறுகிறாய்? சபரின்னா எச்சல் செய்து கொடுத்தா பழத்தை இப்போ நான் எச்சல் செய்த பழத்தையின்னா நீ கேட்கறே. இதோ பார் எனக்கு ஒண்ணும் தெரியாதின்னு நினைச்சுண்டையோ? நான் வரும்போது உன் கைப் பழத்தை தங்கையிடம் கொடுத்து விரட்டினது எனக்குத் தெரியாதா? “போ, போ; நான் தரமாட்டேன்” என்று கண்ணன் கூறிக்கொண்டே இடுப்பில் கட்டிய சிறிய பட்டாடை நழுவ, சுருண்ட மயிர்க் கத்தை முகத்தில் புரள, “தண்டையும் பாதசரமும் “கணீர் கணீர்” என ஒலியிட ஓடினான்.

கன்னியும் விடவில்லை. யாவராலும் தொடர முடியாத கண்ணனைத் தொடர்ந்து ஓடிப் பிடித்து விட்டாள். கண்ணனும் மனமிரங்கி பழத்தை அவள் வாயில் திணித்தான்.

தின்னப் பழங்கொண்டு தருவான் —
பாதி தின்கின்ற போதிலே தட்டிப்
பறிப்பான்;
என்னப்பன் என்னையன் என்றால்—
அதனை எச்சிற்படுத்திக் கடித்துக்
கொடுப்பான் [தி]

ஐயையே! அம்மா!! இவனைப் பாரேனம்மா; தலைப் பின்னலைப் பிடித்து “கரகரன்னு இழுக்கிறாம்மா. போக்கிரி; விடுடா பின்னலை!

‘நான் அப்பொழுதே சொன்னேன் இல்லையா? அந்தத் துடுக்குப் பையனுடன் விளையாடாதே விளையாடாதேன்னுட்டு; இன்னும் நன்றாக இழுடா! வேண்டும் அவளுக்கு.

“பத்தியா? அம்மா கூடச் சொல்லறா” என்று சிரித்துக் கொண்டே “கண்ணன் அக்கன்னியின் மயிரை மேலும் பிடித்து இழுத்தான்.

கன்னி மல்லிகா வேர்க்க விறுவிறுக்க எப்படியோ அவனிடமிருந்து தன்னுடைய பின்னலை இழுத்துக்கொண்டு ஓடத் துவங்கினாள்.

அவளுடைய புத்தப் புது பட்டாடையில் செம்மண்ணை வாரி இறைத்துவிட்டு கைக்கெட்டாத தூரத்தில் நின்றுகொண்டு கண்ணன் கைகொட்டிச் சிரித்தான்.

மல்லிகாவுக்குத் துயரமும், கோபமும் பொங்கிக் கொண்டு தான் வந்தது. “இப்பொழுது தான் 200 ரூபாய் கொடுத்து வாங்கினேன். அதில் மண்ணை அள்ளிப் போட்டு விட்டானேயம்மா” என்று ஓவென அழுதாள்.

புடவை வீணானதும் அம்மாவுக்கும் கோபந்தான் வந்தது. கண்ணனை விரட்டிக்கொண்டே ஓடிப் பிடிக்கப் போனாள். அவனா அகப்படுவான்? எடுத்தான் ஓட்டம்.

‘ஓமரு, குட்டிச் எவராட்டமா வயதாச்சு. அந்தக் குழந்தை

யோடு என்ன விளையாட்டு?'' எனத் தாயார் தன் பெண்ணை யேத் திருப்பிக் கொண்டாள்.

''பின்னலைப் பின்னின்றிழுப்பான்;—
தலை பின்னே திரும்புமுன்னே
சென்று மறைவான்
வண்ணப் புதுச்சேலை தனிலே—புழுதி
வாரிச் சொரிந்தே வருத்திக்
குலைப்பான்.

மந்த மாருதத்துடன் கண்ணனின் குழலோசை கலந்து பரவியது. அவ்வினிய அமுத வாரிதியாகிய கானத்தை கன்னியர் செவியாகிய வாயால் பருகியது தான் தாமதம். வீட்டிற்குள் உள்ள அனைவரும் தெருவில் வந்து ஒன்று கூடினர். கண்ணனின் குழலாகிய கருணாமிர்தத்தைப் பருகிக் கொண்டிருக்கும் பெண்கள் வாய்ப் பேச்சை இழந்தனர். கண்ணனிடத்திலேயே ஒன்றுபட்ட உள்ளத்துடன் ஒலி வந்த வழியே ஒளி பெற்றவரெனச் சென்றார்கள்.

கண்ணனின் குழல் ஒலி அக் கன்னிகைகளை அணுக அணுக, மது உண்ட மதுகரமென மயங்கினர் மங்கையர்.

கண்ணனைக் காணவில்லை, கன்னிகள். நீலவானில் வானவில்லைத் தான் கண்டார்கள். ஆமாம் அவர்கள் கண்களுக்கு கண்ணனும் அவன் கைக்குழலும் அவ்வாறுதான் தோற்றமளித்தது.

''ஐயோ' கண்ணன் எங்கே காணோமே'' என்று கன்னியர் கூறிக்கொண்டே கண்ணனை இன்னும் அருகில் நெருங்கினார்கள். அவர்கள் கண்ணில் தென்பட்டது என்ன? பச்சை வண்ணமுள்ள தடாகத்தில் பல செந்தாமரைகள் மலர்ந்துள்ளதைத்தான் பார்த்தார்கள். அவர்களில் ஒரு பெண் மற்றவர்களை நோக்கி ''ஏண்டீ! தாமரை மலர் எப்படி பாடும்?'' என்றாள். மற்றொருத்தி அடி பைத்தியமே! கஞ்ச மலரினுள்ள சுரும்பு சுருட்டைப் பண்பாடுகிறது'' என்றாள்.

மதியிழந்த மங்கையரைக் கண்டான் கண்ணன். வாயிலிருந்து புல்லாங் குழலை எடுத்துவிட்டு ''கலீ''ரென நகைத்தான்.

நங்கையர் கனவு கண்டு விழித்தவர் போன்று திகைப்புற்றனர். மாயையாகிய இருட் பகையை விலக்கி ஞானச் சூரியன் உதயமாவதைப் போன்று கண்ணனின் தோற்றத்தை மம்மரிலிருந்து நீங்கிய கன்னியர் கண்டு ஆனந்தங் கொண்டனர்.

புல்லாங்குழல் கொண்டு வருவான்;—
அமுது பொங்கித் ததும்பு நற்கீதம்
படிப்பான்
கள்ளால் மயங்குவது போல—
அதைக் கண்மூடி வாய் திறந்தே
கேட்டிருப்போம்.

''அடீ கோமளா! ஸ்யாமளா!! கண்ணன் வந்துட்டான், ஓடியா ஓடியா; அவனோடு விளையாடப் போகலாம்'' என்று சுந்தரி மற்றத் தோழிகளை அழைத்தாள்.

கோமளா, ''அடீ! அவன் துஷ்டன். அவனுடன் விளையாடப் போனால் நம்மை அழவிட்டு விடுவான் என்றாள் ஒரு பெண்.

''நீ வராட்ட போ நாங்கள் கண்ணனுடன் விளையாடத்தான் போகிறோம்'' என்று சொல்லிக் கொண்டே கண்ணனைத் தொடர்ந்து ஓடினார்கள்.

வெட்ட வெளியில்கண்ணனும் கன்னிகைகளும் வட்டமிட்டுக் கொண்டு விளையாடினார்கள். கைகோத்துக்கொண்டு நடனமாடினார்கள்; வெண்மதி வெள்ளிக் கிண்ணத்தில் பாலைவாரி இறைத்துக் கொண்டிருந்தான்.

கண்ணனும் கன்னியரும் நான்கு மூலைத்தாச்சி விளையாடி

ஞர்கள்; "சௌள சௌள" காட்டிலே என்று கூறிக் குதித்தார்கள்.

கண்ணன் கண்ணைக் கட்டும் தலைமையை வகித்திருந்தான். பெண்கள் ஒவ்வொருவராகவோடிப் பிடித்தனர்.

மற்றவர்கள் ஒளிந்திருக்கும் பொழுது ஒரு பெண்ணின் கண்ணைக் கட்டிவிட்டு கண்ணன் "வாயைத்திற, பழந்தின்னலாம்" என்றான். கண்ணன் கைப்பழத்திற்கு விருப்பங்கொண்டு கன்னி வாயைத்திறந்தாள். அதுமட்டுமல்ல. "தனக்கு மட்டும் கண்ணன் பழம் சொந்தமாகும்" என்ற ஓர் பெருமிதம் கன்னிக்கு.

போக்கிரிக் கண்ணன், அங்காந்த வாயில் ஐந்தாறு கட்டெறும்பைப் பிடித்து போட்டுவிட்டு மறைந்தான்.

எறும்பு வாயைப்பிடுங்க "ஐயோ! ஐயோ!!" என்று அலறினாள் கன்னி. ஒளிந்திருந்த மற்ற கன்னியர் ஓடிவந்தார்கள்; அவள் வாயிலிருந்த கட்டெறும்புகளை ஒருத்தி எடுத்தாள். மற்றவள் அவளுடைய கண்ணின் கட்டை அவிழ்த்தாள். நடந்த விஷயத்தை வினவினார்கள். 'கோமளீ! எங்களை விட்டு விட்டு பழத்தை நீ மட்டும் தின்கலாமென்று நினைத்தாயோல்லியோ அதுதான் அந்தக் கண்ணன் அப்படிச் செய்தான்" என்றாள் சுந்தரி.

"சீ பாவம்! அவள் நோயுடன் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது இப்பொழுதுதானா கேலி செய்வது?" எனக் கோமளிக்குப் பரிந்தாள் ஒரு மாது.

அங்காந்திருக்கும்
வாய்தனிலே—கண்ணன்
ஆறெழு கட்டெறும்
பைப்போட்டு விடுவான்;
எங்காகிலும் பார்த்த
துண்டோ?—கண்ணன்
எங்களைச் செய்கின்ற
வேடிக்கை யொன்றோ

"அடீ சுந்தரி! அவனை சும்மா விடக்கூடாது. அவன் தாயார் எசோதாவிடம் போய் அவன் செய்த துஷ்டத்தனத்தை எல்லாம் சொல்லிவிட வேண்டும்" என்று அழைத்தாள் கோமளி. அவர்களுடன் பின்னல் இழுக்கப்பட்ட பெண்ணும் சேர்ந்து கொண்டாள்.

தற்காலத்தில் மந்திரிகளிடம் தங்கள் குறைகளைத் தெரிவிக்க (டெபுடேஷன்) போவதுபோல எசோதையிடம் கண்ணனால் ஏற்படுகின்ற தொந்தரவைத் தெரிவிக்க எல்லோரும் சென்றனர்.

குழந்தை கண்ணன் மிகவும் சாதுக்குழந்தையைப் போன்று தன் அத்தை வீட்டுக்குப்போய் அத்தைக்கு விழுந்து விழுந்து நமஸ்கரித்தான். "பாவம்! குழந்தை; போதுண்டா" என்று ஆனந்தக்கண்ணீர் ததும்ப கண்ணனை அணைத்துக் கொண்டாள். வாய் நிறைய வெண்ணையை ஊட்டினாள். கைநிறைய சீடை, முறுக்கு முதலிய பக்ஷணங்களை அளித்தாள். கண்ணன் வாயில் வெண்ணெயை ஊட்டியதை மறந்து அன்புள்ள அத்தை அவன் முகத்தை தன் முகத்தோடு சேர்த்து முத்தமிட்டாள். அவள் கன்னமெல்லாம் வெண்ணெயாய் விட்டது. "ஐயையோ! அத்தை" என்று சிரித்தான் கண்ணன். அத்தை வெட்கப்பட்டு வெண்ணெயைத் துடைக்க உட்சென்றாள்.

அப்பொழுது கோமளியும் அவளுடைய தோழிகளும் கண்ணன் அத்தை வீட்டில் இருப்பதை அறிந்து அங்கு வந்தனர். கண்

ணன் இதை எப்படியோ அறிந்து கோமளியின் பின்பக்கமாக வந்து அவள் வாயில் வெண்ணெயை முதுகுபுறமாக நின்று கொண்டு தடவிவிட்டுசிட்டாகப் பறந்து கட்டிலில் படுத்து கண்ணை மூடிக் கொண்டான்.

அத்தை கண்ணனைத் தேடிக் கொண்டு வந்தாள். குழந்தை கட்டிலில் படுத்து தூங்குவதைப் பார்த்து தடவிக் கொடுத்துவிட்டு வாசலில் வந்தாள்.

"கோமளி! ஏண்டிம்மா இங்கே நிற்கிருய். உள்ளே வா. இதென்ன வாயில் வெண்ணெய்?" என்று கேட்டாள் அத்தை.

கோமளி, கண்ணன் கட்டெறும்பை வாயில் போட்டதையும் வாயில் வெண்ணெயைத் தடவியதையும் சொல்லி அழுதாள்.

"நன்னுதானிருக்கு. கிடந்து அலைகிறீர்களோ? தங்கமாட்டமா குழந்தை இப்பத்தான் என்னை நமஸ்காரம் பண்ணிவிட்டுத் தூங்குகிருன். என் சாதுத்தங்கத்தை என்னடி வாயில் வந்தவாறெல்லாம் கூறுகிறீர்கள். எங்கேயோ வெண்ணெயைத் திருடித் தின்று இருக்கிருய்; வெண்ணெய் வாசனைக்கு கட்டெறும்பு வந்து கடித்திருக்கிறது போங்கடி வேலையற்றவளே," என்று கூறிக்கொண்டே அத்தை உள்ளே நுழைந்துவிட்டாள்.

"ஏழை சொல் அம்பலம் ஏற்குமா? எசோதையிடமே செல்வோம். அத்தைகளே அப்படித்தான் மருமான் மருமாள் குற்றமே அவர்களுக்குத் தெரியாது" என்று சொல்லிக் கொண்டு எசோதையிடம் சென்றனர்.

அம்மாயக் கண்ணன் எங்கும் நிறைந்தவனன்ருே? எசோதை வீட்டு உட்புறச் சுவரில் ஒன்றும் தெரியாத அப்பாவிபிள்ளை போல் "பசுமாடு" வரைந்துகொண்டிருந்தான். எசோதை வாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்தாள்.

கண்ணனுல் அவதியுற்ற நங்கையர் எசோதையிடம் வந்து கண்ணன் தங்களுக்கிழைத்த இன்னல்களைக் கூறினர்.

ஒரு பெண் "நான் தின்றுகொண்டிருந்த பழத்தை கண்ணன் தட்டிப் பறித்துக் கொண்டான்" என்ருள்.

இரண்டாமவள் "என் பின்னலை பிடித்திழுத்து செம்மண்ணை வாரிப் புடவையில்இறைத்தான்" என்ருள்.

மூன்ருமவள் "கண்ணை மூடி கட்டெறும்பை வாயில் போட்டதுமல்லாமல் வெண்ணெயையும் தடவிவிட்டு ஓடிவிட்டான்" என்ருள்.

"எல்லாம் சரிதான் இப்பொழுது அவன் எங்கிருக்கிருன்?" என்ருள் எசோதை.

ஒருத்தி "அவன் அத்தை வீட்டில் சாதுபோல படுத்துத் தூங்குகிருன்" என்ருள்.

"அதற்குள் நந்தகோபர், வெளியில் வந்து 'குழந்தை உட்சுவற்றில் பசு பொம்மை போட்டுக் கொண்டிருக்கிருன் அந்த பரமசாது. குழந்தைபேரில் இவர்கள் என் இப்படி கோள்சொல்லுகிருர்கள். என்று சிடுசிடுத்தார்.

அத்தையும் வந்தாள். கண்ணன் கட்டிலில் தூங்குகிருன். அவர்கள் சொல்வது உண்மைதான்" என்ருள். உள்ளே போய்ப்பார்" என்ருர் நந்தகோபர்.

19765

பசுவனையும் கண்ணனையும் கண்டதும் எல்லோரும் பரவசமாயினர். ஒரு கணம் அவன் எங்கும் நிறைந்தவனன்ரே? என்று கூறி ஆனந்தக்கண்ணீர் உகுத்தனர்.

"அம்மைக்கு நல்லவன்,
கண்டீர்;—மூளி
அத்தைக்கு நல்லவன்
தந்தைக்கு மஃதே;
எம்மைத்துயர் செய்யும்
பெரியோர்—வீட்டில்
யாவர்க்கும் நல்லவன்
போல நடப்பான்"
"தீராத விளையாட்டுப்
பிள்ளை;... கண்ணன்
தெருவிலே பெண்களுக்
கோயாத தொல்லை"

(தருவான்)

என்று கூறிக்கொண்டே அவனுடைய குணங்களைப் பாடிக்கொண்டு பெண்கள் தம்முடைய வீடு அடைந்தனர்

பெண்களுக்கும் பங்கு

உலக சமாதானத்தை நிலை நாட்ட இப்போதைய ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தால் முடியுமா என்று சந்தேகிக்கிருர் தாமஸ் மூட் என்ற அறிஞர். அவர் சொல்லுகிருர்; 'இரண்டு மகாயுத்தங்களை நடத்தினவர்கள் தான் இன்று ஐ. நா. சபையின் அங்கத்தினர்கள். அமைதியும் அன்பும் நிறைந்த பெண்கள்தான் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும். சர்வ தேச சங்கத்தைப் போல் இந்த ஐ. நா. சபையும் போகாமலிருக்க வேண்டுமானல் பெண்களுக்கும் பங்கு தரவேண்டும். அதாவது ஐ. நா அங்கத்தினர் பதவிகளைப் பெண்களையும் ஏற்கச் செய்யவேண்டும். அப்போதுதான் சமாதான லக்ஷியம் கிட்டும்'

தான் பெற்ற குழந்தை இல்லாவிட்டாலும் ஸரோஜா அதனிடம் அன்பு காட்டுவதில் குறைவைக்கவில்லை. ஆனால் அவள் கணவன் அளவுக்குமீறி அக் குழந்தையிடம் அன்பு பாராட்டுவதை அவளால் ஏனோ பொறுக்கமுடியவில்லை.

"இறுதிக் கோரிக்கை"

"அம்மா! அம்மா!" என்ற குழந்தையின் குரலைக் கேட்டதுமே, ஸரோஜா தனது அறையினின்றும் வெளியே பரபரப்புடன் வந்து மாடிப்படியிலிருந்தபடியே "வத்ஸலா! ஏனம்மா, கூப்பிடறே.வந்துட்டேன்" என கூறிவிட்டு, தனது கலைந்திருந்த ஆடையைச் சரி செய்தபடியே கீழே இறங்கி வந்தாள். அவள் இறங்குவதற்கும், அவள் கணவன் ராமமூர்த்தி குழந்தையை யெடுத்துக் கொண்டு எதிரில் மாடிப்படியில் ஏறிவருவதற்கும் சரியாகவிருந்தது.

"ஓ நீங்களா!" என்று புன் சிரிப்புடனும் வெட்கத்துடனும் கூறியபடியே வத்ஸலாவை செல்லமாகத்தவடையில் தட்டிவிட்டு, மாடிக்குச் செல்லக் கணவனைப் பின் தொடர்ந்தாள் ஸரோஜா.

ஒருமாதமாக மூர்த்தி ஊரிலில்லை. வேலையின் நிமித்தமாக வெளியூர் சென்றிருந்தான். கலியாணமஆனபிறகு இதுவே முதல் தடவை பிரிவினையாகையால், சரோஜாவிற்கு அவனில்லாத ஒவ்வொரு தினமும் ஒரு யுகமாக தனிமையில் காலம் நீடித்தது ஆச்சரியமில்லை. ஆனால் குழந்தையின் தோழமையில் அவனது பிரிவை சகித்து வந்தாள். அக் குழந்தையின்மீது தான் அவளுக் கெவ்வளவு ப்ரேமை!

அன்றையதினம் அவனுக்குப் பிடித்திருந்த மஞ்சள் பட்டுப்புடவையும், அதற் கிசைந் தாற்போலவே அதே வர்ணத்தில் ஜாக்கெட்டும் அணிந்திருந்தாள். எலுமிச்சம் பழம்போன்ற அவளது அழகிய மேனிக்கு அந்த அலங்காரம் எடுப்பாகவே யிருந்தது.ஏற்கனவே அவனது வரவை அறிந்திருந்ததால் தான் அன்று அவள் அவனைத் திருப்தி செய்விக்கத் தன்னை அலங்கரித்துக் கொண்டு ஒவ்வொரு நிமிஷமும் அவனை எதிர் நோக்கியபடியே யிருந்தாள்.

இருவரும், குழந்தையுடன் தமது அறையை அடைந்தனர். மூர்த்தி குழந்தையைத் துடையின்மீது வைத்துக்கொண்டு கட்டிலில் அமர்ந்து தன் கையில் வைத்திருந்த படங்களடங்கிய ஒரு புத்தகத்தை அதனிடம் காண்பித்து அப் புத்தகத்திலுள்ளவற்றைப்பற்றி ஏதேதோ சொல்லிக் கொண்டு, வேடிக்கையாக அதனிடம் கொஞ்சிக் குலவினான். இவ்வினிய காட்சியைக் கண்டு மனதில் உவகைபொங்கியபோதிலும், ஸரோஜாவின் உள்ளத்தில் ஒருபுறம் பொறாமையும் தோன்றி மறைந்தது. கணவனிடமிருந்து தான் பெறப்போகும் அன்பிற்கு அது பங்கு கொள்ளுவது போல. ஆனால் அத்தீயவெண்ணம் சற்று நேரமே யிருந்தது. மறுகணம், கள்ளங்கபடமற்ற அக்குழந்தையின் பேச்சும், செய்கையும் தாய்மையின் தன்மையை

ஜெயஸ்ரீ

மனதில் தோற்றுவித்தது. தந்தையும் மகளும் பேசிக் குலவுவதை சற்று எட்டி நின்றே பார்த்துக் கொண்டு நின்ருள். அவளையுமறியாமல் அவளும் அவர்களுடன் குழந்தையின் மழலைச் சொல்லைக் கேட்டு சோர்ந்து வாய்விட்டு 'கலீரெ'ன சிரித்தாள். அச்சிரிப்பினுல் தான் மூர்த்திக்கு ஸரோஜாவின் நினைவு வரவே, குழந்தையை மெதுவாக இறக்கி விட்டு, "நீ கீழே போய் விளையாடு...," என்று சொல்லி அனுப்பினுன். பிறகு அவளை நிமிர்ந்து நோக்கினுன். அவள் கண்களில் நீர் தளும்ப நின்றுகொண்டிருந்ததைக் காணவும், வருத்தத்துடன் அவளை அன்புடன் நெருங்கி அணைத்தபடியே கட்டிலிலமர்ந்து அவளைச் சமாதானப்படுத்த முயன்ருன்.

அவர்கள் இருவரும் என்றும் வாழ்க்கையின் இன்பத்தை ஆரம்பமுதல் பூர்ணமாக அனுபவித்தவர். அவன் தன்னருகிலிருக்கும் வரை அவளுக்கு எவ்விதமான பயமும் ஏற்பட்டதில்லை. ஆனுல் இனி எப்படியாகுமோ என்கிற கவலை தானுகவே அவளைச் சிறிது நாட்களாகச் சூழ்ந்து கொண்டது. அவனது இனிய அணைப்பின் இன்பத்தில் ஊடி இருக்கும் நிலையில் இன்றும் அப்பயம் தெளியவில்லை. நீல நிற வானின் அழகிய தோற்றத்தை மேகங்கள் மறைப்பது போன்ற சஞ்சலங்கள் அவளது இருதய வானில் தோன்ற வாரம்பித்தன. அவனுக்காக எதையும் செய்யத் தயாரானுள். இல்லையேல் அன்ருெருநாள், "ஸரோஜ்! எங்கள் வார்டில் ஒரு அனுதைக் குழந்தையொன்றிருக்கிறது. பார்ப்பதற்கும் மொழுமொழுவென்று ரொம்பவும் அழகானது. எனக்கு மிகவும் பரிதாபமாகவிருக்கிறது. உனக்கும் பொழுதுபோக்காகவிருக்கும். அதை நாம் வளர்ப்போமா..." என்று கெஞ்சலாகக் கூறும்போது, அவனுக்கிதமாகவிருந்து அன்பு நிறைந்த இல்லற வாழ்க்கையை விரும்பினவளாய், அவனது தோள்களில் தனது இருகைகளையும் வைத்தபடியே, "உங்களுக்கெது விருப்பமோ, அதுவே யெனக்கும்" என்று வெட்கத்துடன் அறைகுறையாக தனது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்க வேண்டியதில்லையே. காலத்தின் வேகத்தில் மேடு பள்ளங்களைக் கடந்தாகவேண்டுமென்பது அப்பொழுது அவளுக்குத் தோன்றவில்லை.

ஏனே, "இன்ருவது, சற்று நிம்மதியாக சந்தோஷமாகவிருப்போ"மென அவளையும் அறியாமல் முணுமுணுத்தாள். அவனணைப்பிலிருந்த அவளது உடல் நடுக்கமுற்றது. அதை யுணர்ந்தான் அவன். அவளது பயத்தைப் போக்கவே, "ஆம், ஸரோஜ்! உன்னை விட்டுப் பிரியேன். ஏன் இந்த நடுக்கம்," மென பதில் கூறி அவளை ஆச்வாசப்படுத்த முயன்ருன்.

ஆனுல் அவன் குரலில் உறுதியைக் காண முடியவில்லை. ஏதோவொன்று திரையிடப்பட்டு மறைத்தது.

தனிமையாகவிருக்கின்ற நிலையிலேதான், ஒவ்வொருவருடைய மனதும் கடந்த கால சம்பவங்களை நினைக்கச்செய்து, அதன் பயனுக வருங்காலமும் நிர்ணயிக்கப்பட்டு விடுகிறது. நன்மையோ தீமையோ யாதாயினும் அனுபவித்தே தீரவேண்டிய விதியே காலச் சக்கரத்திற்கு இயல்பாகவமைந்தது யென்பதை நடைமுறையில் அனுபவிக்கும்

பொழுதுதான், உணர சந்தர்ப்ப மேற்படுகிறது.

சிற்சில சமயங்களில் குழந்தை யின் விஷயமாக அல்பமான சமா சாரங்களுக்கெல்லாம் இருவ ரிடையும் வாக்குவாதம் ஏற்படு வது சகஜம். இருவருக்கும் அதனிடத்தில் அதிக ப்ரேமை யிருந்தது. எனினும் சந்தேக சுபாவங்கொண்டவனுன மூர்த் திக்கு மட்டும் "அக்குழந்தையின் நன்மை" தன்னிடத்தில் தானி ருப்பதாகவும், அவளுக்கு அக் கரை யில்லாதது போலவும் தோன்றும். அவள் வயிற்றில் பிறந்தால்.......இப்படியெல்லாம் ஏதேதோ தோற்றங்கள் காட்சி யளிக்கும், அவள் மனதிலும் புரட்சிகரமான எண்ணங்கள் தோன்ருமலில்லை. எனவே ஹிருதயாந்தரத்தில் இருவரிடை யும் பலமான உணர்ச்சிகள் தோன்றுவதும், மறைவதுமாக விருந்தன.

"என்னை அவளிஷ்டப்படியே ஆட்டிவைக்க வேண்டுமென்று நினைக்கிருள். போவென்ருல் போகவும், வாவென்ருல் வரவும் நானென்ன அவள் கைப் பொம்மையா? அப்படிச் செய்ய அவளுக்குரிமை யேது..." என்று மூர்த்தி நினைப்பான்.

"நான் அவரை ஆட்டிவைக்க இஷ்டப்படுவதுபோல அவர் நினைக்கிருர். அப்படி எண்ணு வதற்கு இடமில்லையென்பது அவர் அறிந்து கொள்ளவில்லை," யென்று ஸரோஜா நினைப்பாள்.

"அவ்வித எண்ணமிருக்கக் கூடாது என்பதை அவர் அறியச் செய்யவேண்டுமென தனக்கிருக் கும் ஆசையில் சமயம் வரும் போது உணர்த்த வேண்டுமென மேலும் நினைக்கத் தொடங்கு வாள்."

"நான் அவளிடத்தில் சிரத் தைக் குறைவாக யிருப்பதைக் காண்பிக்கக்கூடாது. ஏற்கனவே அவள் மனம் புண்படப் பேசி யிருக்கின்றேனென மூர்த்தி தனது இன்பவெறியில் நினைத்துக் கொள்ளுவான்.

இப்படியே அவர்களிருவர் மனமும்முன்னுக்கும்பின்னுக்கு மாக இழுக்கப்பட்டு வாழ்க்கை யின் பாதையில் சென்று கொண்டிருந்தது.

எதிருக்கெதிராக வைக்கப் பட்ட இரண்டு கண்ணுடிகளின் மீது விழுந்த ஏணி எப்படி சிதறி குழப்பமுற்றதாகி விடுமோ, அவ்விதம் அவர்கள் எண்ணங் கள் ஒன்றையொன்று மோதிக் குழப்பமுறச் செய்தன.

* * *

சென்னையில் டாக்டர் மூர்த்தி யை யறியாதவரில்லை. தாராள மான பரோபகார சிந்தை யுடையவர். ஏழைகளின் தோழன் அவன். அவர்களுடைய நிலைமையை சீர்படுத்தவே தனது உடல் பொருள் ஆவியெல்லாம் தத்தம் செய்ய வேண்டுமென்கிற லட்சியங்கொண்டவன். அவ னுக்கிப்பொழுது இருக்கும் உற வினள் ஸரோஜா தவிர அதிக ஆத ரவு தாயொருவளிடமே. அவள் மகா சாமர்த்தியசாலி எனவே தன் மகன் ஸ்கூல் பைனல் பரீக்ஷை முதலாவதாக தேறிவிட வும் சில பெரிய மனிதர்களின் சிபார்சில் கலாசாலைப் படிப்பை இலவசமாக படிக்கச் செய்து விட்டாள். மூர்த்திக்கு 'சுக்கிர தசை' ஆரமபமாகி யிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவன் எடுத்துக்கொண்ட பாட மாகிய 'விஞ்ஞானத்தில்' சிறப் புடன் தேறி யிருக்கவும், அவ னுடைய மேதையைக் கவனித்த

சிறந்த செல்வந்தரான வரத ராஜய்யர் தன் மகள் ஸரோஜா வை அவனுக்கு, வலுவில், அவ னுடைய தாயின் பிரயாசையின லும் கலியாணம் செய்வித்து, டாக்டர் பரீக்ஷையிலும் தேறச் செய்யவும் முடியுமா ?

பொதுவாக எல்லோருடனும் அவன் தாராளமாகப்பழகி, பேச முன் வரமாட்டான். ஆள் உள் ளுக்குள்ளேயே யிருந்து காரி யத்தை சாதிப்பவனென்று உணரவே முடியாது. மேல் பார் வைக்கு "அப்பாவி" என்று கூற இயலும். அவன் குணமறிந்த வளான தாயும் பயந்து, ஆனலும் தன் மகனுக்கு நன்மையையே செய்ய வேண்டுமென்கிற யெண் ணத்தினல், எப்படியோ பணக் காரப்பெண்ணன ஸரோஜாவை மருமகளாக்கிக் கொண்டாள். விதியினல் அதிர்ஷ்டம் மூர்த்தி யின் பக்கத்திலிருந்து உதவியது.

ஸரோஜா செல்வந்தரின் பெண்ணே ஒழிய, நவநாகரீகத் துக் கேற்ப அதிக படிப்பாளி யல்ல. சாதாரணமாகப் படித் தாள். பாண்டித்தியத்துடன் விளங்கா விட்டாலும் சங்கீதத் திலும் செவிக்கினிமையாக சுருதி சுத்தமாகவும் கச்சிதமாகவும் வீணையுடன் பாடுவாள். ஒரே பெண். அழகி. அவளுக்கேற்றவ னகவும் துணைவனகவும் மூர்த்தி யைக்கொண்டு விட்டது விதியின் செயல். அவனை மணக்க அவள் சம்மதித்தாளெனின், "நல்ல கல்வியறிவுடையவன். ஏழையா னதாலும், பிச்சல் பிடுங்கல் தாய் தாய் மாமன் தவிர வேறு யாரு மில்லாததாலும், நம்முடைய பணத்தைக் கருதி நமக்கடங்கி யிருப்பான். மாப்பிள்ளையை வீட் டோடு வைத்துக் கொள்ளலா மென" தந்தையின் திட்டத் தைப் பின்பற்றியேதான். ஆரம்ப வாழ்க்கை ருசியாகவே திகட்டா ததாக விருந்தது. நாம் நினைப்ப தும், நடப்பதும் ஒன்ருக யிருந் தால் விதியின் மீது பழியை சுமத்த சாத்தியமாகுமா. நினைப் பது வேறு; நடப்பது வேருகவே அமைந்துவிட்டது. ஸரோஜாவி னுடைய பிற்கால வாழ்க்கை அந்தஸ்தென்கிற ஏணிப்படியி லுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் கொண்டதாகி விட்டது.

தனது பிரயாணத்தைப்பற்றிக் கூறலானன் மூர்த்தி.ஏழைகளின் சூழ்நிலையை சீர்திருத்தம் செய்வ தற்காக பிரசாரம் செய்வதற்கு ஆரம்பித்த முதல் பிரயாணமிது. "தேசபக்தி" யென்ருல் என்ன விலை யென்று கேட்கும் இனத்த வளைச் சேர்ந்தவள்.

அவளுக்கு அதிலீடுபடுவது சற்றும் இஷ்டமில்லை. அவளது அபிலாஷை யெல்லாம் கணவனு டன் காரில் விதவித அலங்காரங் களுடன் "ஜம்"மென்று பெரிய மனிதர்களின் அழைப்பிற் கிணங்க, "கிளப்"புக்குப் போக வும், டீபார்டி போன்ற விருந்துக ளுண்டு சந்தோஷமாக காலங் கழிக்க வேண்டுமென்பதே.

"நான் மாமாவைப் பார்த் தேன்......," என்று கூறும் போது அவள் முகம் வெறுப்பி னல் மாறுதலடைந்தது. அதைப் பற்றி மேலுக்கு கேழ்க்க விருப்ப மில்லாமல், ஏதோவொரு முக்கிய விஷயம் நினைவுக்கு வந்தவள் போல, "லேடி சுந்தரேசன் வீட் டில் குழந்தைக்கு நாளை ஆண்டு நிறைவு. இன்றே நீங்கள் வந்தால் வரச் சொல்லி யிருந்தனர். எப் பொழுது போகலாமெனக்குறுக் கிட்டு பேச்சை மாற்ற வெண்ணி ணள் அவனுக்கா அது தெரி யாது. பணக்கார ரென்ருலே

அவனுக்கு வெறுப்பே யெனி னும் காரியார்த்தமாகவே அவர் களிடம் நயவஞ்சகமாக நடந்து கொண்டு அருவருப்பை வெளிக் குக் காட்டாமல் மறைமுகமா கவே நாட்டிலிருக்கும் "தரித்திரப் பேயை" விரட்டி ஏழை மக்களை மற்ற உயர்தர மக்களுடன் ஒன்றி வாழவும் சில ஆருயிர் நண் பர்களுடன் பாடுபட்டு வந்தான். அதில் முக்கியமாகநின்றவர் தாய் மாமன். அந்தஸ்தின் உயர் வையே கருதுகின்ற ஸரோஜாவி னுள்ளத்தில் ஏழைகளுக்கு உழைப்பது இழிவாகத் தோன் றுவது ஆச்சரியமில்லை. ஆனல் கணவனின் மீது இருந்த ஆசை யினல் அவனது வேண்டாச் செய்கைகளைப்பற்றி பிரஸ்தாபிக் கவே முற்பட்டாள். அவனும் அவளது பிரபுத்வ சிநேகிதர்களைக் குறை கூறுவான். மறுபடியும் வாக்கு வாதங்களுக் கிடமேற் படும். எனவே இருவரும் மனதி லும் சமூகத்தைப் பற்றிய அபிப் பிராயங்கள் எதிரொலித்தன.

"ஐயா! தபால்! என்ற குரலால் அவர்களது சிந்தனையும், செய்கை யும் கலைக்கப்பட்டது.

மூர்த்திக்குத்தான் அக்கடிதம் வந்திருந்தது. எனவே அதை அவ னிடம் கொடுத்துவிட்டு விஷ யத்தையறிய ஆவலாய் அவனையே ப்ர்த்தபடி நின்ருள் ஸரோஜா. கடிதத்தைப் பிரித்து படித்துக் கொண்டிருக்கும்போதே அவ னது முகம் மலர்ந்து புன்னகை தோன்றியது. படித்துவிட்டு திருப்தியுடன் பக்கத்தில் நின்ற ஸரோஜாவைப் பார்த்தான். கடி தத்திலுள்ள விஷயத்தை அறிய ஆவல் கொள்ளுவதுபோல அவள் முகம் தோற்றுவித்தது.

"விசேஷமொன்றுமில்லை, ஸரோஜ்! எனது நெடுநாளைய நண்பன் இங்கு வந்திருக்கிறன். அவனைப் பார்க்கவேண்டும். வடக்கத்தி ஆசாமி...வா...போக லாம் ... பசியெடுக்கிறது. மணி பன்னிரண்டாச்சு ..." என்று குஷாலாக அவளது முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு கீழே யிறங்கினன். உற்சாகம் நிரம்பி யிருந்தது அவனுக்கு.

கீழே கூடத்தில் சிறுமி வத் ஸலா விளையாட்டு சாமான்களைப் பரப்பிக்கொண்டு ஏதோ ஊட்டி யடித்துக்கொண்டிருந்தாள். தந்தை யிறங்கி வந்ததை அவள் கவனிக்கவில்லை. அவனும் ஏதோ சிந்தித்தபடியே அடுக்களைக்குச் சென்றுவிட்டான்.

எங்கிருந்தோ "சின்னஞ்சிறு கிளியே!" என்ற அடி ஒலித்துக் கொண்டிருந்தது. அந்த பாட்டை கேட்டுக்கொண்டே மூர்த்திக் குப் பின்னல் இறங்கிய சரோஜா விற்கு என்ன தோணிற்றே, ஒரே அடியில் குழந்தையிடம் சென்று அதை வாரி யணைத்து முத்தமிட்டு கொஞ்சினள். "பாபா, அப்பா சாப்பிடப்போரு நீவா ..." என்று கூறியபடியே அதைத்தூக்கிக்கொண்டுஉள்ளே சென்ருள்.

சமையற்கார னிருந்தபோதி லும், தன் கணவனுக்கும், குழந் தைக்கும் தானே பரிமாறினல் தான் அவர்கள் வயிறு நிரம்பும் என்ற திருப்தி சரோஜாவுக்கு உண்டு. அன்றும் அவ்விதமே இதுவரையும்உட்கார்த்திவைத்து அன்னம்பரிமாறினள்.எப்பொழு தும் நிதானமாக ஒவ்வொரு பதார்த்தத்தையும் ருசித்து சாப் பிடுவான்.வீணாக ஒரு பதார்த்தத் தையும் எறியமாட்டான். அவ னுடன் சாப்பிடுபவர்களையும் தன்னைப்போலவே கருதுவான். வேண்டுமானல் சங்கோசப்படா

மல் கேட்டுச் சாப்பிடுங்கள். வீணுக்க வேண்டாம். நாம் நன்ருக ஒன்றிற்கு இரண்டு விலை கொடுத்தாவது வாங்கி விடுகிருேம். கீழே கொட்டி வீணுக்கவும் செய்கிருேம். ஒருவாய் கஞ்சிக்குக்கூட இல்லாமல் தவிக்கும் ஏழைகளின் கதி. பற்ருக் கூலியும், அதைக்கொண்டு வந்தவரை தேவைகளை வாங்கவும் இயலாமல் தவிப்பவர்களைப் பற்றி யார் நினைக்கின்றனர். ஏகப்பட்ட பொருள்களை வைத்துக்கொண்டே, அது கெட்டுவிட்டாலும் குப்பையில் கொட்டுவார்களே ஒழிய, நியாயமான விலையில் எல்லோருக்கும் உபயோகப்படும்படி செய்தறியாத வியாபாரிகளும் உம்...எல்லாம் ஒரே ஊழல். அதைச் சொல்லி விட்டாலோ தலைக்கே மோசம். கலகக்காரரென சிறைவாச தண்டனை லஞ்சம், பொய், பித்தலாட்டம் எல்லாம் ஒழியும்வரை நமது ஜனங்களுக்கு விமோசனமில்லை..." என்றெல்லாம் நீண்டதோர் பிரசங்கம் நடக்கும்.

இயற்கைக்கு மாருக அன்று யோசனையிலாழ்ந்திருந்த மூர்த்திக்கு இன்னது சாப்பிடுகிருேமென்ற நினைப்பில்லாமலேயே ஏதோ ஒருவிதமாக சாப்பாட்டை முடித்துக்கொண்டு, அவசர அவசரமாக மேல் துண்டை யெடுத்துப் போட்டுக்கொண்டு வெளியே போய்விட்டான். காரை யெடுத்துக் கொண்டு செல்லவில்லை. அதனுல் சந்தேகம் உறுதியாயிற்று.

"ஏதோ விபரீதப்போக்கு. பயமாகவே யிருக்கிறது," என்றெல்லாம் நினைத்தபடி சாப்பிடக்கூட பிடிக்காமல் மாடிக்குச் சென்றுவிட்டாள் சரோஜா. ஒரே குழப்பம் சூழ்ந்திருந்தது.

(தொடரும்)

காப்பாற்றுங்கள்!

பெண்களைக் காப்பது ஆண்களுடைய கடமை என்று நெடுங்காலமாகச் சொல்லப்படும் வழக்கத்தை இன்றைய நாகரீகப் பெண் விரும்பவில்லை. ஆனுல் இன்றையப் பெண்களிடமிருந்து ஆண்களைக் காப்பாற்ற எல்லோரும் (கலியாணம் செய்துகொண்ட ஆண்களும் சரி, பெண்களும் சரி) முயற்சிக்க வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்ளுகிறேன்!

—ஹாரி ஹிப்ஷ்மென்'

அபராதி

அவள் மன்னிக்கு அவள் மீது அளவுகடந்த பிரியம்தான் என்றால் அவளை அநாவசிய மனக் கலவரத்துக்குட் படுத்தி இருக்க வேண்டாம். ஆனால் மன்னி பேச்சைக்கேட்டு அவள் சந்தேகப் பேயிடம் சிக்கினது மட்டும் சரியா? படித்துப் பாருங்கள்.

கல்பனா

அன்று வெள்ளிக்கிழமை. படுக்கையை விட்டு எழுந்திருக்கவே மனம் இல்லை. படுக்கையில் கிடந்தபோதே என் மனதில் ஏனோ ஒரு கொந்தளிப்பு. அலாதியான ஒரு கலக்கம். காரணம் புரியவில்லை. நாலைந்து தினங்களாக அவரிடமிருந்து கடிதம் வரவில்லை. இன்றாவது வருமா என்று ஏங்கியது மனம். ஆனால் மனதில் ஏற்பட்ட பரபரப்புக்கு இது காரணமில்லை. பின்னே என்ன? அதுதானே தெரியவில்லை.

நான் எழுந்திருப்பதற்கு முன்னாலேயே குழந்தை காமு எழுந்துவிட்டது. இந்த இரண்டு வயசு வாண்டுக்கு நானும் மூர்த்தியும் தூங்குவதைக் கண்டு கோபம் வந்துவிட்டதாக்கும்! ஹாய் ஹாய் என்று கத்தி அமர்க்களப்படுத்தி மூர்த்தியைக் கிளப்பிவிட்டுட்டது! அப்புறம் சொல்லணுமா? அவன் கையையும் காலையும் உதைத்துக் கொண்டு உதய ராகம் பாட ஆரம்பித்தான். குவா குவா என்று அவன் கத்தினால் இந்தக் காமுக் குட்டிக்குத்தான் எவ்வளவு இரக்கம் வந்துவிடுகிறது! 'பாப்பா! ஊ ஊ!' என்று ஊமை ஜாடை காட்டிக் கொண்டே என்னையும் எழுப்பி விட்டது.

எனக்கு என்னமோ எழுந்திருக்கவே மனசில்லை. விடியற் காலையில் தூங்காமல் படுக்கையில் படுத்திருப்பதில் அலாதி சுகம் இருக்கிறது. ஆனால் பெரியம்மா காமுக் குட்டிக்குத் துணையாக வந்து 'என்னடி இன்னும் தூக்கம்? மணி எட்டாறது' என்று அதட்டினதும் சோம்பல் முறித்துக் கொண்டே எழுந்தேன்.

'இன்னிக்காவது அவரிடமிருந்து கடிதம் கட்டாயம் வரும்,' என்றெண்ணிக் கொண்டே படுக்கையைச் சுருட்டி வைத்தேன். மூர்த்தி உதய ராகத்தை நிறுத்திவிட்டு முண்டியடித்துக் குப்புறத்திக்கப் பார்த்தான். காமுக்குட்டி அவனுடைய முயற்சியை மலர மலர விழித்துக்கொண்டே பார்த்துவிட்டு நாக்கை நீட்டி அழகு காட்டியது! அவன் மட்டும் லேசுப்பட்டவனா? கைகளை முட்டுக் கொடுத்துக்கொண்டு தலையை நிமிர்த்தி உர்ரென்று பார்த்தான். அப்புறம் காமுக் குட்டிக்கு அங்கு நிற்கத் தைரியமில்லை!

வாசலில் வண்டி வந்து நின்றது. என்னுடைய கவனம் அந்தப் பக்கம் திரும்பியது. அண்ணாவும் மன்னியும் இறங்கினார்கள். மன்னி கைக் குழந்தையுடன் முன்னால் வந்தாள். திண்ணைப்புறம் வருவதற்குள்

நான் போய் குழந்தையை வாங்கிக்கொண்டேன்.

அண்ணு பெட்டி படுக்கைகளை இறக்கினுன். பிறகு ராஜாப் பயலைத் தூக்கிக்கொண்டு வந்தான்; எனக்கு அவர்களை என்னென்னமோ கேட்க வேண்டுமென்று ஆவல். ஆனுல் வாய் திறக்க முடியவில்லை. இருவரும் பட்டணத்திலிருந்து வருகிருர்கள். அவரைப் பார்த்திருக்கலாம். ஆமாம் பத்து நாளைக்கு முன்தானே அவர் இங்கு வந்து விட்டுப் போனுர். இதற்குள் அவரைப் பற்றி என்ன விசாரிப்பு என்று மன்னி பரிகாசம் செய்தால்—ஒன்றும் கேட்கவில்லை.

மூர்த்தி ஏதோ ஒரு ராகத்தை ஆரோகணம் செய்ய ஆரம்பித்தான் மாமியைக் கண்டதும்! மாமி அவனை எடுத்துக்கொண்டபோது ஸ்வரம் உச்சஸ்தாயியில் இயங்கியது.

மாடு கறக்கும் பாட்டிக்குப் பக்கத்தில் ரொம்ப யோசனையுடன் நின்றுகொண்டிருந்த காமுக் குட்டியை அண்ணு கூப்பிட்டான். அது லட்சியம் பண்ணணுமே! ஊஹூம் என்று பாட்டிக்குப் பக்கத்தில் போய் ஒட்டிக்கொண்டது.

'மாடு உதைக்கப் போறது,' என்று அம்மா மிரட்டினதும் தைக்கா பிய்க்காவென்று அடிமேலடி வைத்துத் தாத்தாவண்டை போய்விட்டது. அண்ணு மூர்த்தியை வாங்கிக்கொண்டான். அந்த விச்சுப் பயல் ஏதோ ஒரு புது ராகம் பாடப் போருன் என்று நினைத்த என்னை ஏமாற்றிவிட்டான். பரக்கப் பரக்கக் கண்களை அகல விரித்தபடி மாமாவிடம் ரொம்ப உறவாக ஒட்டிக்கொண்டு விட்டான்!

'ஏண்டா மாமிகிட்டே போனபொழுது அழுதே. இப்போ மாமாகிட்டே வந்ததும் சிரிக்கிறே?' என்று வாய் விட்டும் கேட்டுவிட்டேன். அந்த மூணு மாசக் குழந்தையிடமா இப்படிக் கேட்பது? ஆனுல் அந்தப் பயல் உதட்டைப் பிதுக்கி நாக்கை நீட்டி எனக்கும் அழகு காட்டினுன்!

பட்டணத்துக்குப் போன வைபவம், பிரயாண சம்பிரமம் எல்லாம் ஒரு வழியாகப் பேசி முடிந்ததும் சாப்பாட்டுக் கடைக்குள் நுழைந்தோம். ஆனுல் நான் என்னமோ யந்திரம் மாதிரிதான் அன்று இயங்கினேன். ஏனே என் மனசு ஒரு நிலையில் இல்லை. இதையே திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருக்கிறேனே!

சாப்பாட்டுக்கடை முடிந்தது. இரவுப் பிரயாணம், வந்தவர்களை களைப்பும் உறக்கமும் வலைவீச ஆரம்பித்தது. அண்ணு 'என்ன ஒரு மாதிரியா இருக்கே?' என்று என்னைக் கேட்டுவிட்டு சாதாரணமாக 'உன் அகமுடையானைப் பார்த்தேன்' என்று சொல்லி வைத்தான். நானும் 'சரி' என்று தலையாட்டினேன். நானும் மேல்கொண்டு எதுவும் கேட்கவில்லை. அவனும் ஒன்றும் சொல்லவில்லை. கேட்பதற்கோ அல்லது சொல்வதற்கோ புதுசா என்ன இருக்கிறது? என்று நானும் சரி, அவனும் சரி இருந்துவிட்டோம். அவன் திண்ணைக்குப் படுக்கப் போய்விட்டான். நானும் மன்னியும் கூடத்தில் எங்கள் கடையை விரித்தோம். மூர்த்தி ராகம் பாடாமல் மவுனத்தவம் பூண்டுவிட்டான்! காமுக்குட்டிக்கு எங்கள் சபையில் கவர்ச்சியில்லை

தாத்தாவுடன் தர்க்கம் செய்யப் போய்விட்டது. ராஜாப்பயல் மட்டும் படுத்துக்கொண்டே ஏதோ புலம்பிக் கொண்டிருந்தான். நாங்களோ பேச்சு சுவாரஸ்யத்தில் சூழ்நிலையைக் கவனிக்கவே இல்லை.

பேச்சுக்கிடையே மன்னி மெதுவாக 'உங்கண்ணு ஏதாவது சொன்னுராடி', என்று கேட்டதும் என்னுடைய மனப் பரபரப்பு என்னவோ செய்தது. மன்னி ஏதோ ஒரு புதுச்செய்தி சொல்லப்போகிருள் என்று ஊகித்துக் கொண்டேன். 'பகவானே, இது அவரைப்பற்றியோ அல்லது விபரீதமான செய்தியாகவோ இருக்கக் கூடாதே! என்று நினைத்துப் பதற்றத்துடன் அவன் ஒண்ணும் சொல்லலியே மன்னி, ஏன்? என்னது?' என்று கேட்டேன்.

மன்னிக்கு என் பரபரப்புப் புரிந்திருக்கும். ஆனாலும் அவள் இந்த சந்தர்ப்பத்தை நழுவ விடவில்லை. அசாதாரணமான நிதானத்துடன் மெதுவாக, ரொம்பப் பரிபவத்துடன் சாதுரியமாகச் சொன்னாள்.

'அவா ரெண்டு பேரும் தமாஷாத்தான் பேசிண்டா. ஆனாலும் அதுலே என்னமோ இருக்கு திடீர்னு உங்காத்துக்காரர் அந்தப் பொண்ணேப்பத்திப் பேசுவானேன்? அவள் கல்யாணத்துக் குப் போவானேன். அவ என்ன? ஒத்தா? உறவா? அவ யாரோ, 'நாம்ப யாரோ? எனக்கு என்னமோம்மா இவா ரெண்டுபேரும் பேசிண்டத்துலேருந்து சந்தேகமாகத்தான் இருக்கு' என்று ஏதோ பூடகமாகச்சொன்னதும் என் தலை கிறுகிறுத்தது. உடலும் உள்ளமும் ஒரேயடியாகப் பதறியது. என்னுடைய இந்த நிலை மன்னிக்கு இன்னுங்கொஞ்சம் தைரிய மூட்டிவிட்டது போலும். கொஞ்சங் கொஞ்சமாக என்னென்னவோ சொன்னாள். எனக்கு அனுசரணையாகத்தான், என்னிடம் அனுதாபங்கொண்டு தான் அவள் இரக்கத்துடன் சொன்னாளாம்! மனதிலே விஷம் புகுந்துகொண்டது. காலையிலிருந்து கருத்து குழம்பியிருந்த நிலைக்குத் துணையாக இந்த அனுதாப ரகஸ்யமும் சேர்ந்துகொண்டது.

இதயம் வெடித்து விடும்போலத் துடித்தது. தலை கிறுகிறுத்து செயலற்று, சிந்திக்கவும் வகையற்று நிலை புரளச் செய்தது. 'அவர் கடிதம் போடவில்லை. ஆமாம். அவர் ஏன் அங்கு போகவேண்டும்? அவர் முன்னே வந்திருந்தபோது இதை ஏன் என்னிடம் சொல்லவில்லை? அது எப்படிச் சொல்லுவார்? ஒரு வேளை சொன்னாரோ? அப்படியானால் ஏன் எனக்கு அப்போது ஒன்றும் விகல்பம் தோன்றவில்லை? அவர் விஷயத்தைச் சாதாரணமாகச் சொல்லியிருப்பார். அவருக்கு இதில் முக்கியத்துவமோ அல்லது விபரீதமோ தோன்றியிருக்க முடியாது. ஆனால் மன்னியின் அனுதாபக் கூற்றில் விபரீதம் தோன்றிவிட்டது. சந்தேகம் என்னைப் பூரணமாக ஆக்கிரமித்துக் கொண்டது. மன்னியின் காரியம் முடிந்துவிட்டது. நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்துவிட்டாள்.

என்னுடைய நிலை நெருக்கடியின் உச்சநிலைக்குப் போய்விட்டது. என்ன நினைக்கிறோம்? யாரைப்பற்றி இப்படியெல்லாம் சந்தேகிக்கிறோம்? என்றுகூடத் தோன்றவில்லை. இதில் தவறுதலானது ஏதாவதிருந்தால் அப்

யடிப் பஹிரங்கமாக அண்ணாவுடன் பேசியிருப்பாரா? என்றுகூட ஆராயவில்லை. சந்தேகம் என்னை சரியான சிந்தனைப் பாதையிலிருந்து விலக்கிவிட்டது. மனித வாழ்விலே எந்த வியாதி வந்தாலும் சஹிக்கமுடியும். சந்தேக வியாதியை மட்டும் சஹிக்க முடியாது. கொடுமையிலும் கொடுமை இது. நிமிஷத்துக்கு நிமிஷம் என்னுடைய மனக்கலக்கம் வளர்ந்தது.

குழந்தை மூர்த்தியை எறும்பு கடித்துவிட்டதோ, என்னவோ? வீல் என்று கத்திக்கொண்டே துள்ளி எழுந்தான். நான் பிரமை பிடித்தவளைபோல் உட்கார்ந்திருந்தேன். அவனை எடுத்துக்கொள்ளக்கூடத் தோன்றவில்லை.

'என்னடி, பார்த்துண்டே உக்காந்திருக்கியே?' என்று பெரியம்மா அதட்டல்போட்டபோதுதான் விழித்தெழுந்தவள் போல் அவனண்டை சென்றேன். கலக்கம் தள்ளாட்டம் கொடுத்தது. குழந்தையை எடுத்துக்கொண்டு உள்ளே போய்விட்டேன். நெடுநேரம் உள்ளேயே கிடந்தேன். எண்ணாததெல்லாம் எண்ணி மனம் புண்ணாகித் தவித்தேன். சந்தேகம் தந்த வரப்பிரசாதம் சஹிக்கமுடியாத தவிப்பு.

அவர் இன்றுவரை என்னிடம் எந்த விஷயத்தையும் மறைத்ததேயில்லை. ஆனால் இந்த விஷயம்—அப்படியானால் அவருக்கு என்னிடம் திடீரென்று சலிப்பு ஏற்பட்டுவிட்டதா? மன்னி சொன்னதைப் பார்த்தால் இப்படித்தானே நினைக்கத் தோன்றுகிறது. இப்படியெல்லாம் என் மனதிலே சிந்தனை அலைகள்! சிறிது நேரத்தில் மனம் வேறு பாதைக்குத் திரும்பியது. அவரைப்பற்றி நானா இப்படியெல்லாம் எண்ணுகிறேன். ஐயையோ! யாரைப்பற்றி நான் இப்படிச் சந்தேகிக்கிறேன். உள்ளத்தையும், உடலையும், தன்னுடைய வாழ்வின் சகல அம்சங்களையும் எனக்காக என்னுடைய அன்புக்காக, என்னுடைய வாழ்வு நலத்துக்காகவே மனப்பூர்வமாகத் தந்திருக்கும் அவரையா நான் சந்தேகிப்பது? அதுவும் என்மாதிரி ஒரு பெண்ணின் பேச்சைக் கேட்டு!

தவறான விஷயமானால் என் அண்ணனுடன் இப்படிப் பஹிரங்கமாகப் பேசுவாரா! தவறு இருந்தால் கொஞ்சமேனும் சஞ்சலமோ, தயக்கமோ ஏற்பட்டிராதா! குற்றமிருந்தால் அதை மறைக்கத்தானே எல்லோரும் முயற்சிப்பார்கள். அவர் தவறியிருந்தால் எப்பொழுதோ, எப்படியோ அதை மூடி மறைத்துவிட முயற்சித் திருக்கமாட்டாரா? அட கஷ்டமே! என் இதை ஒரு பெரிய விஷயமாகக் கருதி மன்னி என்னிடம் மூட்டை கட்டிக்கொண்டு வந்து சொல்லவேண்டும்?

மன்னி என்னுடைய நலத்தில் கருத்துள்ளவள்தான். ஆனால் அவரைவிடவா? அவள் யார் அவரைப்பற்றிக் கேவலமாகச் சொல்ல? அதைத்தான் நான் எப்படிக் கேட்டுக் கொண்டிருந்தேன். என்னுடைய ஸ்வாஸ்யமே அவளுக்கு ஊக்கமளித்தது. இல்லையா? அவள் கணவனை, என்னுடைய அண்ணனைப்பற்றி நானோ அல்லது வேறு யாரோ அவளிடம் இந்தமாதிரிப் பேசியிருந்தால் அவள் சும்மா விட்டிருப்பாளா? நான் வாயை மூடிக்கொண்டு கவனத்துடன் கேட்டதன் பயனை நெடுநேரம் அனுபவித்தேன். காமுக்குட்டி

குடுகுடு வென்று உள்ளே ஓடி வந்தாள். அவளுக்குப் பசி. என்னுடைய பசி வேறு! விரலைச் சமையலறைப் பக்கமாகக் காட்டிக்கொண்டே 'ஊ ஊ' என்று ஜாடை காட்டினாள். அந்த ஜாடையில் அப்போது எனக்கு கவர்ச்சியில்லை. மன மயக்கம் குறையவில்லை. மீண்டும் மீண்டும் அவளுடைய நச்சரிப்பு வளர்ந்தது. தவிப்புக்கு கோபம் துணை. சலிப்பும்தான். கைஓங்கி முதுகில் அடித்துவிட்டேன்! ஐயோ!

அவர் பக்கத்தில் இப்போது இருந்திருந்தால்! அலறு அலறென்று அலறிற்று குழந்தை. அம்மா எழுந்தோடி வந்தாள். பெரியம்மா 'என்னடி அங்கே' என்று இரைந்த குரலில் கேட்டுக்கொண்டே வந்துவிட்டாள். அப்பாவும் 'யார் அடிச்சா?' என்று பரபரத்துக் கேட்டுக்கொண்டே வந்தார்.

துடி துடித்து நின்ற குழந்தை பாட்டியிடம் நகர்ந்து முகத்தைப் புதைத்துக்கொண்டு கேவிக்கேவி அழுதது. சந்தேகம் இவ்வளவு கொடுமை வாய்ந்ததா? மனுஷ்ய ஜன்மத்தை மிருகமாக்கி விடுகிறது. ஒரு நொடியில் பாவியாக்கி விடுகிறதே!

'எதுக்காகடி அதைப்போட்டு இப்படி அடிச்சே?'

'ரொம்ப நன்னாருக்கு!'

'அது என்ன பண்ணித்து? நான் ஒன்றுக்கும் பதில் சொல்லவில்லை. என் முகத்தைப் பார்த்தாலே அவர்கள் தெரிந்துகொண்டிருக்கலாம். ஆனால் அவர்கள் என்னை லக்ஷியம் செய்யவில்லை.

பெத்தவளுக்குத் தெரியும் குழந்தை அருமை என்பார்கள். ஆனால் அச்சமயம் எனக்கு சந்தேகம் அதிகமாகிவிட்டது. அன்பு மறந்துவிட்டது. ஆனால் என்னைப் பெற்ற தாய்க்குத் தெரியும் அந்தக் குழந்தை அருமை. பரம்பரை பரம்பரையாக நேர்மையும் நம்பிக்கையும், தூய்மையும் வாய்ந்த குடும்பப்பெண்களுக்கு, சுகத்தையும் துக்கத்தையும் சம திருஷ்டியிலே நோக்கி வருவது எதையும் அனுபவிக்கும் திடமும், தைரியம் கொண்டவளான என் தாய்க்குத் தெரியும் குழந்தை அருமை.

எத்தனை கஷ்டங்கள்; இதுமாதிரி எத்தனைக் கோள்சொல்லிகளின் தூண்டுகோல்! எத்தனை வகையில் துன்பம்? அத்தனையையும் கொஞ்சங்கூட சலிப்பின்றி, சந்துஷ்டியாக, எங்களுக்காக அவள் ஏற்று எத்தனை பாடுபட்டிருக்கிறாள். அவளுக்குத் தெரியும் குழந்தை அருமை!

நேற்றைக்குத்தான் நான் ஒரு குழந்தைக்குத் தாயானேன். இன்றைக்கே ஒரு கோள் சொல்லியின் வசப்பட்டு அவரைச் சந்தேகிக்க ஆரம்பித்து விட்டேன்!

பேஷ்! எவ்வளவு அதிசயமானது இந்த மனுஷ வாழ்க்கை! மன்னி எந்த எண்ணத்துடன் எந்த ஆசையுடன் இந்தக் காரியத்தில் என்னை ஈடுபடுத்தினாள்?' என்? உண்மையைத் தெரிந்து கொள்ள, அவருக்கே நான் ஏன் எழுதிக் கேட்கக் கூடாது. அவரிடம் நான் கேட்க உரிமையுண்டு. அவரும் மறைக்காது சொல்லக் கடமைப் பட்டவர். இல்லையா? பேப்பரும், பென்ஸிலும் என் சந்தேக நிலைக்குக் கருவிகள். க்டிதம் எழுதினேன். என்னமோ அதுகாறும் என் தலையைக் குடைந்த ஒரு நிலை கொஞ்சம் குறைந்தமாதிரியிருந்தது.

கடிதம் போஸ்டுக்குப் போய் விட்டது.

மன்னியும் தூக்கம் கலைந்து எழுந்தாள். அவளிடம் நானே முந்திக் கொண்டு சொன்னேன்.

'மன்னி, அவருக்கு நான் எழுதிவிட்டேன்.'

'ஐயையோ!

'ஏன் மன்னி? உண்மை பொய் நமக்குத் தெரிய வேண்டாமா?'

'அட கஷ்டகாலமே நீ ஏண்டி இப்போ எழுதினே?

'ஏன்? எழுதினா, என்ன?'

'எங்கயாவது உண்டோ? அவா புருஷா. எப்படி வேணும்னா லும் நடந்துக்கலாம்.'

'இந்தா மன்னி. புருஷா எப்படிவானா நடந்துக்கலாம்னா உம் புருஷன் நடந்துக்கட்டும். அவர் அப்படியெல்லாம் நடந்துக்க மாட்டார்.'

'நடந்துக்க மாட்டாரா?

'ஆமாம். நடந்துக்கவும் கூடாது- நடந்துக்கவும் மாட்டார்.'

'அப்படின்னா நான் சொன்னது பொய்யா?'

'பொய்யோ, உண்மையோ, அவர் பதில் வந்தா தெரியறது.'

'அப்படின்னா நான் சொன்னது பொய்யின்னு தான் அர்த்தம்!'

'எப்படி வானா வச்சுக்கோயேன்.'

'இதென்னடி இப்படிப் பேசிறியே? உன்னுடைய க்ஷேமத்துலே எங்களுக்கு அக்கரை இல்லையா?'

'உங்களுக்குன்னா?

'எனக்கும் உங்க அண்ணாவுக்கும்தான்.'

'அண்ணாவோடே உன்னையும் ஏன் சேத்துக்கறே?'

'நான் அவர் மனைவியாய் இருக்கறதுனாலத்தான்!'

'நீ அவன் அகமுடையாளா இருந்தா மட்டும் போறுமா அவன் மாதிரி ஆகிவிட?'

'நீ என்னடி சொல்றே?'

'நானா? எங்கண்ணாவுக்கு ஏத்த மன்னியா நீ நடந்துக்கணும்னு சொல்றேன். அவன் வெகுளி. சூதுவாது தெரியாதவன். கஷ்டத்துலேயும் சுகத்துலேயும் கவலைப்படாமே வளர்ந்தவன். அவனுக்குத் தகுந்தவளா நடந்துக்கோங்கறேன். அவ்வளவு தான்.'

'ரொம்ப நன்னாருக்கு. நல்லத்தைச் சொன்னா நீயே எனக்கு உபதேசம் பண்ண ஆரம்பிச்சுட்டையே!

'நானா? எனக்கு உபதேசம் பண்ணவும் தெரியாது. போலி அனுதாபம் காண்பிக்கவும் தெரியாது.எங்கம்மா என்னை இப்படித் தான் வளர்த்துருக்கா. என் கண்ணாவும் இப்படித்தான் வளர்ந்திருக்கான். அவனுக்குப் பொய் சொல்லத் தெரியாது. இல்லாதத்தையும் பொல்லாதத்தையும் நகாஸ் பண்ணிச் சொல்லத் தெரியாது. அனுதாபங்கிற பேர்லே. தெரிஞ்சுக்கோ,' என்று படபடவென்று சொல்லிவிட்டு சமையல் அறைக்குப் போய் விட்டேன். குழந்தை காமு என்னைக் கண்டதும் பயந்து பாட்டியிடம் இறுக ஒட்டிக் கொண்டது!

குழந்தையிடம் தவறு செய்ததற்கு முதலில் பிராயச்சித்தம் பெற்றால்தான் அவரிடமிருந்தும் பெறமுடியும்!

நான் ஏங்கி நிற்பதை எத்தனை நேரம் எட்ட அப்படிப் பார்த்துக் கொண்டிருக்கும்? என் அண்டை ஓடி வந்ததும் கட்டிக் கொண்டேன். குழந்தைகள் தெய்வாம்சம். அதுகள் எவ்

வளவு சீக்கிரம் நம்மை மன்னித்து விடுகின்றன. நாம்தான் மனுஷ்ய ஜன்மம் என்ற போர்வையில்—

மன்னி அன்று பூராவும் என்னிடம் பேசவில்லை. நானும் பேசவில்லை. மறுநாள் அவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் நான் எதிர்பார்த்த பதில் இல்லை. அண்ணா மன்னி சவுக்கியமாக வந்து சேர்ந்தார்களா? என்று எழுதியிருந்தார். அவருக்கு எதற்காக இந்தக் கவலை?

அன்று பூராவும் பொழுது போவதே கஷ்டமாயிருந்தது. எனக்கு என்னமோ பக்ஷியைப் போல இறக்கையிருந்தால் அவரைப் பார்க்கப் பறந்து போகலாமே என்று தோன்றிற்று. இப்படியெல்லாம் கண்டபடி கனவு காண்பதில் என்னமோ ஒரு திருப்தி.

மறுநாள்...தபால்காரன் என் இன்னும் வரவில்லை. நிச்சயம் இன்றைக்கு வரும். ஆமாம், நான் எழுதியிருந்ததற்குப் பதில் —கடுமையாக எழுதியிருப்பாரோ? ஒருவேளை நேரேயே வந்து விடுவாரோ? இப்பத்தானே பத்து நாளைக்கு முன்னே வந்துட்டுப் போனார். ஆகவே கடிதாசிதான் எழுதுவார். என்ன எழுதுவார்?

மணி......மணி பத்தடிச்சுட்டுதே. என் இன்னும்...தபால்காரன் ஜோஸ்யந் தெரிந்தவன் மாதிரி வந்துவிட்டான்.

எனக்குக் கடிதம் வந்திருந்தது! கனமாக இருந்தது. நிறைய என்னென்னமோ எழுதியிருப்பார். முக்கியமாகத்தானிருக்கும். உள்ளே ஓடினேன். என்னைவிட மூர்த்திப் பயலுக்கு அவசரம். கவரைப் பிடுங்கினான்! மித மிஞ்சிய ஆனந்தமோ, அல்லது துக்கமோ விவரிக்க முடியாத ஒரு அவஸ்தை. ஆனாலும் பரபரப்பும், துடி துடிப்பும் குறையவில்லை. கடிதத்தைப் பிரித்தேன். அவசரம் அவசரமாக வாசித்தேன். நிதானமாக இருந்தது முதல் பக்க விஷயம். இரண்டாம் பக்கத்தில் சுளீர் சுளீரென்று ஒவ்வொரு வார்த்தைகளும் சவுக்கடி தர ஆரம்பித்தன. வார்த்தைகள் உயிர் பெற்று என்னை உலுக்கின. உண்மைக்கு எப்போதும் சக்தி உண்டு. நிர்ப்பயமாய், நேர்மையாய் வாழ்பவர்கள், பேசுபவர்கள், எழுதுபவர்கள் ஒரு சிலர். இவரும் அவர்களில் ஒருத்தர்தானே.

'அட கஷ்டமே! இம்மாதிரி சந்தேகம் கொள்ளும் அளவுக்கு உன் புத்தி தாழ்மையடைந்து விட்டதா? நேர்மையான புருஷனுக்கு ஏற்ற நேர்மையான மனைவியாக நீ நடந்துகொள்ள வேண்டுமென்று நானா சொல்ல வேண்டும்? யாரோ சென்னதைக் கேட்டு மனதிலே சந்தேகத்தை நுழைய விட்டு விட்டாயே? இந்த சந்தேகம் ஒரு கர்மவியாதி. முளையிலேயே கிள்ளி விடவேண்டும். இல்லாவிட்டால் சாகும்வரை விடாமல் வளர்ந்து இல்லாத பாடெல்லாம் படுத்தி ஆட்டிவைக்கும்......

அம்மாடி! மனதிலே புகுந்து இதயத்தை அழுத்தின பெரும் பாரம் சட்டென்று குறைந்தது. இல்லை. அடியோடு அகன்று விட்டது. சீச்சி! அவர் சொல்ற மாதிரி இந்த சந்தேகம் கொடுமையிலும் கொடுமையான வியாதிதான்!

அறையை விட்டு வெளியே வந்தேன். நானாகவே பித்துக்குளி மாதிரி சிரித்துக்கொண்டே உள்ளே ஓடினேன். பெரியம்மா 'என்னடீ, நேத்திக்கெல்லாம்

மூஞ்சியை உம்முனு வச்சிண்டிருந்தே, இன்னிக்கு ஒரே சிரிப்பு?' என்று கேட்டதற்கு ஏன் நான் பதில் சொல்கிறேன்?

அண்ணவும் மன்னியும் ஊருக்குப் புறப்பட்டார்கள். மன்னி போகும்போதுவேண்டாவெறுப்பாகப் 'போயிட்டுவரேன்' என்றாள். நானும் போயிட்டுவா மன்னி. நான் சொன்னது ஞாபகம் இருக்கட்டும். இன்னும் ஒண்ணும் ஞாபகம் இருக்கட்டும். அனுதாபம் காட்டறேன்னு எம்மாதிரி யாருகிட்டையாவது எதையாவது சொல்லிப்புட்டு பின்னாலே தவிக்க'தே,என்று சொல்வழியனுப்பினேன். அப்போது அவள் முகத்தைப் பார்க்கணுமே! எனக்கென்னவந்தது, இரக்கம் மிஞ்சிப் போய் என்னைக் கலங்க வைத்தவளின் முகத்தில் இப்போது உண்டான களையை இன்ன ரகத்தில் சேர்ப்பதென்று இன்னும் யோசித்துக் கொண்டிருக்கின்றேன்.

ஆகக்கூடி இதில் யாராவது ஒருவர் குற்றவாளிதான். சந்தேகப்பட்டவளா? சந்தேகத்தை உண்டாக்கினவளா? அல்லது சந்தேகத்துக்குக் காரணமான விஷயத்தைப்பற்றி பேசினவர்களா? அவர்கள் எதைப்பற்றிப் பேசினால் என்ன? நான் ஏன் சந்தேகங்கொள்ள வேண்டும். அதனால் தவி தவிக்க வேண்டும். உண்மைதான். அவளுடைய பேச்சைக் கேட்டதனால், அவளுடைய வார்த்தையை நம்பினதனால் அபராதி நான்தான். தண்டனையையும் நானே அனுபவித்துவிட்டேன். மனதிலேற்பட்ட மகத்தான கலக்கம், கொந்தளிப்பு, தவிப்பு, தடுமாற்றம் இவ்வளவு போதாதா தண்டிக்க! தண்டிக்கப்பட்ட பிறகு இனி நிம்மதி உண்டாக வேண்டியதுதானே?



அன்பு

அன்பிற்கு இருக்கும் சக்தி அளவிட முடியாதது. பலாத்காரத்தை விட அன்பின் பலம் மிகுந்த வேகமும் வனப்பும் கொண்டது.

'காந்தியடிகள்'

மறக் குடிப் பெண்களின் வீர உணர்ச்சியைப்பற்றி எத்தனையோ கதைகள், பாடல்கள் உள்ளன. இக் கட்டுரையில் வரும் அங்கம்மா மறக் குல மாணிக்கம். எப்படிப்பட்ட தியாகத்துக்கும் துணிந்திருககும் அவளை வீரத்தாய் என்று ஏன் போற்றக்கூடாது!

வீரத்தாய்

வித்வான் பாலாம்பிகை

இன்று பட்டினியாலும் பஞ்சத்தினாலும்பரதவிக்கும் இந்தியா, பலவாண்டுகளுக்குமுன், தனது வளத்தினால்,கண்டோர் கண்களையும் கருத்தையும் கவர்ந்தது. வளத்தின் காரணமாகவே, பிற நாட்டார் இந் நாட்டின் மீது படையெடுத்து வந்தனர். ஆனால், வீரமே உயிராய்க்கொண்ட மக்களை, வெல்ல முடியாமல் திரும்பினர். காலசக்கரம் சுழன்றது. மக்களின் ஒற்றுமை குறைந்து, சுயகாரியப் புலிகளாயினர். வடநாட்டு ரஜபுத்திரர்கள் பொறாமையினாலும், குறுகிய எண்ணத்தினாலும், ஒருவரையொருவர் பகைவரிடம் காட்டிக்கொடுத்துத் தன் நாட்டையும், வாழ்வையுமிழந்தனர். அக்காலத்திலும், தென்னாட்டு மக்களின் வீரம் குறையவில்லை. அவர்களின் வீரக்கனலுக்கெதிர்நிற்க முடியாத அன்னியர், வஞ்சமற்ற தமிழரை, வஞ்சனையினாலேயே வென்றனர். அடிமை வாழ்வினால் வீரம் குறைந்து கோழைகளாயினர் நம்மவர்.

நாட்டையும் நலனையும் இழந்து தவித்தனர். புண்ணியப் பயனால், இழந்த நாட்டை மறுபடியும் பெற்றும், சண்டையும் சாவும் பஞ்சமும் நீங்கினபாடில்லை. நாட்டுப்பற்றும், வீர உணர்ச்சியும் குறைந்ததே நாட்டின் இன்றைய நிலைக்குக் காரணம்.

சுமார் ஆயிர வருடங்களுக்கு முன் ஆண்களேயன்றிப் பெண்களும்,வீர உணர்ச்சியும் நாட்டுப் பற்றும் மிக்கவரா யிருந்தனர். அவர்கள், தம் மக்களுக்கு வீரத்தை யூட்டி வளர்த்தனர். சிவாஜிக்கு வீரமூட்டி மாராத்திய மன்னனாக்கியவள் அவன் தாய் ஜீஜாபா யல்லவா?

தென்னாட்டு வீரர்களுக்கு மறவரெனப் பெயர். இழிகுலத்தவராகக் கருதப்பட்டு வந்தனரேனும், நாட்டின் உயிர்நிலை அவர்களே, தமிழ்நாட்டு வேந்தர்கள் சிறப்புற்றது அம் மறவர்களால்தான்.

அரசர்களும் அவர்களை இழிகுலத்தவராகக் கருதாமல், வேண்டுவன கொடுத்துப் போற்றிவந்தனர். அதனால், அவர்கள் நாட்டுப் பற்றுமிகுந்து, தன் உயிரைக் கொடுத்தேனும், அரசனையும், நாட்டையும் காப்பது தன் கடமையெனக் கருதினர்.

இங்கு காணப்படும் வரலாறு ஓர் மறக் குலத்து வீரப் பெண்ணைப் பற்றியதாகும்.

பச்சைப் பசேலென்ற புதர்களும் மரங்களும் நிறைந்த ஒரு மலைச் சாரலில் அமைந்திருந்தது அவள் குடிசை. அது கருங்கல் சுவரெழுப்பி பனையோலைக் கூரை வேய்ந்திருந்ததேனும், விசாலமாயும் சுத்தமாயு மிருந்தது.

அக் குடிசை வாயிலில் நின்றிருந்தாள் அப் பெண்ணழகி அந்த மங்கையின் மேனி கறுத்திருந்ததேனும், கட்டழகு வாய்ந்து கண்டோர் கண்களைக் கவர்ந்தது. கவலைப்படுபவள் போலக் காணப்பட்ட அவள். எதையோ செவிகொடுத்துக் கேட்பதும், தனக்குத்தானே பேசிக்கொள்வதுமா யிருந்தாள்.

அச் சமயம், விளையாடப் போயிருந்த அவள் மகன் செல்லப்பன், தான் கொன்று வீழ்த்திய புலிக் குட்டியுடன் ஓடிவந்து, அம்மா! அம்மா! இதோ பாத்தியா இந்தப் புலியை. இது என்னிடம் தன் சாமர்த்தியத்தைக் காட்ட ஆரம்பித்தது. ஒரே வீச்சு வீசினேன். சுருண்டு விழுந்திடுச்சு. அம்மா இதன் தோலு எனக்குத்தான். வேறெ யாருக்கும் கொடுக்க மாட்டேன்.'

தாய் மகிழ்ச்சியுடன் மகனையணைத்து, 'அட என் சிங்கக் குட்டி, ஒன்னே காளியாயி, நல்லா வெக்கணும். ஓங்க மாமன் உன் தைரியத்தைப் பார்த்தா சந்தோசப்படுவானே. சாமி தயவுலே, அவன் சொகமா திரும்பி வரணுமே.'

'அம்மா! மாமன் எங்கேயம்மா போயிருக்காரு?'

'நம்ம ராசா இருக்காரோல்லியோ, அவரோடே, பகைவங்க சண்டைக்கு வந்துட்டாங்களாம். அவங்களோடெ சண்டை போட்டு, நம்ம ராசாவை காப்பாத்தரதுக்கு காத்தாலே, போனவரு இன்னம் வரல்லே, ஓங்கப்பன் ஊரிலிருந்தாலும். பாத்துட்டுவரச் சொல்லுவேன்.

'நம்ம ராசா நல்லவராச்சே. எதுக்கு, அவரோடெ சண்டை போடராங்க?'

'நல்லவரா யிருக்கறத்துனாலே தான் குடிங்கள்ளாம் அவர் மேலே உசிரா யிருக்காங்க. நம்ம ராசா ஒருத்தருக்கும் ஒரு கொறையும் வைக்கறதில்லெ. அதனாலே, அவங்கவங்கோ தொழிலெ, சந்தோஷமாயும், ஒழுங்காயும் செய்து வரத்துனாலே, நாடு வளமா யிருக்குது. அதெப் பாத்து ஆசைப்பட்டு நம்ப நாட்டெ தங்களுக்கு சொந்தமாக்கிக்கனு மென்கிற பேராசையினாலேதான் மத்த ராசாங்கள்ளாம் நம்ம ராசாவோடே சண்டெக்கி வராங்க. எப்படியாவது நம்ம ராசா ஜெயிக்கணம்.'

'அம்மா! என்னெ மாத்திரம் அனுப்பிச்சுங்களானு, ஒரே நிமிசத்துலே அவுங்களெ, அடிச்சுத் தொரத்திப்புட்டு வந்துடுவேன்.'

'அட, என் ராசா! நீ சின்னவனுச்சேயப்பா, ஒனக்கு இன்னம் பதினாலு வயசு கூட ரொம்பலியே. சண்டை போடறதுக்கு வேண்டிய தைரியம் வரத்துக்கு இன்னுங் கொஞ்ச நாளாவது ஆக வேண்டாமா?

'அம்மா! எனக்கா தைரியமில்லே. அனுப்பிச்சு பாருங்கோ. அப்போ தெரியும், நான் தைரியசாலியா, மத்தவங்க தைரியசாலியான்னு. என் உசிரைக் கொடுத்தாவது, நம்ம ராசாவெ காப்பாத்த மாட்டேனு!

'எங்கேயப்பா உன்னே அனுப்ப ணும்?' என்றுகேட்டுக்கொண்டே வந்தான், அவன் தந்தையாகிய கறுப்பண்ணன்.

'அப்பா? இப்பதான் வூட்டு நெனவு வந்திடுச்சாக்கம். எத்தினெ நாளாச்சு போயி. ஒங்க தங்கச்சி சௌக்கியமா?'

'அவ சீக்கா இருந்ததினலே தான் இத்தனெ நாளாச்சு.'

'சீக்கா யிருந்தாளா, இப்போ எப்படி யிருக்குது. என்ன ஒடம்பு?'

மலேயிலேருந்து எறங்கி வரச்சே, பாறை தடுக்கி கீழே வுழுந்துட்டாளாம். அதனலே, மொழுங்காலு எலும்பு முறிஞ்சு, காலே எடுத்துடணும் போலேயிருந்துச்சு. ஏதோ பச்செலெ, இச்செலெ அரைச்சுப் போட்டதிலே, இப்போ கொஞ்சம் தேவலே. அதிருக்கட்டும், நம்ப ஊர்லே, சண்டை அமக்களப் படராதாமே. நம்ப நாட்டை பகைவர் வந்து வளேச்சுண்டு டாங்கன்னு கேள்விப்பட்டேன், நெசமாகவா?'

'ஆமாம், கோட்டையைப் பகைவர் வந்து வளேச்சுக்கிட்டாங்க. இஷ்டப்பட்டவங்க சண்டைக்கு வரலாம்னு, விடியரத்துக்கு முன்னேயே பறையடிச்சான். அதெக் கேட்டு, அண்ணன் போயிருக்காரு. போனவரு பொழுது சாஞ்சிப் போச்சே இன்னும் வரலியேன்னுதான், கவலெப்பட்டுண்டிருக்கேன்.'

'இரு, இரு, அதோ கவனி, கிழக்கு திக்கிலே யிருந்து, ஏகத்துக்கு எறைச்சல் கேக்கறதே, சண்டை போடர மைதானம் அதுதான். நான் போயி பாத்துட்டு வரேன்.'

2

'அங்கம்மாள், அங்கம்மாள் மனசெ திடமா வெச்சுக்கோ கவலேப்படாதே. நம்ம மறவர் குலத்துக்கே, அழியாத புகழ் தேடி வெச்சுட்டிருக்கான், ஒங் கண்ணன் வீரப்பன்,' என்று சொல்லிக்கொண்டே வந்தான் கறுப்பண்ணன். 'என்ன சொல்றீங்க. எனக்கு ஒண்ணுமே புரியலியே. அண்ணன் என்னவானரு?

'என்னவானரு. என்னுன்னு சொல்றது! என்ன வீரம்! என்ன தைரியம்! வீரப்பன் என்ற பேருக்கேத்தவன் அவன்தான்! எதிர்த்து வந்த யானைப் படைகளெல்லாத்தையும், அவன் ஒருத்தனே வெட்டித் தள்ளிப் புட்டிருக்கான். அதுக்குள்ளே அவன் மேலே யாரோ ஈட்டியை எறிஞ்சுட்டாங்க போலிருக்கு. அந்த ஈட்டி மார்லே பதிஞ்சுட்டிருக்கு. அப்படியே உயிர்போற வரெக்கும் சண்டெபோட்டு. ரணகளத்துலே பகைவர் பூண்டே இல்லாதபடி துறத்திட்டிருக்கான். ராசாவே அவன் செயலுக்கு ஆச்சரியப்பட்டு கதறு கதறுன்னு கதறிட்டாரு. அவரே தான் ராசாக்களுக்கு செய்யற மரியாதையோடே, அவன் ஒடம்பே அடக்கம் பண்ணி, அதின் மேலே அவனெப்போலே உருவம் செஞ்சி வெக்கப் போரு ராம்.'

'அண்ணு! அண்ணு! நீ நல்ல புகழெ தேடிண்டே! நம்ப குலத்துக்கும் கீர்த்தியைத் தேடி வெச்சுட்டே. ஆனு அண்ணு, எனக்கு இன்னமே ஆதரவு யாரு? தாய் வூடுன்ன ஆசையே இல்லாமே, பூடுச்சே. அண்ணு ஒன்னெ எப்படி மறப்பேன். ஒன்னேடே பொறந்த நான் ரொம்ப பாக்கிய

சாலியப்பா. ஒன் வீரத்தே பாத்து சந்தோஷப்பட்டு காளி யாத்தாளே, ஒன்னே தங்கிட்டெ அழைச்சுண்டுட்டா ளாக்கம். (சற்று தேறி) அதிருக்கட்டும், வெற்றி யாருக்கு? நம்ம ராசா பக்கமா, அல்லது பகைவர்...

'இன்னிக்கு நம் பக்கந்தான் வெற்றின்னு சொல்லணும். ஆனா பகைவர் நெறைய,படை சேர்த்து வெச்சிருக்காங்களாம். நாளைக்கு மறுபடியும் திடீரென்னு கோட்டையை வளைச்சிண்டா லும் வளைச்சிக்கலாமுன்னு சொல்லிக்கிராங்க.'

'எவ்வளவு படைதான் சேத்து வெச்சா என்ன? நாம்ப உசிரோடே யிருக்கச்செ நம்ப ராசாவெ. காட்டி குடுக்கலா மான்னா. நாளைக்கு மறுபடியும் சண்டைக்கு வந்தா நீங்க போயி ஜெயிச்சுட்டு வந்திடுங்க.'

'உம். இருக்கட்டும் ஒரு கை பார்க்காமலா போவேன்.'

3

அன்று இரவு முழுவதும், அங்கம்மாளின் வீட்டில், ஒருவரும் தூங்கவில்லை. இரவு முழுவதும், வீரப்பனைப் பற்றிய பேச்சுத்தான். பொழுது விடிந்ததும், பாசறைக்குச் சென்று வீரப்பனுடலத்தைப் பார்க்க வேண்டுமென்று முடிவு செய்திருந்தனர்.

பொழுது விடியும் சமயம் பறையொலி கேட்கவே அனைவரும் வீதியில் வந்தனர். பறையடிப்பவன், "பகைவர்கள் மறுபடியும் வந்து கோட்டையை வளைத்துக் கொண்டனர். வீரமுள்ளவர் வந்து உதவி செய்யலாம்" என்று கூறிக்கொண்டே பறையடித்தான்,

கருப்பண்ணன் தன் மனைவியை நோக்கி 'அங்கம்மா! நான் போயி அந்தப் பயலுங்களெ தொறத்திட்டு வந்துடரேன். நம்ப தங்கமான ராசாவெ, ஒரு முட்டாளா ஜெயிப்பது, எடு வாளெ', என்றான்.

அங்கம்மாள் மகிழ்ச்சியுடன் கணவனுக்குப் போர்க் கோலம் செய்தாள். ஆயுதங்களை எடுத்து தீட்டிக் கொடுத்தாள். குடிசையில் வாசலில் வைத்திருந்த காளியின் சிலைக்கு இருவரும் வணங்கினர்.

அங்கம்மாள், கண்களில் ஜலம் தளும்ப, 'காளியாயீ! நீதான் எம் புருசனுக்கு துணைபோய் அவருக்கு வெற்றி கொடுக்கணும், என்று பிரார்த்தித்தாள். கருப்பண்ணனும் ஜெயகாளி என்று சொல்லிக்கொண்டே சென்றான்.

அங்கம்மாள் தன் கணவனை நோக்கி காளியாயி, ஒங்களுக்கு துணை வருவா, போயி பகைப் பூண்டே இல்லாமே. அடிச்சு தொறத்திப்புட்டு, மாரிலே காயத் தோடே வரணும். முதுகில் காயத்துக்கு மாத்திரம் இடங் கொடுக்கக்கூடாது தெரியுமா? என்று சொல்லி வழியனுப்பினாள்.

4

அன்று முழுவதும் கடும் போர். புறங்கொடுத் தோடினவர் பலர். உயிர் விடும் வரையில் வீரத்துடன் போர் செய்து மார்பில் காயத்துடன் இருந்து புகழுக்கிலக்காயினவர் பலருமாயிருந்தனர். கருப்பண்ணன் பக்கம் நின்ற வீரர்களனைவரும் இறந்துவிட்டனர். ஆற்று வெள்ளம் போல் எதிர்த்து வந்த படைகளை, அவனொருவனே நின்று விலக்கி வந்தான். என்னதா

னிருந்தாலும், நூற்றுக் கணக் கான வீரர்களை ஒருவன் என்ன செய்யமுடியும். ஊசி நுழைய இடமில்லாமல், உடம்பெங்கும் காயம். வலது கை யறுந்து விட்டது. இடது கையினலேயே போர் செய்தான். இடது கையும் அறுந்துவிட்டது. கால்களினு லும், தலையினுலுமே, பகைவரை விலக்கினன். கடைசியில் மார் பில் பாய்ந்த வாளுடன் ஜெய காளி என்று சொல்லிக்கொண்டு கீழே விழுந்தான். கணவனிறந்த தைக் கேட்ட அங்கம்மாள், போர்க் களத்திற்கு வந்தாள். மார்பில் காயத்துடன் விழுந் திருக்கும், கணவனைக் கண்டாள். கணவனிறந்ததைப் பற்றி வருத்த மொரு பக்கம். வீரத்தை நிலை நாட்டி யிறந்ததைப் பற்றி மகிழ்ச்சி யொருபக்கம் சற்று நேரம் கணவனிறந்ததைக் குறித் துப் புலம்பினுள். அவனுடல் வீரர்களுக்குரிய மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

மறு நாள் காலை வழக்கப்படி போர்ப் பறை யொலி கேட்டது. அவள் ஒரே மகனைத் தவிர வேறு யாருமில்லை. நாட்டுப் பற்று ஒரு பக்கம். வீர உணர்ச்சி யொரு பக்கமுமாகத் தூண்ட, வேகமாக வெழுந்தாள். மகனை யெழுப்பி னுள். அப்பா! மகனே! மறுபடி யும் பகைவர் கோட்டையை வளைச்சுட் டாங்களாம். நாம் ராசாவின் உப்பைத் தின்னு வளர்ந்தவங்க. உயிரைக் கொடுத் தாவது நாட்டையும், ராசாவை யும், காப்பாத்த வேண்டியது. நமது கடமை. மறக் குடியின் ரத்தம் ஒன் உடம்பிலே, ஓடரது. போய், தைரியமா சண்டெ போட்டு, ஜயத்தோடே வரணும் தெரியுமா, என்று கூறி, மக னுடைய தலையில் எண்ணெய் தடவி வாரினுள். வெள்ளாடை யுடுத்தி வாளைக் கையில் கொடுத்து, தன் குல தேவதை யாகிய காளியை வணங்கச் சொன்னுள். பிறகு அப்பா! போயிட்டு வரப்பா ஜெயகாளி! என்று சொல்லி வழியனுப்பி னுள்.

அச் சமயம் அவ் வழியாக மாசாத்தியார் என்னும் பெண் போய்க்கொண் டிருந்தாள். அவள் கவி பாடுவதில் வல்லவள், அங்கம்மாளுடைய செயலை வியந்து ஒரு பாடலைப் பாடினுள். அது புற நானூறு என்னும் நூலிலுள்ளது.

கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதின் மகளிராதல் தகுமே
மேனுற்ற செருவிற்கிவள் தன்னை
யானை யெறிந்து களப்பட்டனனே
நெருநலுற்ற செறுவிற்கிவள் கொழு
நன்
பெரு நிரை விலக்கியாண்டு
பட்டனனே

இன்றும்,

செருப்பறை கேட்டு விருப்புற்று—
முயங்கி
வேல்கை கொடுத்து வெளிது விரித்து
—டிகிப்
பாறு மயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒரு மகனல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென
விடுமே.

✲

ய. லக்ஷ்மிநாராயணன்

[முன்கதை: ஆகஸ்டு இயக்கத்தின்போது கோட்டுதுடி கிராமத்தில் நிர்மாண சேவை செய்ய வந்த நாணுஜிக்கு அப்புப்படையாச்சியும், அவன் மருமகன் உலகநாதனும் நண்பர்களாகிறார்கள். உள்ளூர் மைனரின் மகன் ராஜகோபாலும், தேசசேவிகை சகுந்தலாவும் நாணுஜிக்கு கிராமத்தில் ஒரு பக்கத்தில் இருக்கும் ஆதரவையும், மறு பக்கத்தில் இருக்கும் எதிர்ப்பையும் காண்கின்றனர்.]

என்னுடைய ஆழ்ந்த யோசனையையும், ராஜகோபாலின் மௌனத்தையும் கலைத்துவிட்டது சகுந்தலாவின் மதுரமான குரல். கடந்த நாலைந்து தினங்களாக அவள் மனதில் அடக்கி வைத்திருந்ததை யெல்லாம் கடகட வென்று இப்போது பாடம் மாதிரி ஒப்பிக்க ஆரம்பித்தாள்.

'ஒன்றுமே யில்லாத, உப்புச் சப்பற்ற இந்த விஷயத்துக்கு ஏன் இவ்வளவு ஆர்ப்பாட்டம் என்று எனக்குப் புரியவில்லை. நாணுஜி, நான் காலேஜிலிருந்து வெளியேறி அரசியலில் தீவிரமாக இறங்கியபோது இம்மாதிரி சம்பவங்கள் நடக்கும் என்று கற்பனை கூடச் செய்தேனில்லை. நகரவாசம் நம்மை அந்தநிலையில் தான் வைத்திருக்கிறது. உடன் படித்தவர்கள், பலர் என்னுடன் சேராதது கண்டு வியப்பும் வெறுப்பு முண்டாயிற்று ஏன்? ராஜாவே காலேஜைத் திரஸ்கரிக்க இஷ்டப்படவில்லையே! நீங்கள், ஏன் உங்களைப்போன்ற இன்னும் பலர் இவ்வளவு பெரிய இயக்கத்தில் ஈடுபடாமல் ஒதுங்கிவிட்டதைக் கண்டு நான் பதறினேன். இன்னும் ஸ்பஷ்டமாகச் சொல்லப்போனால் 'சமயோசிதவாதிகள் இவர்கள்,' என்றுகூட நினைத்தேன். இப்போதும் அந்த எண்ணம் மாறிவிட்டதாக நான் சொல்லவில்லை.

ஆனால் இந்தக் கிராமாந்திரங்கள்தான் எவ்வளவு அதிசயமான பிரதேசம்? பாடுபட்டவன் சாப்பிடப் பணக்காரன் உத்திரவைக் கேட்கவேணுமாம்.

உள்ளதை அனுபவிக்க அயலான் அதிகாரம். பிள்ளை கல்யாணம் செய்துகொள்ள அப்பா உத்திரவு கிடைக்காது. அ, ஆ வன்னு கூடத் தெரியாத அப்பாவிகளே வாருங்கள் என்னிடம் படிக்க என்று கொஞ்சுபவன் சமூக விரோதியாகப் பாவிக்கப்படும் விந்தை. பேஷ்! இன்னும் எத்தனையோ? சேச்சே! நகரவாசிகளைப்போல் இவர்களும் விழித்துக்கொள்ள இன்னும் இரு நூறுவருஷம்ஆனாலும்போராது. இவர்களைச் சீர்திருத்த ஆரம்பித்தால் யுகக்கணக்காய் நாம் வாழ வேண்டிய சக்தியைப் பெற வேண்டும் முதலில்! 'ஆமாம் சகுந்தலா, எழுலட்சம் கிராமங்கள் முக்கியமா, ஒரு சில நகரங்கள் முக்கியமா?'

'நகரங்கள்தானே வழிகாட்ட வேண்டியிருக்கிறது.'

'ஆனால் நகரவாசிகள் வாழ்வது கிராமவாசிகளால் தானே?'

'இல்லை யென்று சொல்ல வில்லையே! இருந்தாலும் நகரங்கள் விழித்துக்கொண்டனவே.'

'விழிப்புக்கு மூலம் கிராமங்கள்தானே? என்று ராஜா இடைமறித்துக்கேட்டான்,'

'என்ன சொல்லுகிறீர்கள் ராஜா?'

'என்ன சொல்லுகிறேனா? கிராமவாசிகளில் ஒரு பகுதியின் உழைப்பால் மற்றொரு பகுதி பிழைக்கிறதல்லவா'!

'ஒரு பகுதி யென்ன? முக்காலே மூணுவீசம் பகுதியால் ஒரு வீசம் பிழைத்துக் கொழுக்கிறது.'

'வாஸ்தவம். இந்தப் பாடுபடும் கிராமவாசிகள்தான் நகரவாசிகளையும், அதாவது பிரமுகர்கள், பட்டதாரிகள், தேச பக்தர்கள் ஆகிய எல்லாரையும் வாழவைக்கின்றனர்.'

'நீங்கள் சொல்வதைப் பார்த்தால் நகரவாசிகள், கிராமவாசிகளால்தான் பிழைக்கின்றனர் என்று சொல்லுவதாகத் தோன்றுகிறது.'

'தோன்றுவதென்ன? உண்மை இது!'

'சரி, உங்கள் வார்த்தைப் படியே உண்மை என்று வைத்துக்கொள்ளலாம். நாட்டு நலனில் கருத்தைச் செலுத்துபவர்கள் படித்தவர்கள், நகரவாசிகள், நாடு பூராவுக்கும் அவர்கள் சேவை செய்கிறார்கள். இல்லையா?'

'இல்லையென்று சொன்னேன்? ஒரு சில நூறுபேர்கள் இருக்கலாம்!'

'மற்றவர்,—'

'கோடங்குடி மைனரைப் போன்றவர்கள்தான். அவர்கள் உண்மையாகவே தேச சேவையை, தங்கள் கடமையைச்செய்திருந்தார்களானால் இன்று கிராமங்கள் ஸ்வர்க்கங்களாக மாறியிருக்கும். கோடிக்கணக்கான, உண்மையான செயலாற்றும் தேசபக்தர்கள் இருப்பார்கள்.'

தங்கள் பெருமையைவிட, கடமை பெரிதென்று அவர்கள் நினைத்திருந்தால், உன்னைப்போல் ஆவேச உணர்ச்சி கொண்ட தேசபக்தர்கள் நினைத்திருந்தால், கடந்த முப்பது ஆண்டுகளாகச் சேவைசெய்யும் அத்தனைபேரும் கிராமங்களைத் தட்டியெழுப்புவதில் முனைந்து நின்றிருந்தால், இன்று நாணுஜியோ, அல்லது வேறுயாரோ இங்கு வந்திருக்க வேண்டாம். கட்டுப்பாடான ஒருபோராட்ட அரங்கில் இவர்

கள் முன்னணியில் நின்றிருப்பார்கள். இப்போது அவர்கள் கண்கள் திறக்கப்படவில்லை. நாளைய தினமே நாடு திடீரென்று சுதந்திரமடைந்து விடுவதாகவைத்துக் கொள். அப்போதும் இந்த விழித்துக் கொள்ளாத மக்கள் சுதந்திர இன்பத்தை அனுபவிக்க மாட்டார்கள். நகர வாசிகள் அவர்களுடைய உழைப்பின் பலனை உண்டு களிப்பதென்னவோ உண்மை. ஆனால் அவர்கள்...சுதந்திர இன்பத்தை ஒரு சிலர்தான் அனுபவிப்பார்கள். இதனால் யாருக்கும் பயனிருக்கப் போவதில்லை.

அடக்கமாக, ஆனால் அழுத்தமாக ராஜகோபால் இப்படிப் பேசியதைக் கண்டதும் நான் பிரமித்துவிட்டேன். சகுந்தலாவை வாதத்தில் அவன் மிஞ்சி விட்டான் என்பதற்காக அல்ல. ஆனால் எவ்வளவு ஆழமாக சிந்தித்துப் பேசியிருக்கிறான். எத்தனை பெரிய உண்மையைச் சடசட வென்று அவன் விளக்கிவிட்டான்? அளவு கடந்த தீவிர வாதம் பேசும் சகுந்தலாவை இவ்வளவு சீக்கிரத்தில் அவன் மடக்கிவிட்டதும் ஒரு பெரிய காரியம்தான். இல்லாவிட்டால் அவளை மனைவியாகப் பெறுவதற்கு அவன் தகுதியாவது எப்படி?

சகுந்தலா ஒன்றுமே பேசவில்லை. ஏதோ சொல்லவந்த தன்னை ராஜா வேறு ஒரு பாதையில் தள்ளி விட்டதை உணர்ந்து கொண்டவளைப்போல் மவுனமாயிருந்தாள். ஆயினும் ராஜா சொல்லுவதில் உண்மை நிறைய உண்டு. மீண்டும் ராஜகோபால் நிதானமாக, 'பணக்காரர்கள் இந்த நாட்டில் சிலர். படித்தவர்களும் சிலர்தான். இவர்களில் ஒரு சிலர்தான் தேசசேவை செய்ய முன் வந்திருக்கிறார்கள். பாக்கி அத்தனை பேர்க்கும் சுகமுண்டாக்க முன் வந்திருக்கும் இந்த சில பேரில் 'சுயநலம்' வேறு போர்வையில் இருக்கிறது. ஆமாம்.' என்று சகுந்தலாவுக்கு விளக்கிச் சொன்னான் ராஜா. அவள் பதில் சொல்லாமல் என்னையும் அவனையும் மாறிமாறிப் பார்த்தாள்.

'இன்று அநேக கிராமவாசிகள், நகரத்திலுள்ள தொழிலாளர்கள் இப்படித்தான் நினைக்கிறார்கள் என்பது உனக்குத் தெரியுமா சகுந்தலா?' என்று அவன் கேட்டதும் அவள் தூங்கி விழித்தவளைப்போல் 'என்ன?' என்று வியப்புடன் கேட்டுவிட்டு மீண்டும் மவுனம் பூண்டாள்.

ராஜா புன்னகையுடன் என்னைப் பார்த்தான். நான் விவாதத்தை வேறு பாதையில் திருப்ப முனைந்தேன்.

'எனக்கு இவர்கள் பெரிய கெடுதல் ஒன்றும் செய்துவிட முடியாது ராஜா. அப்படிச் செய்தாலும் பரவாயில்லை. அதிகாரவர்க்கத்திடம் எவ்வளவோ பட்டிருக்கிறேன். ஆனால் என்னை முன்னிட்டு ஏழை எளியவர்களை ஒன்றும் செய்யாதிருக்க வேண்டும்' என்று நான் சொல்லிவிட்டு வயல் கரைப் பக்கம் திரும்பிப் பார்த்தேன். சாலையின் இரு மருங்கிலும் இருந்த பிரும்மாண்ட மரங்கள் நிலவை மறைத்து இருட் போர்வையிட்டிருந்தன. எங்கேயோ தொலைவில் அசைந்தாடிப் போய்க் கொண்டிருந்த ஒரு கட்டை வண்டியின் சத்தம் மட்டும் கேட்டது.

சகுந்தலா பரபரப்புடன் 'எனக்கென்னவோ நாணுஜி,

இந்த ஐந்தாறு நாளும் நல்ல போதாகவே போகவில்லே. சீக்கிரம் நகரத்துக்குப் போய்விட வேண்டும். அங்கே எல்லாரும் என்னுடையத் திடீர், மறைவு கண்டு வியப்படைந்திருப்பார்கள்.

'அண்டர் கிரௌண்டுன்னு நினைத்துக் கொள்ளட்டுமே!' என்று கிண்டல் செய்தான் ராஜா.

'யார் கண்டார்கள்' அப்படி மாறினலும் மாறவேண்டிவரும்!' என்று அவள் சொன்னதும் நான் சிரித்துக்கொண்டே 'நீங்களிருவரும் முதலில் கல்யாணம் செய்து கொண்டுவிடுங்கள். அப்போது பாதி விவாதம் குறைந்துவிடும். அப்புறம் ஒரேயடியாக எல்லாம் மாறிவிடும்,' என்றேன்.

என்னுடைய ஹாஸ்யம் இருவரையும் சிரிக்க வைத்தது.

அதேசமயம் இருளைக் கிழித்துக்கொண்டு ஒரு மோட்டார் சாலையிலே வருவது தெரிந்தது. ராஜா எழுந்து நின்று பார்த்தான். அந்தப் பிராந்தியத்தில் ஒரு கார் வரவேண்டுமென்ருல் அது மைனர் வீட்டுக்குத்தான் வரமுடியும். அது யாராயிருக்கக் கூடும்? கார் மெதுவாகத்தான் வந்தது. ஆனல் ராஜா அருகில் போய்ப் பார்க்க விரும்பவில்லே. சொல்லி வைத்தாற்போலக் கார் சாலேயில் சட்டென்று நின்றது. அதிலிருந்து இரண்டு மூன்றுபேர் இறங்குவது தெரிந்தது. இறங்கினவர்கள் நேராக இவர்களைத் தான் பார்த்து வந்தார்கள்.

லயங்கரையிலிருந்து நிதானமாக இறங்கினவர் ஒரு கிழவர். அவரைத் தொடர்ந்து ராஜபார்ட் கிராப்பும், சில்க் ஜிப்பாவும், டால் வீசும் வைரக்கடுக்கனும் அணிந்த ஒரு ஆசாமி. ஏதோ ஒரு சினிமா அல்லது நாடக நடிகராக்கும்! கிழவர் பார்ப்பதற்கு ஒருமாதிரியிருந்தார். அருகிலே வந்ததும் அவர் மேல் துண்டை எடுத்து இடுப்பில் சுற்றி ஒரு கும்பிடு போட்டார். நடிக ரூபக்காரரும் ஒரு கும்பிடு போட்டார். சகுந்தலா வியப்புடன் எல்லாரையும் மாறி மாறிப் பார்தாள்.

'ஏஜமானேப் பாத்தாவந்து... வந்து...கோடங்குடியார் முகஜாடை தெரியுது,' என்று குழைந்து குழைந்து பேசின அந்தக்கிழவனே அலட்சியமாகப் பார்த்தான் ராஜா. சகுந்தலாவுக்கு இந்தக்காட்சி வேடிக்கையாயிருந்தது.

'ஆமாம் ஆமாம். இவர்தான் மைனர் மூத்த மகன் ராஜா' என்று சொல்லிவிட்டு அவனே உற்றுப் பார்த்தாள். ராஜா அவளைக் கோபத்துடன் பார்த்துவிட்டுத் திரும்பினான். வந்த கிழவன் வியப்பும் மகிழ்ச்சியும் கலந்த தொனியில்,

'அப்படித்தான் நானும் நெனேச்சேன். பாக்கியந்தானுங்க. பெரிய அய்யா உத்தரவுப்படி அழைச்சிட்டு வந்துட்டேங்க,' என்று இன்னும் குழைவாகச் சொல்லிவிட்டு பிறகு இரைந்த குரலில் 'இந்தா சிங்காரம், வனஜாக்ஷியை இப்புடி அழைச்சிக்கிட்டு வா!' என்று உத்திரவிட்டான் நாடகக்காரன் 'ஜாக்கிரதையா அழைச்சிட்டுவாடா!' என்று பக்கப்பாட்டுப்பாடினன்.

நான் இதென்ன கூத்து? என்று எண்ணினபடி வந்தவர்களைப் பார்த்தேன். சகுந்தலா வாய்திறவாது வண்டியைப் பார்த்தாள். அன்ன நடைநடந்து வந்தாள் அழகு மடந்தை ஒருத்தி!

(தொடரும்)

வழி பிறந்தது

வி. சுலோசனு,

அதிகாலே நேரம். ஆற்றங்கரை ஆலமரத்திலே வசித்து வந்த பறவைகள் விழித்தெழுந்து குதூகலமாய்க் கூவிக்கொண்டிருந்தன. சில பக்ஷிகள் இரை தேடிப் புறப்பட்டுக்கொண்டிருந்தன; மரக்கிளேகளில் சில புள்ளினங்கள் உல்லாசமாக ஊசலாடிக் கொண்டிருந்தன.

அப்பொழுது, அருகிலுள்ள ஒரு மாமரத்தடியிலே அரிசி இறைந்து கிடப்பதைக் கண்ட பச்சைக்கிளி ஒன்று ஆவலுடன் பறந்து சென்றது. அங்கு வேடன் விரித்திருந்த வலே; அதன் கண்களுக்குத் தென்படவில்லே. பாவம்! அதில் சிக்கிக்கொண்டது. அதன் பரிதாபமான குரலேக் கேட்டும், அந்தவேடனின் மனம் இளகவில்லே; அதைப் பிடித்துக் கொண்டு சென்முன்.

அந்த ஊரிலே, மணிவண்ணன் என்ற ஒரு பிரபலமான வியாபாரி இருந்தான். வேடன் கையிலிருந்த பச்சைக்கிளி அவன் மனதைக் கவர்ந்தது. விலே கொடுத்து, அதை வாங்கிக் கொண்டு போனுன்.

மணிவண்ணன் அந்தப் பச்சைக்கிளிக்கு 'கண்ணம்மா' என்று செல்லப் பெயரிட்டான். கண்ணம்மாவின் பசுமையான மேனியும், பவளம்போன்ற வாயும், கொஞ்சும் மொழிகளும் யாவருடைய மனதையும் வசீகரித்தன! மணிவண்ணன் அதை ஒரு தங்கக் கூண்டிலே அடைத்தான்; வேளே தவருமல் அதற்குப் பாலும் பழமும் தன் கையாலேயே ஊட்டி வளர்த்தான்; அதன் மழலே மொழிகளேக் கேட்டு மனம் பூரித்தான்.

நாட்கள் சென்றன.

கண்ணம்மாவின் மேனியழகு நாளுக்குநாள் வாடி வதங்கிக் கொண்டு வந்தது. முன்பெல்லாம் அதன் நெஞ்சிலே பொங்கிவந்த உற்சாகம், இப்பொழுது வரண்டு விட்டது. உணவு செல்லவில்லே; உறக்கங் கொள்ளவில்லே. அடிக்கடி பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தது! நாளடைவில், அதன் உடலும் மெலிந்து விட்டது. காரணம் புரியாமல் மணிவண்ணன் விழித்தான்.

மணிவண்ணன் தன் தொழில் சம்பந்தமாக அடிக்கடி வெளியூருக்குப் பிரயாணம் போவது வழக்கம். தைப்பொங்கலுக்கு பத்துப் பதினேந்து நாள் இருக்கலாம். அவன் வெளியூருக்கு பிரயாணமானுன். புறப்படும் பொழுது, வீட்டிலுள்ளவர்களேக் கூப்பிட்டு, பொங்கல் புது நாளுக்கு என்ன வாங்கி வர வேண்டுமென்று விசாரித்தான். பெண்டுபிள்ளேகள் தத்தம் ஆசைகளேத் தெரிவித்தார்கள். மணிவண்ணன் எல்லாவற்றையும் வாங்கி வருவதாகக் கூறினுன்.

செல்லக்கிளி கண்ணம்மாவையும் அவன் மறக்கவில்லே. "கண்ணம்மா, உனக்கு என்ன வேண்டும்? ஏன் இப்படி முகம் வாடிப் போயிருக்கிறது?" என்று அன்புடன் விசாரித்தான்.

"எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லே; சாக விரும்புகிறேன். உதவி செய்வீர்களா?" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டது கண்ணம்மா. மணிவண்ணனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லே.

"கண்ணம்மா, இதென்ன இப்படிக் கூறிவிட்டாய்? உன்

குறையைச் சொல்லம்மா; அதைத் தீர்த்துவைக்கிறேன்!'' என்று மன்றாடினான் மணிவண்ணன்.

"என் குறை இன்னதென்று எனக்கே தெரியவில்லை. ஒரு வேளை, என் உறவினர்களுக்குத் தெரிந்திருக்கலாம். அவர்கள் இந்நகரை அடுத்த ஆற்றங்கரை ஆலமரத்தில் வசிக்கிறார்கள். அவர்களிடம் நான் இங்கே வாடி வதங்குவதைச் சொல்லி பரிகாரம் கேட்டுவாருங்கள். அவர்களுடைய க்ஷேமதத்தையும் அறிந்து வாருங்கள். அவ்வளவு தான் வேண்டும்'' என்றது கிளி. மணிவண்ணன் அவ்வாறே செய்வதாகக் கூறிவிட்டுப் புறப்பட்டான்.

மாலை நேரம். மஞ்சள் வெய்யிலில் காட்டாற்று வெள்ளம் பொன்னிறமாய் பிரகாசித்தது. ஆலமரக்கிளைகளிலே பச்சைக் கிளிகள் கோலாகாலமாய்க் கூவிக்கொண்டிருந்தன; இன்னும் சில பறவைகள் மரத்தைச் சுற்றி வந்து கும்மியடித்தன. இக்காட்சியைக் கண்டதும், மணிவண்ணனுக்குக் கண்ணம்மாவின் ஞாபகம வந்தது; உடனே வண்டியைவிட்டு இறங்கி,மரத்தடிக்குச்சென்றான்.

"வண்ணக்கிளிகளே, உங்கள் சகோதரி கண்ணம்மா, என் மாளிகையிலே தங்கக் கூட்டில் வசிக்கிறாள். வேளை தவறாமல் பாலும் பழமும் சாப்பிடுகிறாள். ஆயினும், அவளுடைய உடல் நாளுக்கு நாள் மெலிந்து வருகிறது. அதன் காரணம் உங்களில் யாருக்காவது தெரியுமா?'' என்று பறவைகளிடம் கேட்டான் மணிவண்ணன்.

பறவைகள் பேச்சு மூச்சுக் காட்டாமல் உட்கார்ந்திருந்தன. அவற்றில் ஒரு கிழக்கிளி மட்டும் உடல் பதறி, கிளையிலிருந்து கீழே விழுந்துவிட்டது. பின்னர், அது எழுந்திருக்கவே இல்லை. கிழப்பறவை இறந்து விட்டதைக் கண்டு, மணிவண்ணன் மிக்க துயரமடைந்தான்.

பொழுது விடிந்தால் பொங்கல். வெளியூர் வேலையை முடித்துக்கொண்டு மணிவண்ணன் ஊருக்குத் திரும்பினான். குழந்தைகள் ஆவலோடு தத்தம் சாமான்களை வாங்கிக்கொண்டனர். அவர்களுடைய உற்சாகத்தையும் விளையாட்டையும் பார்த்துக்கொண்டே மணிவண்ணன் மகிழ்ந்திருந்தான். இந்தக் களேபரத்தில், அவன் கண்ணம்மாவை மறந்துபோனான்! கண்ணம்மாவின் குரல் கேட்ட பின்னர்தான் அவனுக்கு நினைவு வந்தது.

"கண்ணம்மா, இங்கிருந்து போகும்போதே, உன் உறவினர்களைக் கண்டு விசாரித்தேன். உன் துன்பத்தைக் கேட்டு எல்லாப் பறவைகளும் மௌனமாகக் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தன. ஆனால், ஒரு கிழக்கிளி மட்டும் ஓவென்று அலறிக்கொண்டே கீழே விழுந்து, என் காலடியில் உயிரை விட்டது. நான் வருத்தம் தாங்காமல் புலம்பினேன். அதனிடம் ஏன் சொல்லப் போனேம் என்றுகூட அங்கலாய்த்தேன். பாவம்! அந்தக் கிழக்கிளி உனக்கு என்ன உறவு, கண்ணம்மா?'' என்று பரிவோடு விசாரிக்கும் போதே, கூண்டுக்கிளி ஐயோவென்று அலறிக்கொண்வட சுருண்டு விழுந்தது.

பின்னர், பேச்சு மூச்சு இல்லை. மணிவண்ணனுக்குத துக்கம் நெஞ்சை அடைத்தது. வெகு

நேரம் மிகுந்த துயரத்துடன் கூண்டுக்கு அருகிலேயே உட்கார்ந்திருந்தான்; அவன் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாக வடிந்தது.

கடைசியில், மணிவண்ணன் ஒருவாறு மனம் தேறி எழுந்தான். கூட்டைத் திறந்து, கிளியை எடுத்து, தோட்டத்திலுள்ள ஒரு பூந்தொட்டியில் போட்டுவிட்டு வந்தான். திடீரென்று 'க்ரீச்' என்று கிளியின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! அருகேயிருந்த ஒரு மரக்கிளையில் உட்கார்ந்து, கண்ணம்மா ஊசலாடிக்கொண்டே மணிவண்ணனை நோக்கிக் கண் சிமிட்டிச் சிரித்துக்கொண்டிருந்தது!

மணிவண்ணன் அப்படியே பிரமித்துப் போனான். வெகு நேரம் வரையில் பேசுவதற்கு வாயெழவில்லை. "கண்ணம்மா, என்னிடம் ஏன் பாசாங்கு செய்தாய்; நீ இறந்துவிட்டதாக எண்ணிப் புலம்பவைத்தாயே. வா, பாலும் பழமும் சாப்பிடலாம்" என்று அழைத்தான் மணிவண்ணன்.

"அப்பா, என்னிடம் கொஞ்சிக் கொஞ்சி, இதுகாறும் சிறையில் வைததிருந்தது போதாதா? அந்தக் கிழக்கிளி இறக்கவில்லை; என்னைப்போல அதுவும் உயிரோடுதான் இருக்க வேண்டும. நான் சுதந்திர தாகத்தினல்தான் வாடினேன் என்பது அதற்குத் தெரியும். நான் சிறையிலிருந்து வெளியே வருவதற்கு வேண்டிய உபாயத்தைத்தான், அதுசொல்லியனுப்பிற்று! வார்த்தையினல் சொன்னுல், உனக்கு விளங்கிவிடுமே என்று எண்ணி, ஜாடையில் காட்டியது. இந்த விடுதலைக்காக எவ்வளவு காலம் நான் வாடினேன்?" என்றது கிளி.

"கண்ணம்மா, பாலும் சோறும் ஊட்டி வளர்த்த நன்றியை மறந்து, என்னைத் தனியே விடுச் செல்வது நியாயமா?" என்று வாதாடினன் மணிவண்ணன்.

"அப்பா, அந்த நன்றியை நான் ஒருகணமும் மறவேன். ஆனல், என் பசிக்கு உன் கையை எதிர் பார்க்கவேண்டியிருந்தது. அந்த அடிமை வாழ்வில், அமுதமே புசித்தாலும், அது ருசிக்குமா? நான் தங்கியிருந்தது ஒரு தங்கக் கூடுதான்; ஆனல் வானவெளியிலே யதேச்சையாக சிறகடித்துப் பறந்து திரிவதுபோல் ஆகுமா? இன்று தை பிறந்தது; எனக்கு வழியும் பிறந்தது! எனக்கு விடுதலை கிடைத்தது. நான் போய் வருகிறேன்," என்று கூவிக்கொண்டே பச்சைக்கிளி பறந்து போயிற்று.

விடுதலை பெற்றுவந்த பச்சைக் கிளியை ஆலமரத்துக் கிளிகளெல்லாம் வரவேற்றன. கிழக்கிளி அதை அன்புடன் தழுவிக்கொண்டது. அக்கம் பக்கத்து மரங்களில் வசித்துவந்த பக்ஷிகளும் பச்சைக் கிளிக்கு வாழ்த்துச் செய்திகள் அனுப்பி வைத்தன. அந்த ஆலமரம் கலகலவென்று இலைகள் குலுங்கச் சிரித்தது!

அதிசயப் பிறவி

மங்களா த்ரிமணி

ராமநாதன் ஒரு பெரிய வியாபாரி. அவரிடம் எல்லோருக்கும் நன்மதிப்புண்டு. அவர் எல்லோரிடமும் மிக மரியாதையாகவே பேசுவார். அவரை அவமரியாதையாகப் பேசக்கூட ஒருவருக்கும் நா எழாது,

ஒருநாள் ஆபீஸில் அவர் திரும்பும் நாற்காலியில் அமர்ந்து யோசித்துக்கொண்டிருந்தார்.

"இந்த உலகில் என்னை எல்லோரும் கௌரவிக்கிறார்கள். ஆனால் எல்லாவற்றையும்விட என் மக்களின் நன் மதிப்பு மாத்திரம் எனக்குக் கிடைக்குமானால் என்னைவிட பாக்கியசாலி ஒருவரும் இருக்க முடியாது'' என்று நினைத்தார்.

அன்று அவர் வீடு சென்றதும் அவர் குழந்தைகளும் மனைவியும் அவர் நடத்தையில் பெரிய மாறுதலைக் கவனித்தனர். அவர் தமது வாடிக்கைக்காரர்களிடம் எவ்வளவு மரியாதையோடு புழங்கினாரோ அதே மரியாதையைத் தமது மக்களிடமும் மனைவியிடமும் காட்டினார். இது அவர்களுக்குப் புதுமையாயிருந்தது. ஆனால் அவர் முகக்குறியில் ஏனமோ அருவையோ இல்லாதிருக்கவே அவர்கள் வெகு சீக்கிரத்தில் அவரிடம் பெருந்தன்மையோடு நடக்க ஆரம்பித்துவிட்டனர்.

காரியாலயத்திலேயே பொறுமையை எல்லாம் செலவழித்துவிட்டு வீடு சேர்ந்ததும், "ஏ, சனியன்களா, அரை நிமிஷம் வாயை மூடிக்கொண்டிருக்கப்படாது?'' என்றோ "என்னை நச்சிப் பிடுங்காதீர்கள்!'' என்றோ பேசிக்கொண்டிருந்தவர், "மீனு தயவு செய்து கிருஷ்ணன் பேசி முடித்த பின் உன் பள்ளிக்கூட விஷயத்தைச் சொல்லும்மா. இரண்டு பேரும் ஒரே சமயத்தில் பேசினால் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை'' என்று அதிக நிதானமாகச் சொன்னார்.

முன்பெல்லாம் குழந்தைகளின் பொழுது போக்கு அவருக்கு அவ்வளவு முக்கியமாகத் தோன்றியதில்லை. சினிமாவுக்குப் போவதாயிருந்தால் அந்தப் படம் தமக்குப் பிடித்திருக்குமா என்று மாத்திரம் யோசிப்பாரே தவிர அந்த இரண்டு மணி நேரமும் தமது குழந்தைகள் என்ன செய்து கொண்டிருக்கக்கூடும் என யோசித்தவரே அன்று. ஒரு முறை வர்த்தக சங்க ஆண்டு விழாவில் ஒரு பெரியவர் மூன்று மணிநேரம் பிரசங்கித்துக்கொண்டிருந்ததைத் தாம் ரசித்த போது தமது குழந்தைகள் ஏன் சச்சரவு செய்து கொண்டிருந்தார்கள் என்று அவர் நினைத்துக்கூட பார்க்கவில்லை. இப்பொழுது குழந்தைகள் தான் அவர் முதல் கவலை. "டைகர் கச்சேரி நிரம்ப நன்றாய்த்தானிருக்கும். ஆனால் கிருஷ்ணனும் மீனுவும் அதை ரஸிக்க முடியாதல்லவா?'' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு சங்கீதக் கச்சேரி சீட்டை நண்பருக்கனுப்பி விட்டு

குழந்தைகளோடு பேச்சுக்குப் புறப்பட்டுவிடுவார். இதிலிருந்து அவர் அடையும் ஆனந்தம் பல ஆயிரம் பாட்டுக் கச்சேரிகளுக்குச் சமம் என்று அவரே சொல்கிறார். ஆகையால் அவர் ஏதோ பெரிய தியாகம் செய்துவிட்டதாக எண்ண வேண்டாம்.

ஒரு மாதத்திற்கு முன்னால் யாராவது ராமநாதன் குழந்தைகளுடன் மிருகக் காட்சி சாலைக்குப்போய் அங்கிருந்து படகில் ஒரு மணி நேரம் சுற்றிக்கொண்டிருந்தார் என்று சொன்னால் அவர் எவரையோ ராமநாதன் என்று நினைத்துக்கொண்டு பிதற்றுகிறார் என்று சொல்வேன். ஆனால் இப்பொழுது லட்ச ரூபாய் வியாபாரத்திற்குச் சமமாகவே அவர் தமது குழந்தைகளுடன் கழிக்கும் காலத்தைக் கருதுகிறார் என்றால் அது மிகையாகாது.

"எனக்கு இதிலுள்ள இன்பம் வேறெதிலுமில்லை. எனக்குக் களைப்பு தோன்றுவதே யில்லை. இந்தப் புது இன்பம் எனக்கு ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் அளிக்கிறது." என்றார் ஸ்ரீ ராமநாதன்.

"இப்படி நீங்கள் நடப்பதால் உங்கள் குழந்தைகளுக்கு உங்களிடம் பயம் தெளிந்துபோய்விடவில்லையா? என்று கேட்டேன்.

"பயமா? குழந்தைகள் என்னைக் கண்டு ஏன் பயப்பட வேண்டும். நான் என்ன பூச்சாண்டியா? இப்பொழுது என் குழந்தைகள் எப்பொழுதும் என் சந்தோஷத்தையே பிரதானமாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். நானும் அப்படியேதான் அவர்களுக்கு எது சந்தோஷமளிக்குமோ அதுவேதான் எனக்கும் திருப்தியையும் சந்தோஷத்தையும் கொடுக்கும்.

கோபிகள் எப்பொழுதும் ராதைக்கும் கிருஷ்ணனுக்கும் சந்தோஷமானதையே செய்ய முனைந்துகொண்டிருப்பார்கள். அந்த பாவத்தை ஒவ்வொரு தகப்பனும் தன் குழந்தைகளிடம் அனுஷ்டிக்க வேண்டும்" என்றார்.

✲

மந்திரியே திகைத்துப்போனார்!

சமீபத்தில் லண்டனில் நடைபெற்ற இளம் ஸ்திரிகள் கிருஸ்துவ சங்கத்தின் மகா நாட்டில் — சுமார் 300 ஸ்திரிகளிக்கிடையே — பிரிட்டிஷ் கல்வி மந்திரியான ஜார்ஜ் டாம்லின்ஸன் நீண்ட நேரம் பிரசங்கம் செய்த பின் சபையோர் தன்னிடம் ஏதாவது கேள்விகள் கேட்க விரும்புகின்றனரா என்று கேட்டார். கூட்டத்தில் அமைதி குடிகொண்டிருந்தது. ஒரு ஸ்திரிகூட எழுந்திருக்கவில்லை. டாம்லின்ஸன் ஆசனத்திலிருந்து குதித்துக்கொண்டே எழுந்து, "இது உண்மையிலேயே ஒரு வெற்றிதான்; ஏனெனில் என்னுடைய வாழ்நாளில் இதுவரை இவ்வளவு அதிகமான ஸ்திரிகள் ஒரே சமயத்தில் பேசாமடந்தைகளானதை இன்றுதான் கண்டேன்!" என்று கூறினார்.

Printed and Published by Vai. Govindan at Shakti Press Ltd, (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras, 14. Editor: S. VISALAKSHI.

197650